
# மண்

இதழ் 211

ஜேர்மனி / 2022

தை - மாசி / Jan - Feb















வாழும்பொழுதே வாழ்த்தப்படும் மூத்த முற்போக்கு எழுத்தாளர்
சாகித்திய ரத்னா தெணியான் 80 வது அகவை (06.01.2022)
வாழ்த்துகள் க.நடேசன் (தெணியான்) 06.01.1942








''மண்'' சஞ்சிகையின் வாசகர் திருமதி யோபினா-நிசாந் அவர்களின் பிறந்தநாள் (29.11.2021) அன்று அவர்களின் நிதி உதவியில் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயிலுள்ள ஒளிரும் இல்லத்தின் சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு சிற்றுண்டி, மதிய உணவு, பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## 33வது ஆண்டில் காலடி பதிக்கும் "மண்" சஞ்சிகை...

1990 தை மாதம் 14ம் திகதியான தைப்பொங்கல் தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகை 2022 தை மாதம் 14ம் திகதி முப்பத்திரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து முப்பத்தி மூன்றாவது ஆண்டில் காலடி பதித்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்...

கடந்துவந்த பாதைகள் கரடு முரடானதுதான். வேலைப்பழு, நேரம் இன்மை, குடும்பப்பாரம், பணச்செலவு எனப்பல இன்னல்களை எதிர்கொண்டு இவ்வளவு காலமும் தமிழ், கல்வி, கலை, கலாச்சாரம், அரசியல், சமூகம் என நம் மக்களின் முன்னேற்றத்திற்கும் சமூக மாற்றத்திற்கும் எம்மாலான சஞ்சிகைப் பணிகளை மேற்கொண்டிருந்தோம்...

மேலாக தாயகத்தின் துயர்போக்க அகதிகள், வலுவிழந்தோர், ஆதரவற்ற சிறுவர்கள், முதியோர்கள் என்போருக்கும் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவுவதற்கு வாசகர்களாகிய உங்களின் மாபெரும் நிதி உதவிகளால் பெரும் பணிகளைச் செய்திருக்கிறோம். இப்பணிகள் தொடர உங்கள் ஆதரவுக்கரங்களைப் பற்றி நிற்கின்றோம். இவ்வளவு காலமும் நிதி உதவிகளை அள்ளி வழங்கிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சிரம்தாழ்த்தி நன்றிகூறுகின்றோம்...

மண் சஞ்சிகையின் வாசகர்கள் இல்லையேல் இச்சஞ்சிகை இவ்வளவு காலமும் நீண்டு நிலைக்க முடியாது. வாசகப் பெருமக்கள் கொண்ட அன்பு, நம்பிக்கை, ஆதரவு இருந்தபடியால்தான் இப்பயணத்தைத் தொடரக்கூடியதாக இருந்தது. அடுத்து பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள், இளையோர்கள்,எழுத்தாளர்கள் தாமும் பயன் பெற்று வாசகர்களையும் மகிழ்வித்தார்கள். பல வித ஆக்கங்களைப் படைத்து புதிய நல்ல சமுதாய சிந்தனையுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இன்றுவரை எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். எழுத்தாளப் பெருமக்களுக்கும் பேரன்பு நிறைந்த வாழ்த்துக்கள்..

எதிர்காலத்திலும் தமிழ் இலக்கிய, கல்விப் பணிகளுடன் தாயகத்திற்கான மனிதநேயப் பணிகள் தொடரும் என நம்புகின்றோம். உங்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகலந்த பாராட்டுக்கள். அன்பு வணக்கம் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துகள்!..

-ஆசிரியர்-

## நீண்ட துயர்மிக்க உலகம்!..

இன்றைய உலகம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. உக்கிரைன் நாடு மீது ரஷ்ஷியா படை எடுக்கும் என அஞ்சி நேட்டோ நாடுகளின் படைகள் , அமெரிக்கா போன்ற நாடுகள் எதிர்த்தாக்குதல் நடாத்த ஆயத்தமாகி வருவதாக உலகம் பார்க்கின்றது. போர் மூண்டால் உலகம் இன்னும்...இன்னும் லட்சக்கணக்கான உயிரிழப்புக்களை சந்திக்க நேரிடும்..

ஏற்கனவே கொரோனா கோவிட்-19 பேரலையால் உலகம் பல லட்சம் உயிர்களை இழந்துவிட, புதிய வைரஸ்தாக்கமாம் ஒமிக்ரோன் கிருமித்தாக்குதல் உலகம் முழுவதும் பரவிப் மக்களைப் பலி எடுத்து வருகின்றது. இதனால் பசி, பட்டினி, வறுமை, பொருளாதார இழப்பு, வேலை இல்லாப் பிரச்சனை,விலை ஏற்றம், சுற்றுச்சூழல் பாதிப்பு, போர் அனர்த்தங்கள் என பட்டியல் நீண்டு வளர்ந்துகொண்டு செல்ல, உலகக் கோடீஸ்வரர்கள் மற்றும் மருந்துக் கம்பனிகளின் எண்ணிக்கையும் அவர்களின் வருமானங்களும் இரட்டிப்பாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதுதான் இன்றைய உலகம்..முதலில் நாம் பாதுகாப்பாக வாழ வேண்டும். பிறரையும் பாதுகாக்க வேண்டும். இதுதான் இன்றைய நமது அதி முக்கிய பொறுப்பாகும். உலக கொரோனாத்தொற்று ஆரம்பித்து இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் 31.01.2022 அன்றுவரை உலக நிலவரத்தையும் முன்னணியிலுள்ள பத்து நாடுகளின் விபரங்களையும் பார்ப்போம்!..

| நாடுகள் | - தொற்று | - இறப்பு |
|---|---|---|
| 1- United States | 76,283,700 | 911,729 |
| 2- India | 41,469,499 | 496,268 |
| 3- Brazil | 25,454,105 | 627,365 |
| 4- France | 19,140,730 | 130,931 |
| 5- United Kingdom | 17,428,345 | 155,973 |
| 6- Russia | 11,986,913 | 332,012 |
| 7- Turkey | 11,619,882 | 87,416 |
| 8- Italy | 11,116,422 | 146,925 |
| 9- Spain | 10,039,126 | 93,633 |
| 10-Germany | 9,972,594 | 118,617 |
| உலகம் | 37 80 00.000 | 56.70.000 |
| சிறீலங்கா | 6.11.000 | 15.441 |

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி....

### எண் எழுத்து இகழேல்..

எண் என்றால் கணிதம், கணக்கு. எழுத்து என்றால் இலக்கணம். கணக்கும் இலக்கணமும் கற்பதற்குக் கடினமானவை. கடினம் என்று நினைத்து அவற்றைக் கற்காமல் இருக்கக்கூடாது. வெறுத்து ஒதுக்கவும் கூடாது. ஏன் தெரியுமா?.. கணக்கும் இலக்கணமும் இரண்டு கண்களைப் போன்றவை. கண்கள் இல்லாவிடின் உன் வாழ்க்கை வளம் பெறாது அதேபோல கணக்கும் இலக்கணமும் இல்லாதுவிடின் உன் கல்வி அறிவும் வளம்பெறாது. அவற்றை நன்கு கற்றால்தான் உன் அறிவு பெருகும். திறமை பெருகும். பிரபல விஞ்ஞானிகளும் அறிவாளிகளும் உலகம் புகழும் செயல்களைச் செய்தது எதனால்?.. கணிதத்தையும் இலக்கணத்தையும் அவர்கள் கற்றதினால்தான். ஆகவே கண் எனத் தகும் எண்ணையும் எழுத்தையும் இகழாமல் நன்கு கற்றுக்கொள் என ஔவைப் பாட்டி சொல்கிறார்.

### ஏற்பது இகழ்ச்சி..

நீதி நூல்கள் எளிமையானது. ஆத்திசூடி ஒரு வாக்கியத்தில் உலக மக்கள் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய நீதிகளைக்கூறும் நூல். ஆத்திசூடியில்வரும் இரண்டு நீதிகள் மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றுக்கொன்று முரண்பட்டது போன்று தெரியும். அதை வைத்துக் கேலியாகக்கூடச் சிலர் பேசுவார்கள். ஏற்பது இகழ்ச்சி என்பது ஒரு நீதி வாக்கியம். பிறரிடம் எதையும் யாசிப்பது இழிவான செயல் என்று இதற்குள் பொருள். ஆனால் இதே ஔவைப்பாட்டி "அறஞ்செய்ய விரும்பு" என்கிறார்.. ஏழை எளியவர்களுக்குத் தர்மம் செய் என்கின்றார். அப்படியானால் எழை எளியவர்கள் ஏற்பது இகழ்ச்சியான செயலா?.. இப்படி முரணான நீதியைத் தமிழ்ப்பாட்டி போதிப்பாரா?.. மாட்டார்.

# தமிழ் மொழியின் பெருமை!..

" தமிழுக்கு அமுது என்று பேர் - அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடினார் பாரதிதாசன். அமுதம் என்றால் அது கிடைக்காததொன்று. அந்த அமுதத்தை எடுக்கத்தான் அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்த ஒரு கதை இருக்கின்றது என்றால் தமிழ்மொழியின் பெருமையை நாம் சொல்லவும் வேண்டுமா?..அத்துடன் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் ஒரே இனத்தால், ஒரே மொழியால் தொடர்ந்து ஆளப்பெற்றுவந்த நாடு தமிழ்நாடு என்பதே நம் தாய் மொழியான தமிழ்மொழியின் தொன்மையும் பெருமையும் பறைசாற்றி நிற்கின்றது.

காலத்தால் அளவிடமுடியாத தொன்மை வாய்ந்ததாய் இயல், இசை, நாடகம் எனும் மூன்று பிரிவுகளாக வளர்ந்து, பல்வேறு வரிவடிவங்களைப் பெற்று, தெலுங்கு, மலையாளம், கன்னடம் எனும் மொழிகளை உருவாக்கி இன்று"செம்மொழி" என்னும் அடைமொழி பெற்று வளர்ந்துகொண்டிருக்கின்றது. தொன்மை ,தனித்தன்மை, கலை, பண்பாடு,நடுவுநிலை, தாய்மைத்தன்மை,பட்டறிவுவெளிப்பாடு இதுபோன்ற பதினொரு தகுதிகளும் முழுமையாகப் பெற்று "செம்மொழி" எனப்போற்றப்படும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பெற்ற ஒவ்வொரு தமிழரும் பெருமைகொள்ள வேண்டும்.இத்தகைய பெருமைகொண்ட மொழியை சான்றோர்கள், அறிஞர்கள், மேலைநாட்டவர்கள் எனப் பலரும் பலவாறு போற்றியுள்ளனர்..

தமிழ்மொழி பல பெருமைகள் கொண்டது நம் மொழி. உலகிலேயே பெயரைக்கொண்டே மொழியின் தன்மையை அறியும் பெயர் வேறு எந்த மொழிக்கும் கிடையாது. அத்தோடு இணையத்தில் முதல் அடி எடுத்து வைத்த முதல் இந்திய மொழியும் தமிழ்தான். தமிழிலே வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று இனங்கள் உண்டு. நம் தாய் மொழியான தமிழில் மொழியை அடையாளமாகக்கொண்டு பெயர் சூட்டலாம் தமிழினி, தமிழ்ச்செல்வன் என்றெல்லாம் பெயர்சூட்டலாம் ஆனால் பிற மொழிகளில் அப்படி இல்லை. இவை மட்டுமல்ல தமிழிலே வேறு எந்த மொழியிலும் இல்லாத மனித உறவுமுறை போற்றப்படுகின்றது.

இவ்வாறு பழமை வாய்ந்த புலவர்கள் அறிஞர்கள் மட்டுமல்ல இன்றை அறிஞர்களாலும் போற்றப்படுவதும் உலகின் பல மொழிகளில் கோலோச்சியும் வருகின்றது நம் தமிழ்மொழி. இவ்வாறான பல பெருமைகள் கொண்டு விளங்கும் தமிழின் பெருமையை நாமும் உணர்வோம். தமிழனாய் பிறந்ததற்குப் பெருமைகொள்வோம். எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு தொண்டு செய்வோம்!..தமிழை எந்நாளும் போற்றிவளர்ப்போம்!..

**செல்வி பவித்திரா பிரபாகரன்**
**எசன் - யேர்மனி**

**(யேர்மனி-எசன் நகர தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம் தமிழ்ப்பாடசாலை ஆண்டுவிழாவில் மாணவர் ஒருவரால் பேச்சுப்போட்டியில் பேசிய விடையம் இது)**

# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



## வைத்திய செலவு

ஒரு சமயம் தெனாலிராமனுக்கு உடல் நலம் மோசமாகி விட்டது. வைத்தியரும் வந்து பார்த்தார். வைத்திய செலவு நிறைய ஆகும் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

வைத்திய செலவுக்கு தெனாலிராமனிடம் பணம் இல்லை. ஆகையால் அவ்வூரில் வட்டிக்கொடுக்கும் சேட்டை அணுகினான். அதற்கு சேட்டும் "பணத்தை எப்போது திருப்பிக்கொடுப்பாய்" என்று கேட்டார்.

தெனாலிராமனும் உயர் ஜாதி அரேபியக் குதிரை வைத்திருந்தான். நல்ல விலை போகும் அதனால் உடல் நலம் தேறியதும் குதிரையை விற்றுப் பணம் தருவதாகச் சொன்னான். அவன் சொன்னதின் பேரில் சேட்டும் நம்பிக்கையோடு பணம் கொடுத்தான்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட தெனாலிராமன் வைத்தியரிடம் சென்று சிகிச்சையை ஆரம்பித்தான். விரைவில் குணமும் அடைந்தான்.

பல மாதங்கள் ஆயின. தெனாலிராமனிடமிருந்து பணம் வருவதாகத் தெரியவில்லை. ஆகையால் சேட் தெனாலிராமனை சந்திக்கப் புறப்பட்டான்.

தெனாலிராமனைப் பார்த்து என்னப்பா, உடல் குணமானதும் குதிரையை விற்றுப்பணம் தருவதாக சொன்னாயே. இன்னும் தரவில்லையே உடனே கொடு என்றான். தெனாலிராமனும் நன்கு யோசித்தான். அநியாய வட்டி வாங்கு சேட்டுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினான்.

"சரி குதிரையை விற்றுப் பணம் தருகிறேன். என்னுடன் நீயும் வா" என்று அவனையும் அழைத்துக் கொண்டு பக்கத்து ஊரில் நடக்கும் சந்தைக்குப் புறப்பட்டனர். போகும் போது குதிரையையும் கூடவே ஒரு பூனையையும் அழைத்துச் சென்றான்.

சந்தையில் தெனாலிராமனின் பளபளப்பான குதிரையைப் பார்க்க பெரிய கூட்டமே கூடி விட்டது. அப்போது ஒரு பணக்காரன் தெனாலிராமனைப் பார்த்து "உன் குதிரை என்ன விலை" என்று கேட்டான்

அதற்கு தெனாலிராமனோ "குதிரையின் விலை 1 பவுன்தான். இந்த பூனையின் விலையோ 500 பவுன். ஆனால் இந்த பூனையையும் சேர்த்து வாங்கினால்தான் இக்குதிரையைக் கொடுப்போன்" என்றான்.

தெனாலிராமனின் பேச்சு அவனுக்கு விநோதமாக இருந்தாலும் குதிரையை வாங்க வேண்டும் என்ற மிகுந்த ஆவலில் 501 பவுன் கொடுத்து குதிரையையும் பூனையையும் வாங்கிச் சென்றான்.

பின் சேட்டிடம் ஒரு பவுணை மட்டும் கொடுத்தான். ஆனால் ஒரு பவுணை சேட் வாங்க மறுத்து விட்டான். "குதிரை அதிக விலைக்குப் போகுமென்று நினைத்து தானே உனக்குப் பணம் கொடுத்தேன். நீ இப்படி ஏமாற்றுகிறாயே" என்றான்.

அதற்கு தெனாலிராமன் "ஐயா சேட்டே குதிரையை விற்றுத்தான் உமக்குப்பணம் தருகிறேன் என்று சொனனேன். அதன்படியே குதிரையை 1 பவுணுக்கு விற்று அந்த 1 பவுணையும் உனக்கே கொடுத்து விட்டன். நீ வாங்க மாட்டேன் என்கிறாயே!.. இது என்ன நியாயம்?.. என்றான்.

சேட்டோ 500 பவுன் வேண்டுமென்றான். இறுதியில் இவர்கள் வழக்கு மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் சென்றது.மன்னர் இவ்வழக்கை ஆதியோடு அந்தமாக விசாரித்தார். பின் தெனாலிராமன் செய்தது சரியே என்று தீர்ப்புக் கூறினார்!..



# தாய் அன்பு!..

ஒரு தாய் அழுகிறாள் தனது மகன் தொலைந்துவிட்டான்
என்றும் எங்கு சென்றனோ ஒன்றும் தெரியாது அழுகிறார்
கடைசியாக ஒருவர் சொல்கிறார் உனது மகன்
தப்புச் செய்து தூக்குத்தண்டனை அளித்திருக்கிறார்கள்
உடனே பதை பதைப்புடன் மகனைத்தேடிச் செல்கிறார்
உனது மகன் தப்பு செய்ததால் தூக்குத்தண்டனை எனப் பதில்
உடனே மகனைத் தேடிப்பதை பதைப்புடன் ஓடுகின்றாள்
அங்கு மகன் தூக்கில் தொங்க முன் தாயின் தாலாட்டையே கேட்கிறான்
தாய்க்கு கண்கள் கூடத் தெரியாது தாய் வந்து பாடுகின்றாள்
கண்களில் கண்ணீர் வெள்ளம் பாய்ந்து ஓடுகின்றது
கண்ணும் இல்லை மண்ணும் இல்லை கருவிலே பிறந்த
பிள்ளை தூக்கில தொங்கு முன்னே தாலாட்டுப் பாடிடவா
நான் வந்தேன்..ஆராரோ ஆரிரரோ ஆராரோ..ஆரிரரோ
உத்தமனாய் பிறந்ததால உனக்கிந்த நிலைமையடா
பாருங்கள் தனது மகன் தப்பு செய்திருந்தும் பாசத்தைப் பொழிகிறாள்
இதுதான் உண்மையான தாய்ப்பாசம்!..

கருவிலே எனைச் சுமந்தாய் அம்மா இப்போது நான்
உன்னைவிட்டுப் போகப் போகின்றேன் - உன் கண்களில்
இரத்தம் ஆறாக வழிகின்றது உன் கண்களில் தாய்ப்பாசம்
தெரிகிறது அம்மா.. அம்மா நான் உன் கைகளால்
சோறுாட்டி வளர்க்கப்பட்டவன் இப்போது நான் உன்னை
விட்டுப் பிரிந்தால் எனக்கு யார் அம்மா சோறு ஊட்டிவிடுவர்
யார்மேல் தாய்ப் பாசத்தைப் பொழிவேன் அம்மா
என் அருமைத் தாயே என் கடைசி மூச்சுப் போகும் போது
இந்த உயிர் உனக்குச் சொந்தம் நான் உன்னைப்
பிரிந்து சென்றதும் என்னை மறந்து விடுவாயா
இல்லை எனது அம்மா நான் இல்லை என்றால்
அவர் இல்லை.. அவர் இல்லை என்றால் நான் இல்லை
என் அருமைத் தாயே நீ எங்கிருந்தாலும் வாழ்க!..

செல்வன் கு லோகதர்சன் (தரம்-8)
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை - மட்டக்களப்பு

# நான் விரும்பும் பெரியார்....

நான் போற்றும் பெரியார் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள். இவர் ஆறுமுகநாவலரின் மாணவர் பரம்பரையில் வந்தவர். சைவத்திற்கும் தமிழுக்கும் இப்பெரியார் ஆற்றிய தொண்டுகள் ஈழத்தவராகிய எம்மால் என்றும் நன்றியுடன் நினைவிற் கொள்ள வேண்டியவையே.

பண்டிதமணி 1899ஆம் ஆண்டு ஆனிச்சதயநாளில்15.06-1899 சின்னத்தம்பி என்பாரின் புதல்வராய் தோன்றினார். அவர் பிறந்த ஊர் தென்மராட்சியைச் சேர்ந்த தனங்கிளப்பு. கிறிஸ்த்தவ பாடசாலை ஒன்றிலே ஐந்தாம் வகுப்புவரை கற்றபின் பத்தொன்பது வயதுவரை கல்வியில் நாட்டம் கொள்ளவில்லை.

பண்டிதமணியின் நல் விருத்தியும் சைவத்தமிழராகிய நமது தற்போது அவரின் இரண்டாம் கட்டக் கல்விக்கு வாய்ப்பளித்தன. வண்ணார்பண்ணையில் நாவலர் வைசப்பிரகாச வித்தியாசாலையில் காவிய வகுப்பு 1917ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொடக்கியவர் பாடசாலை முகாமையாளரான ஸ்ரீமத் த.கையாசபிள்ளை. இவர் நாவலரின் தமையனாரின் மகன். இவரிடமும் பேரறிஞரான சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடமும் 1922ஆம் ஆண்டுவரை பண்டிதமணி தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பரீட்சையிலும் தேறினார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் பயின்று ஆசிரியரானார்.

பண்டிதமணியின் அறிவாற்றல்களை உணர்ந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் தமது சைவாசிரிய கலாசாலையில் அவரை விரிவுரையாளராய் நியமித்தனர். திருநெல் வேலியில் இருந்த அக்கலாசாலைக்கு ஆயிரக்கணக்கான தமிழாசிரியர்களைத் தமிழறிஞர்களாயும் வைசமரபு உணர்ந்தோர்களாகவும் உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

ஆரம்ப காலத்தில் பண்டிதமணி சிறந்த இலக்கியப் பேச்சாளராய் விளங்கினார். பின்பு சைவ சமல உண்மைகளை அறிவதிலும் ஆராய்வதிலுமே அவரின் மனம் பெரிதும் ஈடுபட்டது. இலக்கிய், சைவசமயம் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரைகள் மிகப்பலவாகும். அவை நூல்களாகவும் வெளிவந்தன. இலக்கியவழி, வைச சிந்தனை, பாரத நவமணிகள், சிந்தனைக் களஞ்சியம், கந்தபுராணப் போதனை, சமயக்கட்டுரைகள் என்பன அவரின் நூல்களில் சிலவாகும். கந்தபுராணம் தஷ காண்டத்திற்குப் பண்டிதமணி எழுதிய உரை அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

நாவலர் வளர்த்த சைவ மரபிற்கு அன்று பண்டிதமணி அவர்கள் காவலராய் விளங்கினார். அவரின் பெருமையைப் போற்றி 198ம் ஆண்டு இலங்கைப்

பல்கலைக்கழகம் அவருக்கு "இலக்கிய கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கியது. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பண்டிதமணிப் பட்டமும் அறிஞர்களால் வழங்கப்பட்டது. பண்டிதமணி சைவத்தை உயிராகப் போற்றியவர். சைவ ஆசான்களைப் பேணி வாழ்வில் கடைப்பிடித்து வந்தவர். சிறந்த அறிவாளி. சிந்தனையாளர். தமது இறுதிக் காலம்வரை தம்மைநாடி வந்தவர்களுக்கு அறிவை வாரி...வாரி வழங்கி வந்தார். மாணவர் சிறுவராகிய எனக்குப் பண்டிதமணியைக் காணும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவரின் நூல்களைப் படித்து விளங்கிக்கொள்ளக்கூடிய அறிவும் இல்லை. எனினும் பெரியார் என்றவகையில் அவரில் எனக்குப் பெரும் மதிப்புண்டு. 1988 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் நாள் பண்டிதமணி இறைவனடி சேர்ந்தார்.

**செல்வி வி சனுஜிகா (தரம்-7)**
**ஸ்ரீ சண்முகா பெண்பிள்ளைகள் இல்லம்**
**திருகோணமலை.**

## விழிகள் பேசும் மொழிகள்!..

அடைபட்டு நான் தவித்த
நாட்களில்
அணைத்தெடுக்க அங்கு
யாரும்இல்லை
அன்பு என்பது அங்கே
தொலைந்தது என்று
அலறும் சத்தம் மட்டும்
மிச்சமாகியது!..

எதையோ தெலைத்த
ஏமாளியாய் நானும்
ஏமாந்து போனதை தினம் நினைத்து
எண்ணிப்பார்க்கும் போது மட்டும்
என்னைக் கண்ணீர்
ஆரத்தழுவிக் கொள்கின்றது.!..

விந்தை உலகை நினைத்து நானும்
சிந்தை செய்து பார்த்துப் போக
பழிகள் வந்து குழியைப் பார்க்கிறது
விழிகள் கண்ணீராய் கவலை பேசுகிறது!..

**செல்வி ந துர்க்கா (தரம்-12)**
**ஸ்ரீ சண்முகா பெண்பிள்ளைகள் இல்லம்**
**திருகோணமலை.**

## -ஏனிந்த தாமதம்!..

அன்பின் மஞ்சரியாக
கானகம் நுழைந்த காற்றே
அகம் மணந்து
அதைக் கொஞ்சம் சொல்வாயோ!..
ஆறுதல் வார்த்தைகளை
ஆங்கே - தொட்டுமோதி
ஆத்திரத்தை வரவழைக்கும்
அழகான பேரழகி நீயோ!..
இல்லை என்று உணர
இன்பம் என உரைத்து
இரைச்சலிலும் நீயோ
இன்னிசையை மீட்டிச் செல்கிறாய்!..
கண் விழிக்கின்றேன்
கருவிழியில் ஒரு துளியாய்
சிந்தும் கண்ணீரைச் சுவைத்து
பசியைப் போக்கிறாய்!..
எட்டிப்பிடிக்க ஏனிந்த
தாமதம் என்று என்னைக்கேட்டுவிட்டு
எங்கே விரைந்து போகின்றாய்!..

**செல்வி ந சோபிதா (தரம்-8)**
**ஸ்ரீ சண்முகா பெண்பிள்ளைகள் இல்லம்**

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 29

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 4 | 8 | | | 6 | 7 |
| 8 | 3 | | | 6 | 9 | 5 | | |
| 7 | | 6 | 5 | | | 4 | | 8 |
| | 7 | | 9 | | 6 | | 5 | 2 |
| 6 | | 3 | | 7 | 2 | 1 | 9 | |
| | 2 | 9 | 1 | | | 8 | | |
| 3 | 8 | | | 5 | 7 | | | 9 |
| | | 7 | 3 | | 4 | 2 | 8 | |
| 5 | | 2 | 6 | | | 7 | | 3 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 122
## (தை - மாசி 2022)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 வருடத்தில் இவர்களுக்கும் ஒரு திருநாள்.

14-16 நம் தாயகத்தில் மருத்துவ குணம்கொண்ட மரம்.

வ-இ

08-06 வீட்டில் ஒருவர்.

11-09 ஊர்வன வாழ்விடம்.

கீ-மே

13-09 இது ஒரு நீர் நிலை.

16-04 நல்வழி போதித்த உத்தமர்.

மே-கீ

01-09 உயிர்வாழ அவசியமானது.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

# நல்நெறி பற்றி......

-வி நந்தகுமார்-

**விழிப்பாயிரு செழிப்பாயிருப்பாய்...**

அநாகரீகமான அதிக பேச்சைவிட சிந்தனை நிறைந்த சிறிய பேச்சு சிறப்பு.
ஆழமான தத்துவங்களும், அதிக அர்த்தங்களும் அடங்கியதே வாழ்க்கை.
இருவரில் ஒருவராவது கோபத்தை தடுத்துத் தணித்தால், தகுந்த சமாதானம் கிட்டும்.
ஈர்க்கப்படும் வேண்டாத தவறுகளால் இளம் சமுதாயம் தம்மை இழக்கிறது.
உண்மை நிலைமைகளை உணர்ந்து கொடுக்கும்போது உயர்ந்த மனிதனாகிறாய்.
ஊதியம் உயர்த்துவதற்கு உறுதுணை, உயர்ந்தோர் நட்பை தேடுவதேயாகும்.
எந்தக் கஷ்டத்திலும் நீதியைத் தழுவிக்கொள், உனக்குள் நின்மதி தளைக்கும்.
ஏமாற்றங்களை எதிர்கொள்ளும் வெற்றி மனப்பான்மை, எம்மை உயர்த்தும்.
ஜனனத்திற்கும் மரணத்திற்கும் இடைப்பட்ட காலம், இறைவனால் இயக்கப்படுகிறது.
ஒழுக்கமான பாதையில் சென்று, ஒரு ஒழுங்கு சீரான வாழ்வைப் பெறுங்கள்.
ஓர் உயிரில் இன்னொரு உயிர் அன்பு செலுத்தும்போது, கருத்தொருமித்த காதலாகிறது.
நெருக்கடியில் நொருங்காமல் நிலை தடுமாறாமல் நில்.
பழிப்பதும் பழிவாங்குவதும், புதைகுழியில் புதையும்.
மனித மனம் மாசுபடும்போது, மகிழ்ச்சி மாயமாக மறைகிறது.
மனிதனை வெல்பவனை விட, மனத்தை வெல்பவன் மகா வல்லவன்.
விபரீதமான விதண்டா வாதத்தால் வரக்கூடாத வேதனைகள் வரும்.
அறிவிருந்தும் அதைப் பாவியாமல், அழிப்பதும், அழிவதும், அர்த்தமற்றது.
தடுமாற்றமான பேச்சுக்கள் தலைவர்கள் மத்தியில் தலைக்குனிவைத் தரும்.
பேசுவது பெரிதல்ல பிரச்சனைகளை பெரிதாக்குவதே மிகப்பெரிய தவறு.
பிரச்சனை இல்லாமல் சமூகம் இல்லை, தீர்க்கப்படாமல் வாழ்ந்தவர்களும் இல்லை.
பிரச்சனைகளைக் கண்டு பயப்படாதே, பயந்தால் அது உன்னை பிசைந்தெடுக்கும்.
சிறிய பிரச்சனையானாலும், தீர்ப்பதில் தீவிர கவனம் செலுத்து, சீக்கிரம் தீரும்.
நாம் செல்ல வேண்டிய பாதையை நாம் தான் சரிவர செப்பனிட வேண்டும்.
புரியவேண்டியதை புரிந்து கொண்டால் மட்டுமே புகலிடம் புனிதமாகிறது.
நாளும்பொழுதும் நிகழும் நன்மை தீமைகள், எமது நடைமுறைகளால் நுழைகிறது.
நீங்கள் படுக்கையை விட்டு எழும்பும்போது, புத்தம்புதிய நாள் பூத்து மலர்கிறது.
உங்களுக்கு அன்பு, பரிவு, புரிந்துணர்வு, கொண்ட மனம் கொடுக்கப்பட்டுள்ளது.
சங்கடமான நிலையை சந்தோஷமாக மாற்ற சக்தி பெற்றிருக்க வேண்டும். கெட்டவனை நல்லவனாக மாற்றும் வாய்ப்பு உனக்குக் கிடைத்த வரப்பிரசாதம். அடுத்தவர்களை காயப்படுத்தாமலும், நீங்கள் காயப்படாமலும் காலத்தை கழியுங்கள்.
கருணைப்பட வேண்டிய நேரம் கருணை காட்டாவிட்டால், காலம் நம்மைத் தண்டிக்கும்.

# கொரோனா வைரஸ் தாக்கமும் விளைவுகளும்...

இன்றைய உலகில் மக்கள் பல்வேறுபட்ட இன்னல்கள் துன்பங்களால் அழியாத சோகங்களால் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் அடிப்படை வசதிகளையும் இழந்து மிகவும் துன்பப்பட்டு வாழ்கிறார்கள். இத்தனைக்கும் காரணம் யாதென்று தெரியுமா?.. சீனா நாட்டிலே வூகான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கோரோன கொடிய வைரசும் அதன் தாக்கமும்தான். இந்த நோய் ஆரம்பத்திலே சிறிய காய்ச்சல் போன்றே தோன்றியது. ஆனால் அதன் விஸ்வரூபம் என்னவென்று அறியாத மக்கள் விழிப்புணர்வு இன்றிச் செயற்பட்டனர். பின்பு அந்தக் கொடிய நோய் தனது தாக்கத்தை மெல்ல..மெல்ல வெளிக்காட்டத் தொடங்கியது. இன்று இந்த உலகத்தையே புரட்டிப் போடும் அளவிற்கு அகோரத் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது.

உலக மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் கொடிய நோய்த் தொற்றுக்கு ஆளாகி இப்போ கடந்த இரண்டு வருடங்களில் கோடிக்கணக்கானோர் பலியாகிவிட்டனர். ஆரம்பத்தில் சீனாவில் பரவிய இந்த நோய் இன்று உலகநாடுகள் அனைத்திலும் பரவி தனது அகோரத் தாண்டவத்தை ஆடிக்கொண்டிருக்கின்றது. இத்தாண்டவத்தில் நமது நாடான இலங்கையிலும் உயிரிழப்புக்கள் அதிகமாகின. இருந்தும் நமது மக்களின் அசமந்தப் போக்கால் நோய் பரவலில் இருந்து தப்பித்துக் கொள்ளமுடியாமல் நாடு தத்தளிக்கின்றது.

நமது நாட்டு அரசும் சுகாதாரத்துறையினரும் கடும் உழைப்பு அர்ப்பணிப்புகளால் தற்போது மரணங்கள் குறைந்து வருகின்றன. இருந்தும் இந்த நோயினால் இதுவரை பதினைந்தாயிரம் பேர்வரை இறந்துள்ளனர். இருந்தும் மரணங்கள் குறைவடைந்தாலும் நோய்த்தொற்று பரவிக்கொண்டுதான் இருக்கின்றது. ஆகையால் மக்கள் அனைவரும் கவனமாக அவதானமாகச் செயற்பட வேண்டும். தவறினால் இன்னும் இந்த நோய் பரவி உயிராபத்துகள் பெருகும்.

கொரோனாக் கிருமிகள் இன்று பல உருவங்களில் உயிர்பெற்று மக்களைத் தாக்கி வருகின்றன. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் அரசாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகளையும் சுகாதார விதிமுறைகளையும் சரியாக உரிய வேளைகளில் கடைப்பிடித்து நாமும் காப்பாற்றி மற்றவர்களையும் காப்பாற்ற வேண்டும். பொது இடங்களில் கூடுதல், பொது விழாக்களைத் தவிர்த்தல், தேவையற்று வெளியே திரிதல் போன்றவற்றைத் தவிர்த்து சுத்தம் சுகாதாரம் பேணி வாழ்ந்தால்தால் இந்த நோயை விரட்டமுடியும்.

அத்தோடு இந்த நோயின் அறிகுறிகளான காய்ச்சல், தடிமல், இருமல், தொண்டைநோ, தும்மல், தலைவலி போன்றன எமக்கோ அல்லது அருகில் இருப்போருக்கோ அல்லது நாம் வாழும் சமூகத்தினருக்கோ ஏற்பட்டிருக்குமானால் உடனே சுகாதார, பாதுகாப்பு புகுதியினருக்கு அறிவித்து உடனடியாக வைத்திய பரிசோதனைக்கு உட்படுவதுடன் தடுப்பூசிகளையும் பயமில்லாமல் ஒழுங்காகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் நாமும் பாதுகாக்கப்படுவதுடன் மற்றவர்களையும் பாதுகாப்போம்.

இந்தநோய் பரவலால் இன்று அனைத்துத் துறைகளும் வீழ்ச்சிகண்டு பொருளாதார நெருக்கடி அதிகரித்து, விவைாசிகள் ஏற்றம் கண்டு மக்கள் ஒரு வேளை சோற்றுக்கே இன்னல்படும் நிலை அதிகரித்துவருவதை அன்றாடம் காண்கின்றோம். எனவே இந்தக் கொடிய நோய் ஒழிந்து மக்களின் இயல்பு வாழ்வு மலர நாம் ஒவ்வொருவரும் தியாகங்கள் செய்து, கட்டுப்பாடுகளை உரியமுறையில் கடைப்பிடித்து சுகதேகிகளாக வாழ்வது நம் கைகளில்தான் தங்கியுள்ளது.
பிறரையும் வாழ வைத்து நாமும் சுகதேகிகளாக வாழ்வோமாக!..

**செல்வன் சி அஜித்குமார்**
**திருஞானசம்பந்தர் குருகுலம்**
**களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு**

................................................................................

## கணக்குப்புதிர்...

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | | | | |
| 14 | | 28 | | |
| | | 22 | | 19 |
| | 32 | | 24 | |
| | | | 26 | |

ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் வரவேண்டிய இலக்கங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 110 வரவேண்டும்.

10 தொடக்கம் 34 வரையான எண்களைப் பாவிக்கலாம்.

ஒருமுறை எழுதிய எண்ணை மறுமுறை எழுதக்கூடாது

முயற்சி செய்து பாருங்கள்.. முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்..

## மரபுத்தொடர் விளக்கம்..

1-உதவாக்கரை - பயனற்றவன்
2-உப்பில்லாப் பேச்சு - பயனற்ற பேச்சு
3-உச்சி குளிர்தல் - மிக்க மகிழ்ச்சியடைதல்
4-உருக்குலைத்தல் - தன்னிலை மாறுபடல்
5-அடியொற்றுதல் - பின்பற்றுதல்
6-அடி நகர்த்தல் - இடம் பெயர்தல்
7-அடி பணிதல் - கீழ்ப்படிதல்
8-அடியிடுதல் - ஆரம்பித்தல்
9-கண் வைத்தல் - விருப்பம் கொள்ளுதல்
10-கண் வளர்த்தல் - நித்திரை கொள்ளல்

## எதிர்பொருட் சொற்கள்..

1-ஆக்கம் - கேடு
2-ஆடவர் - பெண்டிர்
3-ஆண்டவன் - அடியவர்
4-ஆத்திகன் - நாத்திகன்
5-ஆதாயம் - நட்டம்
6-ஆதரவு - ஆநாதரவு
7-ஆவேசம் - சாந்தம்
8-ஆண்டான் - அடிமை
9-ஆரம்பம் - முடிவு
10-ஆனந்தம் - துக்கம்

## எதிர்பாற் சொற்கள்..

1-தலைவன் - தலைவி
2-தர்மவான் - தர்மவதி
3-தனயன் - தனயை
4-தாத்தா - பாட்டி
5-திருடன் - திருடி
6-திருவாளன் - திருவாட்டி
7-தேவன் - தேவி
8-நம்பி - நங்கை
9-நாயகன் - நாயகி
10-நிபுணன் - நிபுணை

## நவரத்தினங்கள்..

1-மாணிக்கம் - Rupy
2-முத்து - Pearl
3-பவளம் - Coral
4-மரகதம் - Emerald
5-புஷ்பராகம் - Topaz
6-வைரம் - Diamond
7-கோமேதகம் - Zircon
8-நீலக்கல் - Blue Sapphire
9-வைடூரியம் - Catis Eye

## அறிந்து கொள்வோம்!..

### இலக்கணம் ஐந்து..

1-எழுத்து
2-சொல்
3-பொருள்
4-யாப்பு
5-அணி

### ஐம்பெரும் குழு..

1-அரசர்
2-அமைச்சர்
3-புரோகிதர்
4-ஒற்றர்
5-தூதுவர்

### ஐம்பெரும் குரவர்..

1-அரசன்
2-குழு
3-தந்தை
4-தேசிகன்
5-மூத்தோன்

## இரட்டைக்கிளவி வாக்கியங்கள்..

1-நீர் சல சல என ஓடியது
2-அவள் கல கல என்று சிரித்தாள்
3-மலர் கம கம என்று மணம் வீசியது
4-அவன் குரல் கர கரத்து இருந்தது
5-அவன் குசு குசு என்று பேசினான்
6-எனக்கு கிறு கிறுஎன்றுதலைசுற்றியது
7-குழந்தை குடு குடு என்று நடந்தது
8-குபு குபு என குருதி பீறிட்டது
9-குற்றமுள்ள நெஞ்சம் குறு குறுத்தது
10-பாம்பு பற்றைக்குள் சர சரஎனஓடியது

## மரபுப் பெயர்கள்...

1-ஆடு மேய்ப்பவன் - இடையன்
2-வாகனம் செலுத்துபவன் - சாரதி
3-தேர் செலுத்துபவன் - பாகன்
4-விமானம் செலுத்துபவன் - விமானி
5-கட்டடவேலை செய்பவன் - கொத்தன்
6-கப்பல் செலுத்துபவன் - மாலுமி
7-யானை பராமரிப்பவன் - பாகன்
8-மீன் பிடிப்பவன் - மீனவன்
9-தோட்ட வேலை செய்பவன் -விவசாயி
10-ஆடு மேய்ப்பவன் - இடையன்

## உவமைத்தொடர் உணர்த்தும் பொருள்..

1-நீர் மேல் எழுத்துப் போல - நிலையற்ற தன்மை
2-சூரியனைக் கண்டாற் போல - மறைந்து போவது
3-நகமும் சதையும் போல - ஒற்றுமைப் படுதல்
4-பசுமரத்தாணி போல - நிலைத்து இருத்தல்
5-பூவும் மணமும் போல - பிரியமாய் இருத்தல்
6-உடும்புப்பிடி போல - விடாப்பிடியாக இருத்தல்
7-அத்தி பூத்தாற் போல - மிக அரிதான நிகழ்வு
8-கீரியும் பாம்பும் போல - என்றுமே பகை உணர்வு
9-கல் மேல் எழுத்துப் போல - நிலைத்திருத்தல்
10-வெந்தபுண்ணில் வேல் பாய்ந்தது போல - துன்பத்தின் மேல் துன்பம்.

## இளமைப் பெயர்கள்..

1-கோழி - குஞ்சு
2-கிளி - குஞ்சு
3-அணில் - பிள்ளை
4-பசு - கன்று
5-நாய் - குட்டி
6-குதிரை - குட்டி
7-கழுதை - குட்டி
8-புலி - பறழ்
9-சிங்கம் - குருளை
10-யானை - கன்று(போதகம்)

## ஆண் - பெண்

Boy - Girl
Father - mother
Husband - Wife
Son - Doughter
Lion - Lioness
Dog - Bitch
Cock - Hen
Duck - Drake
Fox - Vixen
God - Goddess
Aunt - Uncle
Actor - Actress
King - Queen
Prince - Princess
Horse - Mare
Wizard - Witch
Goose - Gander
Gentlemen - Lady
Peacock - Peahen
Bridegroom - Bride

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## உரிமை..

மழை.. பெய்தது..தவளைகள் மகிழ்ச்சியோடு உரக்கக் குரல் எழுப்பின. குளத்தில் இருந்த ஆமை தவளைகளைப் பார்த்துச் சொன்னது.."இப்படிக் கத்துகிறீர்களே உங்கள் குரலைக் கேட்டுப் பாம்பு உங்களைப் பிடித்துவிட்டால் உங்கள் நிலை என்ன ஆவது" ?...தவளைகள் சிரித்தன.. "நாங்கள் கொஞ்சமும் கவலைப்பட மாட்டோம்." என்றது கூட்டத்தில் ஒரு தவளை. இன்னொரு தவளை சொன்னது..

**"மூச்சை இழக்கலாம் பேச்சை இழக்கலாமா?"**

## வீறு..

யானையைப் போர்க்களங்களுக்கு அழைத்துப் போகிறார்கள். களியாட்டங்களில் பழக்கி, வீர விளையாட்டுக் காட்டுகிறார்கள். ஊர்வலங்களில் கொண்டுவருகிறார்கள். யானை இல்லாத விழாக்களே இல்லை. என்று ஒரு குருவி மற்றக் குருவியைப் பார்த்துச் சொன்னது. இரண்டாம் குருவி வியப்போடு கேட்டது.. யானைக்கு எப்படி இத்தனை ஆற்றல்கள்?..."முதல் குருவி சொன்னது

**"வீறுடையான் நூறுடையான்"**

## தோழமை..

கிழிசல் துணியைத் தைக்கும் வேலையில் விரல்கள்... சுட்டு விரல் அடுத்த விரலைப் பார்த்து "துன்பப்படுகிறவர்களுக்குத் துன்பப்படுகிறவர்களே துணை" என்றது. அடுத்த விரல் கேட்டது.. ஏன்? அப்படிச் சொல்கிறாய்?.. இதோ பாரேன் சுட்டுவிரல் சொன்னது..

**"கிழிசல் துணிக்கு ஓட்டை ஊசி"**

# குறளும் பொருளும்...

## கொடுங்கோன்மை:-

551. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

552. வேலொடு நின்றா னிடுவேன் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு.

553. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

554. கூழுங் குடியு மொருங்கிழங்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

555. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னாவா மன்னர்க் கொளி.

557. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

558. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

559. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

560. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

# குறளும் பொருளும்...

## அரசின் கொடுங்செயல்...

551. செல்வத்தை விரும்பிக் குடிமக்களைத் துன்புறுத்தும் அரசன் கொலைத் தொழிலைக் கொண்டவனினும் கொடியன் ஆவான்.

552. குடிமக்களைத் தண்டித்துப் பொருள் பெறும் வேந்தன் வேலுடன் சென்ற கள்வன் வழிப்போக்கரிடம் "உள்ளதைக் கொடு" என்று பறிக்கும் கள்வனுக்கு ஒப்பானவன்.

553. ஒவ்வொரு நாளும் குடிமக்களின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து முறை செய்யாத அரசன் நாள் தோறும் மெல்ல மெல்ல தன் நாட்டை இழப்பான்.

554. எதையும் ஆராயாமல் கொடுங்கோல் ஆட்சி செய்யும் அரசன் குடிப் பெருமையையும் உண்ணும் உணவையும் ஒருசேர இழப்பான்.

555. அல்லல்பட்டு ஆற்றமுடியாத துன்பத்தால் அழுத ஏழையின் கண்ணீரே மறையற்றவன் செல்வத்தை அழிக்கும் ஆயுதமாகும்.

556. நீதி தவறா அரசனின் புகழ் நிலைத்து நிற்கும். நீதி தவறிய அரசனின் புகழ் ஒளி குன்றும்.

557. மழைத்துளி இல்லாத உலக மக்களுக்கு எத்தகைய துன்பம் தருவதோ அத்தகையதே அருளற்ற அரசனுடைய நாட்டு மக்களின் துன்பமும் ஆகும்.

558. கொடுங்கோல் மன்னனின் ஆட்சியின்கீழ் வாழ்வது செல்வம் இல்லாத வறுமையைவிடக் கொடியது

559. முறைதவறி ஆட்சி செய்யும் மன்னனின் நாட்டில் மேகம் பருவ மழை தவறிப் பெய்யாமல் சென்றுவிடும்.

560. நாடுகாக்கும் தலைவன் நல்லமுறைப்படிக் காவாத நாட்டில் பசு தரும் பாலின் பயன் குறையும். அந்தணரும் நீதி நூலை மறப்பர்.

# குறுக்கெழுத்துப்போட்டி-185
(தை - மாசி - 2022)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-06 ஒரு சமூகத்தில், நாட்டில் இந்த கட்டமைப்பு முக்கிமானது.

11-14 பறவை இனம் ஒன்று.

25-28 இவர்களுக்கும் வருடத்தில் ஒரு நாள் கொண்டாட்டம்.

43-46 கொடிய மிருகம்.

47-49 இது பூச்சி இனம். ஒலியும் எழுப்பும்.

வ-இ

11-08 இனிப்பான தின்பண்டம்.

17-15 இது ஒரு நோய்.

25-23 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.

32-30 நல்ல பணிகள் செய்பவர்களுக்கு இது கொடுத்தும் கௌரவிப்பர்.

41-36 வரலாறு ஒத்த சொல்.

கீ.மே

20-06 உள்ளம், அகம் இன்னொரு ஒத்தசொல்.

29-15 தமிழ் மக்களின் இந்த வாழ்வு நிரந்தரமாகிவிட்டது.

32-18 பௌத்தர்கள் வழிபடும் பொது இடம்.

47-12 இலக்கியத்தில் ஒருவர்.

மே-கீ

01-15 குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்.

07-28 கவிச்சக்கரவர்த்தி.

32-46 சிலர் இது காட்டியும் பிழைப்பு நடத்துவர்.

34-48 அன்பு ஒத்த சொல்.

35-49 வீடு கட்டுவதற்கும் யன்படும்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# இன்பத் தமிழ்...! (சென்ற இதழ் தொடர்ச்சி)

**குண்டக்க என்றால் என்ன? மண்டக்க என்றால் என்ன?**

21. நத்தம் புறம்போக்கு

நத்தம் ஊருக்குப் பொதுவான மந்தை...

புறம்போக்கு ஆடு, மாடு மேய்வதற்கு அரசு ஒதுக்கிய நிலம்.

22. நேரம் காலம்

நேரம் ஒரு செயலைச் செய்வதற்கு நமக்கு வசதியாக அமைத்துக் கொள்வது.

காலம் ஒரு செயலைச் செய்வதற்கு பஞ்சாங்க அடிப்படையில் செய்ய முற்படும் கால அளவு.

23. நொண்டி நொடம்

நொண்டி காலில் அடிபட்டோ, குறையால் இருப்பவர்.

நொடம் கை, கால் செயலற்று இருப்பவர்.

24. பற்று பாசம்

பற்று நெருக்கமாக உறவு கொண்டுள்ளவர்கள்.

பாசம் பிரிவில்லாமல் மரணம் வரை சேர்ந்து இருப்பது...

25. பழக்கம் வழக்கம்

பழக்கம் ஒருவர் ஒரே செயலைப் பல காலமாகச் செய்வது.

வழக்கம் பலர் ஒரு செயலைப் பலகாலம் (மரபுவழியாக ) கடைப்பிடித்துச் செய்வது.

26. பட்டி தொட்டி

பட்டி கால்நடைகள் (ஆடுகள்) வளர்க்கும் இடம் (ஊர்).

தொட்டி மாடுகள் அதிமாக வளர்க்கும் இடம்.

27. பேரும் புகழும்

பேர் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் உண்டாகும் சிறப்பு பெருமை.

புகழ் வாழ்விற்குப் பிறகும் நிலை பெற்றிருக்கும் பெருமை.

28. பழி பாவம்

பழி நமக்குத் தேவையில்லாத , பொருத்தமில்லாத செயலைச் செய்தால் அக்காலத்தில் உண்டாகும் அபச்சொல்.

பாவம் தீயவை செய்து மறுபிறப்பில் நாம் அனுபவிக்கும் நிகழ்ச்சி.

29. பங்கு பாகம்

பங்கு கையிருப்பு. பணம், நகை, பாத்திரம்.(அசையும் சொத்து).

பாகம் வீடு, நிலம். அசையாச் சொத்து.

30. பிள்ளை குட்டி

பிள்ளை பெதுவாக ஆண் குழந்தையைக் குறிக்கும்.

குட்டி பெண் குழந்தையைக் குறிக்கும்.

## விடியலும் வெற்றியும்..

அறுவடை தருகின்ற கதிர்நாற்றின்
அச்சாணி உழவனின் உழைப்பாற்றல்
பாறைகள் பிளந்தும் பயிர்செய்வான்
படும்பாட்டிலே வியர்வையின்வெற்றிவரும்

காளையும் ஏரும் கைத்தடியாய்
கடும் கோடையில் கூடி பயிர்செய்து
வாடிடும் உயிர்கள் பசிபோக்கும்
வண்ணத்து ஓவியன் கமக்காரன்

ஆண்டிலே முதற்த்திங்கள் அரும்பிவரும்
ஆதவன் உழைப்பிற்கு நன்றி தரும்
பாரெல்லாம் பகலவன் மூலதனம்
பசுமையின் வளத்திற்குப் பேர் உபயம்

சீர் பெறும் செதுக்கலில் உலகமயம்
சிறப்புற விதைக்கின்ற கதிரவனே
வெற்றியும் விடியலும் ஆதாரம்
நன்றிகள் செப்பிடும் தைப்பொங்கல்

நம்மவர் பண்பாட்டு முதற்திங்கள்
ஞாயிறு தாங்கிடும் விடியலிலே
நம்பிக்கை பெறுவது நானிலமே
குன்றிக்கு விளக்காய் ஒளிதரும்
குவலயச் செம்மலின் திருநாளில்
விடியலும் வெற்றியும் ஆதாரம்
அவனியின் வாழ்விற்கு ஒளிக்கோலம்.
நன்றி

**வசந்தா - ஜெகதீசன்**

## வல்லமை தாராயோ...

**(கலைவாணி -ஏ)**

வந்த நாட்டினிலே வழுவாநிலை தவறிடாமலும்
சொந்தக்காலிலே சுதந்திரமாய் வாழ்ந்திடவும்
அந்தரங்கங்களை அடுக்களைக்குள் முடக்காது
எந்த வேளையிலும் எடுத்தியம்பி ஏற்றம்பெறவும்
வல்லமை தாராயோ..

காணிடர் அறிந்தங்கு தானங்கள் செய்திடவும்
மானிடர் துயர்போக்கி மனவலிமை கொடுத்திடவும்
நானிலம் செழித்திடவே நன்மைகள் புரிந்திடவும்
வானினை வளைத்து வளங்களைப் பெருக்கிடவும்
வல்லமை தாராயோ..

புதுமைகள் படைத்திடவும் புலமைகள் வெளிப்படவும்
பழமைகள் களைந்து இப் பாரினில் உயர்ந்திடவும்
உரிமைகள் பெற்று இவ்வுலகினை வலம்வரவும்
மகிமையுடன் வாழ்ந்தே மங்கிடாத புகழ் பெறவும்
வல்லமை தாராயோ..

நலிந்து தேய்ந்த ஆண்டில் நாம் பட்ட துயரங்கள்

சலித்துப்போன மனங்களும் சாந்தியற்ற
மனிதரும்
பலியான வாழ்வினில் பகைமைநீங்கி
வாழ்ந்திடவும்
மலிந்துபோன இழப்புகளையும் மானிடம்
மறந்திடவும்
வல்லமை தாராயோ...

படையுமே நடுங்கும் நோயால் பாரே
முடக்கம்
அடைபட்ட உலகினில் அவஸ்தைகள்
அதிகம்
தடைகள் தொடர்ந்திடவே தரணியில்
சுணக்கம்
குடைகளாய் காப்பவர் கூடியொன்றாய்
வாழ்ந்திடவே
வல்லமை தாராயோ...

---

## தேன்...

தேன்கொண்டு வந்தவரைப் பார்த்து,நேற்று ஏன் தேன் கொண்டுவரவில்லை என்று ஒருவர் கேட்கிறார். அதற்கு அவர் கூறிய இனிமை பொருந்திய விடை...

கூறியதை நினைத் தேன்!
கொல்லி மலைக்கு நடந் தேன்!
பல இடங்களில் அலைந் தேன்!
ஓரிடத்தில் பார்த் தேன்!
உயரத்தில் பாறைத் தேன்!
எப்படி எடுப்பதென்று மலைத் தேன்!
கொம் பொன்று ஒடித் தேன்!
ஒரு கொடியைப் பிடித் தேன்!
ஏறிச்சென்று கலைத் தேன்!
பாத்திரத்தில் பிழிந் தேன்!
வீட்டுக்கு வந் தேன்!
கொண்டு வந்ததை வடித் தேன்!
கண்டு நான் மகிழ்ந் தேன்!
ஆசையால் சிறிது குடித் தேன்!
மீண்டும் சுவைத் தேன்!
உள்ளம் களித் தேன்!
உடல் களைத் தேன்!
உடனே படுத் தேன்!
கண் அயர்ந் தேன்!
அதனால் மறந் தேன்!
காலையில் கண்விழித் தேன்!
அப்படியே எழுந் தேன்!
உங்களை நினைத் தேன்!
தேனை எடுத் தேன்!
அங்கிருந்து விரைந் தேன்!
வேகமாக நடந் தேன்!
இவ்விடம் சேர்ந் தேன்!
தங்கள் வீட்டை அடைந் தேன்!
உங்களிடம் கொடுத் தேன்!
என்பணியை முடித் தேன்!
என்றார்..அதற்கு ...தேன்!
பெற்றவர் தேன்!
இலும் இனிமையாக உள்ளது
உமது விடை!இதனால் தான் நம்
முன்னோர்கள் தமிழை தமிழ்த் தேன்!
என்று உரைத்தரோ
எனக் கூறிமகிழ்ந் தேன்!
என்றார்.

படித் தேன்!
படித்ததில் சுவைத் தேன்!
உடனே பகிர்ந் தேன்!

இப்படி வேறு எந்த மொழியிலும்
இல்லாத சிறப்பு எம் தாய் மொழி
தமிழுக்கு இருக்கிறது

# அவன் ஒரு சுயநலவாதி தம்பி....

(பொன் குலேந்திரன் - கனடா)

என்ன அருமை செல்லத் தம்பி
என் வார்த்தைகைள கொஞ்சம் நிண்டு கேள் தம்பி
நல்லத்துக்கு காலமில்லை தம்பி
நடப்பெதல்லாம் நயவஞ்சகமும் சுயநலமும் தம்பி
ஆன்மீகம் பேசுவான் தம்பி
ஆனால் அவன் மனதுக்குள் இருப்பேதா சுயநலம் தம்பி
உதவி கேட்டு வருவான் தம்பி
உதவி செய்தால் நன்றி சொல்லாமல் போவான் தம்பி
அவன் உள்ளத்திலே களவு மைறவு தம்பி
ஆர் கண்டது அவன் சுய நலவாதி என்று தம்பி
கேட்டைத வாங்கிக் கொண்டு அவன் தம்பி
கண்டும் நன்றி கூறாமல் போவான் தம்பி
அடிக்கடி ஆலோசைன என்னிடம் கேட்பான் தம்பி
அடுத்த நாள் நீ யார் என்று என்னைக் கேட்பான் தம்பி
காசு கொஞ்சம் வந்து கேட்பான் தம்பி
கொடுத்தால்கடைன திரும்பித் தர நினைக்க மாட்டான் தம்பி
கணக்கு சொல்லி கொடுத்தால் தம்பி
கணக்கு எனக்கு விடுவான் தம்பி
மச்சான் நீ என் அருமை நண்பன் என்பான் தம்பி
மறு நாள் என்னைத் தெரியாத மாதிரி போவான் தம்பி
அவன் நலத்தை விரும்புவன் நான் தம்பி
அவன் மனேதா சுயநலம் உள்ள மனம் தம்பி
பொடுங்கோ அண்ணை எனக்கு வோட்டு என்று கேட்பான் தம்பி
போட்டு அவன் வென்றல் என்னை தெரியாமல் போவான் தம்பி
அனைத்து மச்சளும் என் மக்கள் என்பான் தம்பி
அனால் அவன் மனதில் இருப்பேதா குடும்ப ஆட்சி தம்பி
அண்ணா நான் உங்கள் கட்சி என்பான் காலில் விழுந்து தம்பி
அடுத்த நாள் பதவிக்கும் பணத்துக்கும் கட்சி மாறுவான் தம்பி
ஊழலுக்கும் எனக்கும் வெகு தூரம் என்பான் தம்பி
உலகில் பல வங்கிகளில் கணக்கு வச்சிருப்பான் தம்பி
சட்டத்தை மதிப்பவன் நான் என்பான தம்பி
அடிக்கடி .சட்டத்தை சுயநலத்துககாக மாற்றுப்பவன் அவேன தம்பி

அரசியல் பழி வாங்குதல் எனக்கு இல்லை என்பான் தம்பி
ஆனால் சொல்வது ஒன்று செய்வது வேறு ஒன்று அவன் தம்பி
எனக்கு முன் என்னை பலருக்கு புகழுகவான் தம்பி
எனக்கு பின் என்னை தூற்றுவன் தம்பி
கை குலுக்கிச் சிரித்து பேசுவான் தம்பி
கள்ள் மனம் அவனுக்குள் புதைந்து கிடக்கும் தம்பி
சுயநலம் அவன் மரபணுவில் கலந்தது தம்பி
சுத்தம் செய்தாலும் அது போகாது தம்பி
தனக்கு தெரிந்த அறிவை அவன் தம்பி
துளிஅளவும் மற்றவர்களுடன் பகிர மாட்டான் தம்பி
நான் நலம் நீங்கள் நலாமா என்று கேட்பான தம்பி
நாசமாய் போவான் என்று தன் மனதுக்குள் திட்டுவான் தம்பி
குருவிச்சை போன்ற ஒட்டுண்ணி போல் அவன் தம்பி
கண்டவர் நலத்தில் தங்கி வாழ்பவன் தம்பி
எத்தைன காலம் தான் ஊரை ஏமாற்றுவான் தம்பி
எதுக்கும் ஒரு முடிவு அவனுக்கு உண்டு தம்பி
இதுவும் ஒரு மனமா மனிதனுக்கு தம்பி
இறப்பேத அதை விட மேல் தம்பி

## இந்தக் காதல்!.

காதல் கதை பார்கிறேன்
அகமகிழ்ந்து சிரிக்கிறேன்
காதலித்துப் பார்த்தேன்
கண் கலங்கி நிற்கிறேன்
பார்பதற்கும் வாழ்வதற்கும்
வேறு பாட்டைக் காண்கிறேன்
பொய்க்கும் மெய்க்கும்
வெகு தூரம் எனச் சொல்கிறேன்..

இலக்கியத்தில் காதல்
இனிமை ஊட்டும் காவியம்
வாழ்க்கையிலே காதல்
வெறும் காற்றடைத்த பலூனு
காற்றுப் போனால் பலூன் உடையும்
காமம் முடிந்தால் காதல் மடியும்

பொய்யும் புரட்டும் காதலாகி
கைகள் சேர்ந்து மெய் கலந்து
இந்த காதல் வாழ்வு கொஞ்சமே
பொய்கள் எல்லாம் வெளிக்கும் போது
நெஞ்சம் உடைந்து வாழ்வும்
வெறுப்பாய் போகுமே
இந்த காதல் இந்த காதல்
காணாமல் போகுமே!

**-கவி மீனா-**

# ஆனது..ஆனது..

நட்பு உடைந்து முகநூல் ஆனது
சுற்றம் உடைந்து வாட்சப் ஆனது
வாழ்த்துக்கள் உடைந்து ஸ்டேட்டஸ் ஆனது
உணர்வுகள் உடைந்து ஸ்மைலியாய் ஆனது
குளக்கரை உடைந்து குளியலறை ஆனது
நெற்களம் உடைந்து கட்டடம் ஆனது
காலநிலை உடைந்து வெப்ப மயம் ஆனது
வளநிலம் பெருகி வருமானம் ஆனது
விளைநிலம் எல்லாம் தரிசாய் ஆனது
ஒத்தையடி உடைந்து எட்டு வழி ஆனது
கடிதம் உடைந்து இமெயில் ஆனது
துணிப்பை உடைந்து நெகிழி ஆனது
அங்காடி உடைந்து அமேசான் ஆனது
விளைநிலம் உடைந்து வெறு நிலம் ஆனது
விளையாட்டு உடைந்து வீடியோகேம் ஆனது
புத்தகம் உடைந்து இ-புக் ஆனது
சோறு உடைந்து "ஓட்ஸ்"சாய்ப் ஆனது
இட்லி உடைந்து பர்கர் ஆனது
தோசை உடைந்து பிட்சா ஆனது
குடிநீர் உடைந்து குப்பியில் ஆனது
பசும்பால் உடைந்து பாக்கெட் ஆனது
வெற்றிலை உடைந்து பீடா ஆனது
தொலைபேசி உடைந்து கைபேசி ஆனது
வங்கி உடைந்து பே டி எம் ஆனது
நூலகம் உடைந்து கூகுளாய்ப் ஆனது
புகைப்படம் உடைந்து செல்ஃபியாய் ஆனது
மனிதம் உடைந்து மதவெறி ஆனது
ஊடல் உடைந்து விவாகரத்து ஆனது
அரசியல் உடைந்து அருவெருப்பு ஆனது
பொதுநலம் உடைந்து சுயநலம் ஆனது
பொறுமை உடைந்து அவசரம் ஆனது
நிரந்தரம் உடைவது நிதர்சனம் ஆகையால்
உடைவது உலகினில் நிரந்தரம் ஆனது ..!
(படித்ததில் பிடித்தது)

# மார்கழி...

மார்கழி மாதம் கடுங்குளிர்
மாலை ஐந்திற்கே இருட்டிவிடும்.
சோலை களெல்லாம் வாடிவிட்டது
மரம் மட்டும் தனித்து நிற்கிறது.

குருவிகள் சத்தம் இல்லை
கும்மிருட்டில் தெரியவில்லை
குமூக சலசலப்பில்லை
குந்தகமும் விளையவில்லை.

கொரோனா வந்ததாலே
கொண்டாட்டங்களும் கூட இல்லை.
திண்டாடும் மக்கள் இங்கே
வேண்டாத தொல்லையினால்.

மூன்றாம் அலை முறுக்கிஅடிக்க
நான்காம் அலை அடுத்த வருஷமாம்.
நொந்து போன மனித இனம்
நொக்கி நிற்கிறது பீதியிலே.

**கெங்கா ஸ்ரான்லி**

# ஆங்கிலப் புத்தாண்டே வருக!..

**-ராணி சம்பந்தர்-**

ஆயிரம் அர்த்தம் கூடிட
ஆனந்தம் நாடிட
பிறந்திடும் ஆங்கிலப்
புத்தாண்டே வருக
புத்தொழி தருக...

கடந்த காலம் போலில்லா
காலத்தின் கோல அலைகள்
தாவிடும் நோய்கள் காவிடும்
கிருமிகள் அழித்திடு...

சிறுவர் சிறுமியரில் பற்றிடு
சுற்றஞ்சூழ கூடிக்குலாவி
சிரித்து மகிழ சீக்கிரம்
சுதந்திரம் தந்திடு...

சோதனை போதுமென்று
வேதனை வேணாமன்றோ
சாதனை படைக்க
மலர்ந்திடுவாய்...

தேடிய அஞ்ஞானம்
கூடியழித்த விஞ்ஞானம்
வாடிய உயிருக்குக்
கோடி கொடுப்பினும்
தேடிய உயிர் மீண்டிடுமோ...

பிறக்கும் பிலவ வருடம்
நீர் நிலைகளிலன்றோ
துறக்கும் மனிதம் மாற்றிட....

பொன் விளையும் பூமியாகிட
இன்பம் பொங்கும்
ஆங்கிலப் புத்தாண்டே
நீ வருக வருக...

ஆயிரமாயிரம் ஆராதனை
ஏற்றி வரவேற்க
நல்லொழி தந்திடு
பல்வழி காட்டிடு!...

------------------------------------------------------------

## கடவுள்!..

கொரோனாவின் பிடியில் உலகம்
மரணங்கள் மலிந்துவிட்ட தேசங்கள்
ஏக்கமும் பெருமூச்சும் நிறைந்துவிட
எங்கே ஒளித்தார் வழிபடும் கடவுள்!..

## முதியவர்கள்.!...

அன்பினாலும் உறவினாலும்
கட்டப்பட்ட சமூகச் சிற்பிகள்
விலை மதிக்க முடியாத
தேசத்தின் பொக்கிஷங்கள்!..

## புத்திரர்கள்.!...

ஈனப்புத்திக்குப் பெண்களை
இரையாக்கிக் கொள்ளும்
ஓநாய்கள் நம் இனத்திலும்
பவனிவரும் புத்திரர்கள்

**-சிவா-**

# வித்தகத்தாலே வினைகளைக் களைவோம்!..

நதியது நகருகின்ற பாதைக ளெங்கும்
மேடுகள் பள்ளங்கள் தோன்றும் ,
விதியதன் பாதையில் விரையும் மாந்தர்க்கும்
வீழ்ச்சியு மெழுச்சியும் தோன்றும் .

எத்தனை யிடர்கள் வாழ்வினிற் றோன்றினாலும்
இடர்களை யெண்ணி யேங்காமலே
வித்தகத்தால் வினைகளைக் களைந்து வீறுடன்
நடந்தால் விளைந்திடும் நன்மை . . . .

எட்டி யெட்டியே கனிகளைப் பறித்திட
எத்தனை முயற்சிக ளெமக்குள் !
முட்டியே முளைக்கும் விதையென முயன்றாலும்
முழுமையைத் தடுத்திடும் தடைகள் . . . .

நட்டவன் செடிக்கு நீரதை வார்ப்பதும்
நீரின்றிச் செடியது வாடுவதும் ,
பட்டது போகாமல் துளிர்ப்பதும் கருகுவதும்
படைத்தவ னென்றோ வெழுதியது !

முற்றிய வினைகள் பிறப்பெலாம் தொடர்வதனால்
மோதிடும் அலைகளாய் துயரங்கள் !
சுற்றியே பற்றிடும் சோகங்களை தூரத்தில்
எற்றியே சுவடுகளைப் பதிப்போம் .

அலைகடல் நடுவினில் வாழ்க்கையெனும் படகு !
ஆட்டமுறு படகது கரையேற அலைவுறா
நெஞ்சோடு நம்பிக்கைத் துடுப்பெடுத்தால்
அக்கரையை அடைந்திடலாம் நலமாகவே

இரா சம்பந்தன்.

**1-பெரியார்!..**

அடிமைச் சாசனங்களையும்
மடமைக் கருத்துக்களையும்
அறிவுக் கத்தியால் வெட்டிச்
சாய்த்தவர்தான்தந்தை பெரியார்!..

**2-முதிர் கன்னிகள்!..**

வரதட்சணைக் கொடுமை
கல்யாணச் சந்தையில்
விலைபோகாத சரக்குகள்
அழகான முதிர் கன்னிகள்!..

**3-உபதேசம்!..**

நுனிநாக்கில் ஆங்கிலம்
தனி இனம் என்ற பெருமை
தாய்மொழி தமிழ்எனப்பேச்சு
உபதேசம் எனக்கில்லை!..

**4-சிரிப்பு!..**

அம்மியும் ஆட்டுக்கல்லும்
உரலும் உழவுகலப்பையும்
ஓலைப்பாயும் பழைய
பாத்திரங்களும்
தேடுவாரற்று மூலையில்
கிடந்து சிரிப்பு!..

**5-அவலங்கள்!..**

இடங்கள் பல தேடி அலைந்து
பல நாட்களாக காத்துக்
கிடக்கின்றன
கொரோனா மரண உடலங்கள்
அவலத்தின் உச்சத்தில்
மனிதன்!..

-சிவா-

## தை வாசல் திறக்கட்டும் தமிழர் வாழ்வு சிறக்கட்டும்... (கீதா பரமானந்தன்)

உழைப்பின் ஒளிநாளாய் உலகப் பொதுநாளாய்
உழவர் திருநாளை உலகுக்கு இனங்காட்டி
உதிக்கின்ற செங்கதிர் ஒளிகொண்ட வரவாக
உன்னதப் பெருநாளாய் இன்பத்தின் திருநாளாய்
தைவாசல் திறக்கட்டும் தமிழர்வாழ்வு சிறக்கட்டும்!..
துரத்தும் துன்ப அலைகள் போகியாகி
பரிதியின் கதிராய் பாரினில் நிமிர்ந்து
உதிரிகள் ஆகாமல் உறவுகள் அணைத்து
உரங்கொண்டு தமிழை உலகினில் நிறுத்திட
உவப்பினைத் தாங்கியே வந்திடு நீயும்!...
பருவம் பொய்க்கா வெயிலும் மழையும்
பாரிலே பொழியட்டும் வாரியே கொடையாய்
பெருகியே நிறையட்டும் விளைச்சலின் அறுவடை
மெருகொடு பொலியட்டும் தாயக பூமி!..
வாட்டிடும் வறுமையைப் பதரெனக் களைந்து
பாட்டாளி மக்கள் பரவசம் கொண்டு
நாட்டியே நிமிரணும் உரிமையின் உழைப்பை
நலமுடன் வந்திடு தையே நீயும்!...
யுத்தத்தின் சத்தம் மொத்தமாய் ஒழியட்டும்
வித்தகம் கொண்டே இளையோர் உலகம்
நித்தமும் பூமியில் வெற்றிச்சங் கொலிக்கட்டும்
நேசத்தை நிறைத்தே நிம்மதி தந்திடு!..
எண்ணத்தில் சிறந்து ஏற்றங்கள் மிகுந்து
பண்பாடு போற்றி பாரம்பரியம் காத்து
கண்ணாம் தமிழைக் காதலாய்ப் பற்றி
காலத்தில் தமிழன் வரலாற்றில் நிலைத்திட!...
மாக்கோலம் இட்டு மனைகள் மகிழ்ந்து
மாவிலை தோரணம் மங்கலம் நிறுத்தி
பாலோடு பயறு சக்கரை புத்தரிசிப்
பொங்கலும் இட்டு பூத்தூவி நின்று!..
நன்றிக்கு வித்திட்ட நம்பெருமை சொல்லி
நானிலம் எங்கும் தமிழ்க்குடிகள் ஒன்றாய்ப்
பாடுவோம் என்றும் ஒற்றுமைப் பண்ணிசைத்து
தைவாசல் திறக்கட்டும் தமிழர் வாழ்வு சிறக்கட்டும்!..

### -அறிமுகம்!..

1-கொரோனாவின்
கோரப்பிடியில்
மரச் சவப் பெட்டிகளுக்குத்
தட்டுப்பாடு
காட்போட் பெட்டிகளின்
புதுவரவு
மனிதரை எரிக்க..
அறிமுகமானது!..

### 2-நிம்மதி!...

அன்று குறைந்த வருமானம்
நிறைந்த நல்ல நிம்மதி
இன்று நிறைந்த வருமானம்
குறைந்து போய்விட்டது
நிம்மதி!..

### 3-தேடுவார் இல்லை!..

தேடுவாரற்றுக் கிடக்கிறது
உயரத்தில் ஏற்றிவிட்ட
ஏணி மட்டுமல்ல
கல்வி தந்த ஆசானும்!..

### 4-அநாதை!.

அலைமோதும் உடுப்புக்கடை
முண்டியடிக்கும்
கள்ளுக்கடை
சனத்திரள் நிறைந்த
கோவில்கடை
வெறிசோடிக்கிடக்கிறது
நூலகம்!.. -சிவா-

# அட்டைப்படக்கவிதை மண் சஞ்சிகை இதழ் -210




ஜாலமாய் அதிரும்வெடிமருந்தால் யௌவனதில் வியப்பைக்காட்டி
யாவருமறிந்த பொறியியலர் அல்பிரட் நோபலின் பெயரைச்சூட்டி
கோலத்தில் புள்ளிகளாய் பூ கோளத்தின் அறிஞரைவெளிக்காட்டி
குவலயத்தில் பெருமதிப்பைக் கூட்டிக்கொண்டாடும் நோபல் பரிசு.

தூலத்தில் துலங்கிடாத தூரத்தினைத் துல்லியமாய் ஆய்ந்து
தொழில்நுட்பத் திறனுக்கும் தொல்லியல் நிபுணராய் வாய்த்து
ஆலத்தை அமுக்கியதை அருமருந்துகளாய் ஆக்கிடச்சேர்ந்து
ஆளுமைகளைக் கண்டறிந்தே அறிவிக்கும் உயர்நோபல் பரிசு.

நீலத்தை சுமக்கின்ற வானும் நீர்வளத்தினில் பெருக்கம்காணும்
நித்திலத்தில் சமாதானத்துடன் நிலைநிறுத்தும் பொருளியலும்
ஏலத்தில் உயர் இலக்கியத்தோடு இயற்பியல் வேதியலுக்கும்
ஏற்றமுடனே கௌரவமளித்து எழுச்சிகாட்டிடுமே நோபல் பரிசு.

காலத்தின் அவசியமாய்க் கற்றவர்க்கும் கணிப்பவர் தமக்கும்
கலங்கரை விளக்குகளாய் இக்காசினியைக் காப்பவர்களுக்கும்
சீலத்தில் மிகச்சிறந்தவராய் சிந்தனைத் திறனுடையவர்க்கும்
சிறப்பினைப் பாராட்டி சேர்ந்துலகு வாழ்த்துகின்ற நோபல் பரிசு.

**-அம்பலவன்புவனேந்திரன்..**



**06.07.1870 21.01.1924**

# சோவியத்தின் சிற்பி.. விளாடிமிர் லெனின்

சோவியத் இரஷ்யாவைச் செதுக்கி எடுத்த புரட்சிச் சிற்பி
சோஸலிசக் கொள்கையை செரித்துமுதிர்ந்த முத்துச்சிப்பி
காவியத் தலைவனாய் செங்கதிரவனைக் கண்களிலே அப்பி
கரையாத உறுதியோடு காலம்போற்றும் கற்பினைச் செப்பி.!

வால்கா நதிக்கரை நகரினையே வலம்வந்த இளைஞனாய்
வகையாகச் சட்டம்பயின்று வாகையாய்ப் பட்டம் பெற்றாய்
"கால்மார்க்ஸின்"கருத்துகளுடனே காலூன்றி நடைபயின்றாய்
கடுங்கோல்"ஜார்"மன்னனின் கொடுமைகளை எதிர்த்துநின்றாய்.!

தொழிலாளர் விவசாயி தொல்லைகளுக்காய் குரல்கொடுத்து
தொடராகப் போராடித் தொண்டர்களோடு சிறையில் படித்து
விழிப்புணர்வை நன்குதீட்டியே வேகத்தையும் ஊக்குவித்து
வெளியிட்ட நூல்களிலே விவேகத்தையும் விதைத்த வித்து.!

செழிப்பான வாழ்வைத்துறந்து செஞ்சேனையைவழி நடாத்தி
செஞ்சதுக்கப் போராட்டத்தில் சிறைபித்த அரசு நாடுகடத்தி
பொழியும்பனிபடர் "சைபீரியாவில்"புதைந்ததுன் முப்பதகவை
பொன்னான பொழுதுகளை பொசுக்கி பூட்டிதேசிறைக்கதவை.!

சிறையிலிருந்து மீண்டு யேர்மனியில் சீராகவேதிட்டம் தீட்டி
செஞ்சேனைத் தோழமைகளைச் சிரத்தையோடு ஒன்றுகூட்டி
அறைகூவல்விடுத்து ஆளணிகளை மக்களின் நல்அரணாக்கி
அதிரவைத்ததே"ரஷ்யப்புரட்சி"அடிமைத்தளையை அறுத்து.!

சமவுடமைச் சமுதாயத்தைச் சமைத்தெடுத்த நேசதலைமகன்
சான்றோனாய்ச் சகமெங்கும் போற்றுகின்ற பெருங்கலைமகன்
எமதுடமை எமக்கானதென இயம்பிநின்ற மனிதப் பொதுமகன்
ஏற்றமாய் நூற்றி ஐம்பத்தோராண்டையும் எட்டிய பெருமகன்..!

**-அம்பலவன் புவனேந்திரன்..**

# இப்படியும் சிலர்....

-கவி மீனா-

அடுதவனை அழிக்க என்ன வழி என்றே நாள் பூரா சிந்திக்கும் சிலரும் பக்கத்து வீட்டு காரனுக்கு ஐம்பம் காட்ட கடன் பட்டுக் கார் வாங்குவோர் சிலரும் அடுதவன் காசைச் சுருட்டிக் கொண்டு ஓட்டம் எடுப்போர் சிலரும் வயிற்று பசியில் அலையும் ஏழைகள் உலகிலிருக்க இங்கு காமப் பசியில் அலையும் சிலரும் அடுதவன் நேர்மையான வாழ்வை கண்டே ஏழனம் செய்யும் சிலரும் எனக்கு உந்தப் பழம் பிடிகாது உது புளிக்கும் என்று சொல்லித் தமக்குக் கிடைக்காததை சாமாளிக்கும் சிலரும் வயிறு முட்ட உண்டு புழிப்பு ஏப்பம் வந்தாலும் அடுதவன் வீட்டுச் சாப்பாட்டுக்கும் அலையும் அவா பிடித்த சிலரும் சிலர் அண்டப் புழுகராய் ஆகாசப் புழுகராய் இங்கை ஊரை ஏமாற்றிக்கொண்டுமல்லோ இருக்கினம்

எல்லாரும் கேட்டால் நாங்கள் ஊரிலை ராசாக்கள்தான் என்று புழுகுவினம் அங்கு பள்ளிக்குப் போகாதவனும் தான் அங்கை பட்டப் படிப்பு படித்ததாக இங்கை கதை அளக்குறதும் அங்கை சாப்பாட்டுக்கு வழியில்லாமலே இருந்தவர்களும் தாங்கள் தோட்டம் துரவு வீடு வாசல் என்று வாழ்ந்ததாகவும் வாறவை போறவைக்கு எல்லாம் அன்னதானம் பண்ணியதாகவும் பெரிய பிரப்புக்கள் போலே கதை அளப்பினம்..

இத்தனைக்கும் மாப்பிள்ளைகள் கனக்கப் படித்தவர்களும் இல்லை டொக்டர் என்ஜினியரும் இல்லை இவ இந்த மாதிரி இங்கை கதை அளக்குறா ஊரிலை சகோதரங்கள் அடுத்த வீட்டு காணியிலை மாங்காய் விழுகுதா? தேங்காய் விழுகுதா? என்று காவல் நின்று எடுத்தக்கொண்டு போனாதுதான் அன்றைக்கு வீட்டிலை சமையல் செய்யுற நிலமையிலை வாழுதுகள். காணி பூமி இருக்க விட்டு ப் போட்டு வெளிநாடு வந்தவர்களுண்டு.

ஆனால் ஊரிலை 25 பரப்பு காணி இருக்க அதை விட்டுப் போட்டு யாழ்பாணத்திலை வீட்டை விட்டு இறங்கி நடக்க இடமில்லாத ஒரு வீட்டிலை 6 பேரு கூடி ஒரு அறை உள்ள வீட்டிலை வாழுகிறது இதிலை பகிடி என்னவெனில் ஐந்து பெண் பிள்ளை பெத்தால் அரசனும் ஆண்டியாவான் என்பது பழமொழி இதிலை ஏழு பெண் பிள்ளையோடே பிறந்த ஒருத்தி சொல்லுறா தங்களுக்கு ஊரிலை ஒவ்வொரு பிள்ளைக்கும் அப்பா 25 அல்லது 30 பரப்பு காணி சீதனமாக கொடுத்தவர் என்று 7 பிள்ளைகளுக்கும் இப்படி சீதனம் கொடுக்க அந்த அப்பாக்குத்தான் அந்த கிராமமே சொந்தமாக இருக்க வேணும் பாருங்க..

நம்புகூடிய மாதிரியா இருக்கு? யார் கேட்டார்கள் இப்படியெல்லாம் புழுகச் சொல்லி உண்மையான மனிதர்களென்றால் அப்படிக் கஸ்டப்படுகிற இனசனத்துக்கு அடுத்தவன் கிட்டே கை ஏந்தாமே வாழ வழி செய்து கொடுத்திருக்க வேணும் ஆனால் இவர்கள் பொய்யும் புழுகும் சொல்லித் தாங்கள் அங்கும் பணக்காரார் இங்கும் பணக்காரர் என மார்பு தட்டி தம்மை தாமே மெச்சுகினம் இது ஒரு வாழ்க்கையா?..

இப்படிச் சிலரும் பலருமாய் புலம் பெயர் வாழ்வில் மனிதர்கள் அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்று சொன்னார்களே! இப்படிப் பட்ட மானிடரை காணாமல் இருபதே அரிது என நான் நினைக்கிறேன்!.

.................................................................................................................................................

# வெளிநாட்டுப் பணத்தினால் ஏற்படும் மரணங்கள்!..

**(கலைவாணி. ஏகானந்தராஜா)**

புலம்பெயர்ந்த நாம் தாயகத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட எம் உறவுகளுக்கு உணவுக்காக பணம் அனுப்பினோம் வாழ்வாதாரத்துக்காக பணம் அனுப்பினோம்.ஆண்டுகள் செல்ல எம்மைப்போல சற்று வசதியாகத்தான் வாழட்டுமே என்று வீடு, காணி என்றும் சீதனத்துக்கும் பணம் அனுப்பினோம். இவையெல்லாம் நாளடைவில் ஆடம்பரமாக வளர்வதை நாம் கண்டுகொள்ளவில்லை.

ஒரு பாடசாலைப் பிள்ளையை ஊக்கப்படுத்துவதற்காக சைக்கிள் வாங்கிக் கொடுத்தோம். வாழ்வாதாரத்துக்காக ஒருவருக்கு ஓட்டோ வாங்கிக் கொடுத்தோம் சரி. மோட்டார் சயிக்கிள் வேண்டிக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன? ஒரு வீட்டில் மோட்டார் சயிக்கிள் வாங்கிக் கொடுப்பதை பார்த்து மற்றைய வீடு கடன்பட்டு வாங்குவதும், வெளிநாட்டில் வசிக்கும் உறவுகளிடம் பணம் அனுப்பும்படி கேட்டு வாங்கிக் கொடுப்பதும் தற்போது தவிர்க்கமுடியாத செலவாக வளர்ந்து வருகிறது.

வேலையற்ற வாலிபர்களுக்கு மோட்டார் சயிக்கிள் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் மோட்டார் சயிக்கிளுக்கு பெற்றோல்போட மகன் என்ன செய்வான் என்று யோசித்தார்களா? இன்று மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் போட பணம் இல்லாது பெற்றோரை கடனாளியாக்கி தற்கொலை செய்யக் காரணமாக இருப்பதுடன், பணத்துக்காக சமூகவிரோத செயல்களை செய்து வெட்டுப்பட்டு

வெளிநாட்டில் எத்தனை உறவுகள் செய்ய விரும்பாத வேலைகளை எல்லாம் செய்கிறார்கள். பணம் சம்பாதிப்பதற்காக கடைகளில் மிகக்குறைந்த சம்பளத்தில் கூலிவேலைகளிலும் ஏன் ? மயானத்தில் புதைகுழி வெட்டும் வேலைகளிலும் ஈட்டும் பணத்தில் தான் தாயகத்தில் மோட்டார்சயிக்கிள் வாள்வெட்டுகள் நடைபெறுகின்றன. மோட்டார் சயிக்கிளுக்கு பெற்றோல் போட பணமில்லாது வீட்டில் தொடங்கும் களவு வீடு புகுந்து வெட்டிக் கொலை செய்யுமளவுக்கு வளர்ந்து விட்டது.

இன்னும்.இன்னும் எத்தனை.. போதை வஸ்துக்கு அடிமையாகி அவஸ்தைப்பட்டு இறப்பவர்கள் எத்தனைபேர் ? மதுபானப் பாவனையால் இறப்பவர்கள் எத்தனை பேர்? இதற்கான பணம் இவர்களுக்கு எப்படிக் கிடைக்கின்றது ? சற்று சிந்திப்போமா?

இவை மட்டுமா ? அண்மைச் செய்தி ஒன்று .தாயகத்தில் இணைத்தின் பயன்பாட்டினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டு செல்வதாக கணிப்பீடு. கோரோனா பாதிப்பினால் பாடசாலைகள் மூடப்பட்டு இணையவழி வகுப்புகள் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. தற்போது வீட்டுக்கு வீடு புதுரக கைத்தொலைபேசிகளும்(smart phones) இணையத் தொடர்புகளும் (internet காணப்படுகின்றன. வெளிநாட்டு உறவுகளிடம் அண்மையில் வெளியாகிய கைப்பேசிகளின் பெயர்களையும் இலக்கங்களையும் கூறி அவற்றை அனுப்பினால் தான் பிள்ளை படிக்கமுடியும் என்று பெற்றார் கூறுகின்றனர்.

இப்படியாக இறக்குமதி செய்யப்பட்ட கைப்பேசிகள் இன்று பெரும்பான்மையான வீடுகளில் காணப்படுகின்றன.பாடசாலை இல்லாத காரணத்தினாலும் போதிய நேரம் கிடைப்பதாலும் பல மாணவர்கள் இணையவழி விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். இதில் ஒன்றுதான் நீலத்திமிங்கிலம்(Blue whale) விளையாட்டு. இந்த பயங்கரமான விளையாட்டினால் தற்போது ஆசிய நாடுகளில் பேரிழப்புகள் இடம்பெறுகின்றன.

அண்மையில் பண்டத்தரிப்பிலும் ஓர் உயிரிழப்பு இடம்பெற்றதாக அறியமுடிகிறது. இதுபோன்ற மரணங்களைத் தடுப்பதெப்படி?. எம் சமுதாயத்தை வளப்படுத்த விரும்பினால், கல்விகற்க விரும்பும் பெற்றாரின்றி வாழும் குழந்தைகளுக்கு உதவி செய்யுங்கள். பெற்றோர் தம் குழந்தைக்கு வேண்டிய உதவியை தாமே சம்பாதித்து வாங்கிக் கொடுக்கட்டும். பெற்றோரை சோம்பேறிகளாக்கிவிடாதீர்கள்.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணம் அத்தியாவசிய தேவைக்கானதாக இருக்கட்டும். மரணங்கள் ஏற்படுவதற்கான மூலதனமாக இருக்கக்கூடாது. "பாத்திரம் அறிந்து பிச்சை போடுவோம்"....

# தைப்பொங்கல்!..

தைமாதம் முதலாம் நாள் கொண்டாடப்படும் விழா தைப்பொங்கல் ஆகும். இது தமிழரின் பண்பாட்டு விழாக்களில் முக்கியமானது. கதிரவனுக்கு நன்றி செலுத்தவும் உழவனுக்கு நன்றி செலுத்தும் விழாவாக இது அமைவதுண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் . தமிழர் வாழ்வில் நம்பிக்கை ஒளிதரும் மாதமாக இருப்பதும் தைமாதம்தான்.

ஆண்டின் முதலாவது மாதமாக முத்திரை பதிப்பது தைமாதமே! தைமாதத்தில் பயிர்கள் அறுவடையாகும் காலமாக இதனைப் போற்றுவர். காய்கனிகள் முற்றி விடும். பழவகைகள் அறுவடை காணும். கிழங்கு வகைகள் முற்றி பலன் தரும். இதனால்த்தான் தைமாதத்திற்கு மேலும் பல சிறப்புகள் உண்டு.

நெல் அறுவடை முடிந்த பின்னர் அதன் புதிரை கடவுளுக்கு வைத்து பூசை செய்வது நம் மரபு வழக்கம். அதனால்த்தான் தைப்பொங்கலும் சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவாக தைப்பொங்கலைக் கொண்டாடுவது வழமை. முற்றத்தில் கோலமிட்டு விளக்கேற்றி தைப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடுவர் தமிழர்.

புதுப்பானை அடுப்பிலேற்றி புத்தரிசி பொங்கலிட்டு சூரியனுக்கு மகிழ்ந்து படைப்பர். பொங்கலோ பொங்கல் என சிறுவர்களும் மகிழ்ந்து கொண்டாடுவர். மத்தாப்பு கொழுத்தி மகிழ்வாக கொண்டாடும் தைப்பொங்கல் இன்று நம்மைவிட்டு விடைபெற்று விட்டது.இன்று கொரோனாக் காலம் . ஒருவருடன் ஒருவர் தொடர்புகள் அற்ற உலகமாக மாறியுள்ளது. இதனால் கொண்டாட்டங்கள் குறைக்கப்படுவதும் உண்டு.

நாமும் வரப்போகும் தைப்பொங்கலை வீட்டுடன் உறவினருடன் கொண்டாடலாம். எதிர்கால எமது இளையோருக்கு இவற்றை காட்டி எம்விழாக்களின் தாற்பரியத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். பானையில் அரிசி எப்படி பொங்குதோ அப்படி நல்லெண்ணங்கள் நல்ல சிந்தனை நல்ல மனநிலை எம் மனதில் பொங்க வேண்டும். புதிய சிந்தனைகள் புதிய படைப்புகள் புதிய வரவுகள் எம்முள் உதயம் காணட்டும்.

தைப்பிறப்பே வருக! தனிமை விலக!
தனிமை போக! ஆரோக்கியம் பெருகி
அமைதி தரும் பொங்கலாக
இப்பொங்கல் அமையட்டும்.

**நகுலா சிவநாதன்**
**செல்ம் யேர்மனி**

**14ம் பக்க கணக்குவிடை.**

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 29 | 16 | 18 | 27 |
| 14 | 21 | 28 | 17 | 30 |
| 31 | 13 | 22 | 25 | 19 |
| 33 | 32 | 10 | 24 | 11 |
| 12 | 15 | 34 | 26 | 23 |

# வள்ளலார் கூறிய அற்புதமான வாழ்க்கை போதனைகள்!..

இதற்கு மேல் எவரும் அறிவுரை கூற இயலாது,,.

வாழ்வென்பது உயிர் உள்ளவரை.........!!!தேவைக்கு செலவிடு........ அனுபவிக்க தகுந்தன அனுபவி......இயன்ற வரை பிறருக்கு பொருளுதவி செய் மற்றும் ஜீவகாருண்யத்தை கடைபிடி.....இனி அநேக ஆண்டுகள் வாழப்போவதில்லை...... போகும்போது எதுவும் கொண்டு செல்லப்போவதுமில்லை......

ஆகவே.......

அதிகமான சிக்கனம் அவசியமில்லை...மடிந்த பின் என்ன நடக்கும் என்று குழம்பாதே...உயிர் பிரிய தான் வாழ்வு......ஒரு நாள் பிரியும்.....சுற்றம், நட்பு, செல்வம்..எல்லாமே பிரிந்து விடும்...உயிர் உள்ளவரை ஆரோக்கியமாக இரு......உடல்நலம் இழந்து பணம் சேர்க்காதே.....உன் குழந்தைகளை பேணு...... அவர்களிடம் அன்பாய் இரு.......

அவ்வப்போது பரிசுகள் அளி......அவர்களிடம் அதிகம் எதிர்பாராதே........ அடிமையாகவும் ஆகாதே.........பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள் கூட,பாசமாய் இருந்தாலும், பணி காரணமாகவோ,சூழ்நிலை கட்டாயத்தாலோ,உன்னை கவனிக்க இயலாமல் தவிக்கலாம் புரிந்து கொள்.......!!!

அதைப்போல பெற்றோரை மதிக்காத குழந்தைகள் உன் சொத்து பங்கீட்டுக்கு-சண்டை போடலாம்......உன் சொத்தை தான் அனுபவிக்க,நீ சீக்கிரம் சாக வேண்டுமென வேண்டிக் கொள்ளலாம்..

பொறுத்துக் கொள்..

அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்,கடமை, அன்பை அறியார்,அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி என அறிந்துகொள்..இருக்கும்போதே குழந்தைகளுக்கு கொடு,

ஆனால்......

நிலைமையை அறிந்து அளவோடு கொடு..எல்லாவற்றையும் தந்துவிட்டு பின் கை ஏந்தாதே, எல்லாமே இறந்த பிறகு என,உயில் எழுதிவைத்திராதே.. நீ எப்போது இறப்பாய் என - எதிர்பார்த்து காத்திருப்பர்.. எனவே கொடுப்பதை கொடுத்து விடு,

தரவேண்டியதை பிறகு கொடு..மாற்ற முடியாததை மாற்ற முனையாதே, மற்றவர் குடும்ப நிலை கண்டு பொறாமையால் வதங்காதே.....!!!அமைதியாக மகிழ்ச்சியோடு இரு.......

பிறரிடம் உள்ள நற்குணங்களை கண்டு பாராட்டு..நண்பர்களிடம் அளவளாவு.நல்ல உணவு உண்டு.....நடை பயிற்சி செய்து.....உடல் நலம் பேணி......இறை பக்தி கொண்டு......குடும்பத்தினர் - நண்பர்களோடு கலந்து உறவாடி மனநிறைவோடு வாழ்..

இன்னும்......

இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள்.. சுலபமாக ஓடிவிடும்...!!வாழ்வை கண்டு களி...!!ரசனையோடு வாழ்.....!!வாழ்க்கை வாழ்வதற்கே,....!!

நான்கு நபர்களை புறக்கணி!

மடையன், சுயநலக்காரன், முட்டாள், ஓய்வாக இருப்பவன்

நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே!

பொய்யன், துரோகி, பொறாமைக்காரன், மமதை பிடித்தவன்

நான்கு நபர்களுடன் கடினமாக நடக்காதே!

அனாதை, ஏழை, முதியவர், நோயாளி

நான்கு நபர்களுக்கு உனது கொடையை தடுக்காதே!

மனைவி, பிள்ளைகள், குடும்பம், சேவகன்

நான்கு விசயங்களை ஆபரணமாக அணி!

பொறுமை, சாந்த குணம், அறிவு, அன்பு

நான்கு நபர்களை வெறுக்காதே!

தந்தை, தாய், சகோதரன், சகோதரி

நான்கு விசயங்களை குறை!

உணவு, தூக்கம், சோம்பல், பேச்சு

நான்கு விசயங்களை தூக்கிப்போடு!

துக்கம், கவலை, இயலாமை, கஞ்சத்தனம்

நான்கு நபர்களுடன் சேர்ந்து இரு!

மனத்தூய்மை உள்ளவன், வாக்கை நிறைவேற்றுபவன், கண்ணியமானவன் உண்மையாளன்

நான்கு விசயங்கள் செய்!

தியானம் ,யோகா, நூல் வாசிப்பு, உடற்பயிற்சி

சேவை செய்தல்

வாழ்க்கை வளம் பெற இத்தகைய செயல்களை கடைபிடியுங்கள்....

---

**பேசினால்........**

-அன்பாகப் பேசினால் உறவு நீடிக்கும்
-அறிவாகப் பேசினால் உயர்வு நீடிக்கும்
-அளவாகப் பேசினால் உரிமை நீடிக்கும்
-அழகாகப் பேசினால் நட்பு நீடிக்கும்
-அர்த்தமாகப் பேசினால் கண்ணியம்நீடிக்கும்
-அமைதியாகப் பேசினால் ஆயுள் நீடிக்கும்..

**ஆண்களின் பருவப்பெயர்கள்**

-01 - 12 பாலகன்
-12 - 24 விடலை
-24 - 36 காளை
-36 - 48 மீளி
-48 - 60 மறவோன்
-60 - 72 திறவோன்
-72 - மேல் முதுமகன்

# போதை தரும் வாதை.....

-கெங்கா ஸ்ரான்லி-

மனிதர் புகழ் என்னும் ஏணியில் ஏறி நின்று கொண்டு கொடி அசைக்கிறார். ஆனால் புகழேணி ஒரு நாள் சரிந்து விழுந்தால் எல்லாமே விழுந்து விடும். வாழ்க்கையில் முன்னுக்கு வரும்போது நேர்மை,நீதி,(புகழ்ச்சியில்) இருக்கவேண்டும். அதைவிடுத்து புகழுக்காக என இருந்தால் எதுவும் நிலைக்காது.பெரிய சாதனைகள் செய்தோர் புகழ் இன்னும் நிலைத்து நிற்கிறது.தனிநாயகம் அடிகள்,டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் தன்னலம் பாராது எவ்வளவு தொண்டுகள் செய்தார்கள்.

இன்னும் எவ்வளவு பேர் தன்னலம் பாராது பொதுச்சேவை செய்திருக்கின்றனர். அவர்கள் பெயர் ஒன்றும் வெளியில் வராது இருக்கின்றது.சிலர் தாங்கள் ஒரு உதவி செய்தாலே அதைப்பரப்பி தாம் சமூக சேவையாளர்,இப்படி செய்கின்றோம் அப்படி செய்கின்றோம் எனத் தம்பட்டம் அடிக்கின்றனர்.அதனால் சிலர் அவர்களைப் புகழ்ந்து புகழேணியில் ஏற்றிவிடுகின்றனர். அப்படி ஏணியில் ஏறியவர்கள் சிலர் தொடர்ந்தும் நல்ல செயல்களைச் செய்கின்றார்கள். சிலரோ படம் காட்டி வார்த்தை ஜாலம் செய்கின்றனர்.பெரும் புள்ளிகள் கூட கரும் புள்ளிகளாகி வெறும்புள்ளியாகி தட்டுத தடுமாறுவதும் உண்டு.

அப்படி பெரும்புள்ளிகள் பணம் இருக்கு என்ற மமதையில் விரயம் செய்வார்கள். செய்துவிட்டுப் பின் பிச்சை எடுப்பது போல திரிவர்.அண்மையில் ஒரு செய்தி ஒரு இளம் குடும்பம்(வங்கியில் வேலை செய்பவர்) கணவன் ஆன்லைன் சூது விளையாடி ஒரு தடவை வென்றார். அப்போது பண ஆசை தோன்றியதால் தன் நண்பர்களிடம் கடன் வாங்கி விளையாடித் தோத்து விட்டார். கடனோ பெரிய தொகை மனைவிக்குத் தெரியாது.ஒரு நாள் நண்பர்கள் கடன் காசு கேட்டு வீட்டை வந்த போதுதான் மனைவிக்குத் தெரிந்து கணவனுடன் பிரச்சனைப்பட்டதில் கணவன் கோபத்தில் மனைவியையும் ,இரு குழந்தைகளையும் கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டாராம் ஆகப் பணத்தின் போதையால் வந்த வாதை எப்படி முடிந்திருக்குப் பாருங்கள்.

நாட்டிலும் போதைப் பொருளைக் காட்டி அவர்களை வசப்படுத்தி. அதற்கு அவர்கள் அடிமையாகி பின்பு போதைப் பொருள் வாங்கப் பணமின்றி களவு,கொள்ளை எனக் குற்றங்கள் புரிந்து தண்டனை அனுபவித்து எவ்வளவு சீர் கேடுகள். இது எதனால் வந்தது. இப்படியெல்லாம் போதை தரும் மயக்கம் எவ்வளவு பின் விளைவுகளைத் தரும் என்பதை சிந்திக்காது செயல்படுபவர்களின் முடிவு கேள்விக்குறிதானே.

இவர்களுக்கு மருந்து ஆன்மீகம் தான்.இவர்கள் தங்களை ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொண்டால் தீய வழியில் போகமாட்டார்கள். தீய செயல்கள் செய்யமாட்டார்கள். நல்வழியிலே செல்வார்கள். அதனால் பிள்ளைகளுக்கு ஆன்மீகக் கல்வியும் இளவயதில் கொடுப்பது சிறப்பு எனலாம். மகா பாரதத்தில் துரியோதனன்,பாண்டவர் நல்ல குருவிடம் கல்வி கற்றனர் உண்மை. ஆனால் சூதாடத்தூண்டியபோது தருமரும் அதற்கிணங்கி சூதாட்டத்தில் தோற்று நாடு நகரம் இழக்கவில்லையா? துரியோதனன் அகம்பாவம் என்னும் போதை தலைக்கேறி போரில் மடியவில்லையா ?

ஆக அரசன் என்றாலும் ஆண்டி என்றாலும் போதை தலைக்கேறினால் அது நல்ல முடிவைத் தராது என்பது தெட்டத்தெளிவு. யேர்மன் சர்வாதிகாரி கிட்லர் கூடத் தான் முழு இராச்சியம் செய்ய வேண்டும் என்று போரிட்டதால்தானே, நான் என்ற ஆணவ போதையால் அனைத்திலும் தோல்வியுற்று தற்கொலை செய்ததாக வரலாறு.

புகை பிடிப்பவர்,செயின் ஸ்மோக்கர் என்னும் பெருமைக்காக தொடர்ந்து புகை பிடிப்பார்கள்.இவர்கள் தாம் புகை பிடித்து தங்கள் நுரையீரலைத் தொலைப்பதும் பத்தாமல், மற்றவரையும் துன்பப்பட வைப்பார்கள். புகை பிடிக்கும் போது இருந்த போதை, நுரையீரல் வெந்த வாதையில் துடிக்கையில் தான் தெரியும் அதன் வலி. இதைத் தவிர்த்திருந்தால் இந்த வாதை வந்திருக்காதே.இப்படித்தான் மது அருந்துகையில் போதை தலைக்கேறிப் பல குற்றங்களைச் செய்யத் தோன்றும்.போதையில் செய்த குற்றத்தை போதை தெளிந்தபோது தான் தவறு எனத் தெரியும்.

இருந்தும் என்ன பயன். அது மட்டுமல்ல ஈரல் கூட குடியினால் பழுதடைந்த போதுதான் போதையின் மயக்கத்தினால் வந்த வாதையும் தெரியும். எல்லாம் முடிந்த பின் என்ன பிரயோசனம். ஆக முதலே குடிவகையைத் தொடாமல் இருந்திருக்கலாம் உடம்பையும் பாது காத்திருக்கலாம்.

எனவே மாயையாகிய போதை மனிதனை நிம்மதியாக வாழவிடாது. விலங்கினத்திலும் கீழாகத் தான் நடந்து கொள்ளும். அதை மக்கள் புரிந்து கொண்டு நடக்கவேண்டும். இறந்தவனைப் பார்த்து இருப்பவன் பிழை சரி பார்த்துத் திருந்திக் கொள்ளவேண்டும். போதை கொள்ளக்கூடாது.கொண்டாலென்ன வாதையைத் தான் தரும்.

எனவே மக்கள் மனித நேயத்துடன் தெளிந்து செயற்பட்டால்.சிந்தித்தால் மனிதமும், மனித நேயமும் வாழும். போதையும் வாதையும் காணமலே போய்விடும்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோஅதுசரி சினிமா படம் போல 1, 2, 3,4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1, 2, 3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?..கொண்டாட்டங்கள் வைப்போம்?..கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ.. தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!.. ராசாத்திகள்!..

இனி குளிரும் வந்து தன்ர விளையாட்டைக் காட்டுது பாருங்கோ..இந்த குட்டிக் கிருமிகளின் திருவிளையாடலால். கிழமையில ஒரு நாள் எல்லாப் பொருட்களையும் கடைகளில் வேண்டிக்கொண்டுவந்து குளிர்ப்பெட்டிகள் எல்லாத்தையும் நிறைத்துப்போட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக இழுத்தெடுத்து பொரித்து, அவித்துத் தின்று உடம்பும் பத்துக்கிலோவுக்கு மேல கூடி இருக்க, நிமிர, நடக்கமுடியாத நிலைதான். இது கனபேருக்குக் கண்டியளோ. ஆனால் ஒருவரும் வெளியில சொல்ல மாட்டினம் பாருங்கோ..

இனி விடுமுறைக்கு ஊருக்குப்போகப் பலர் திட்டம்போட்டிருக்க.. இந்த நாசமாய்போன கொரோனா ஒழியிதில்லை என்று பல ஆயிரம்பேருக்குக் கவலை பெருகிவிட்டுது பாருங்கோ.. ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்ணலாம்,

ஊரெல்லாம் சுற்றித்திரியலாம், கோயில் குளம் எல்லாம் பார்க்கலாம், கடற்கரையில தண்ணியடித்து, விளையாடிப் படுத்துறங்கிப் பொழுதைப் போக்கலாம், பலவிதமாகப் போட்டோ எடுத்துப் பேஸ்புக்கில் போட்டு லைக் வாங்கலாம் என்றெல்லாம் ஆசை.. எல்லா ஆசையும் நாசமாகிப்போச்சுது என்று கவலை.. அடுத்த கோடை விடுமுறையும் என்னவாகும்?.. இனி என்ன செய்ய..பழையபடி செற்றியில கிடந்து ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து நாடகமும் பிக் பொஸ்சும் பார்க்கவேண்டியதுதான் பாருங்கோ!..

கொரோனே தொடரப்போகுது போலத்தான் கிடக்குது. இனி இந்த நோயுடன் பழக்கப்பட்டு ஒன்றித்துப் பாதுகாப்பாக வாழவேண்டிய கட்டாயம்தான் ஒன்றும் செய்யமுடியாது. ஊரோடு உலகத்தோட ஒத்து ஓடவேண்டும். இல்லையேல் மண்டையைப் போடவேண்டியதுதான் பாருங்கோ..

சரி...சரி.. இனி ஒருசில விசயங்களை அலசலாம் என்று இந்த மயிலன் எண்ணுகிறான். நம்ம சொந்த நாட்டில எத்தனையோ அவலங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பல சமூகச்சீரழிவுகளுக்குப் பஞ்சமில்லை பாருங்கோ!.. இதற்குப் புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழர்களும் பெரும் பொறுப்பாக இருக்கிறார்கள்..இதற்கு ஒரு சில சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம்..

மனைவி பிள்ளைகளோட வெளிநாட்டில நல்லாய் உழைத்து வாழ்ந்த தம்பி ஒருவன் இரவு, பகல், பனி, குளிர் என அடித்து உழைத்து கொழும்பில 2 கோடி ரூபாவிற்கு வீடு வேண்டினவன். தனக்கு லண்டனில் ரைக்ஸ் பிரச்சனை என்று இலங்கையிலுள்ள தம்பியாரின் பெயரில்தான் வீடு வேண்டியதுடன் காசு அனுப்புற கொடுக்கல் வாங்கல் எல்லாம். வீடு வேண்டி ஐந்து வருடங்கள் முடிய லண்டன் தம்பி மனைவி பிள்ளைகளுடன் கொலிடே எடுத்துக்கொண்டு தனது புதிய வீட்டுக்குப் போனான். அங்கு தம்பி இல்லை. அவன் வீட்டை விற்றுப் போட்டு யாழ்ப்பாணத்தில் தனது பெயரில் மாளிகை கட்டி சொகுசு வாழ்க்கை.

லண்டனில் இருந்து அண்ணன் வாறான் என்ற செய்தி அறிந்து தம்பி தலைமறைவு. பதினைந்து நாளாய் கொட்டலில் தங்கி அருமைத் தம்பியைத் தேடி அலைந்து பொலிசில முறைப்பாடு செய்ய, பொலிஸ் சொன்னது அது உன் தம்பியின் பெயரிலுள்ள வீடு அதை அவர் விற்றுப் போட்டார். அவரைத் தேடத் தேவையில்லை. நீ லண்டனுக்குப் போக வேண்டியதுதான். அருமை அண்ணன் என்ன செய்வது இவ்வளவுகால உழைப்பும் போச்சுது!..உறவும் போச்சுது!.. பழையபடி லண்டன் செல்ல வேண்டியதுதான் என்று ஏமாந்த கதையாகப் போட்டுது பாருங்கோ. பணம் என்றால் பாதாளம் தாண்டிப் பாயும் மட்டுமல்ல உடன் பிறப்பையும் தாண்டி மிதித்துப் பாயும் என்பதுதான் இன்றைய உலகம். யாரை நம்புவது?..

அடுத்த விடையம் புலம் பெயர் தேசத்தில ஒரு குடும்பத்தர் தனது மனைவி, பிள்ளைகளுக்குத் தெரியாமல் ஊரில் தனது நண்பர் ஒருவர்மூலம் வட்டிக்குக் கொடுத்து பெரும் பணம் சம்பாதித்துக்கொண்டிருக்க மேலும் ஆசைபெருக வட்டிக்கு வட்டிமேல் வருகுது என்று எண்ணி இங்குள்ள வங்கியில் கடன் எடுத்து அங்கு அனுப்பி வட்டிக்குக் கொடுத்திருக்கிறார். பண ஆசை யாரைத்தான் விட்டது நண்பனும் வட்டிக்கு வேண்டியவனும் நல்ல நண்பராகி இருவரும் சேர்ந்து இந்த வெளிநாட்டுத் தம்பியை சுருட்டி இருவரும் வெளிநாடு ஓடித்தப்பிவிட்டனர். தம்பி ஏமாந்து இப்ப வெளிநாட்டில் வங்கிக்காரன் கழுத்தில பிடிக்க இவர் மனைவி பிள்ளைகளையும் நடுத்தெருவில் விட்டு மறியலில் கம்பி எண்ணுகிறாராம்.பண ஆசைவந்தால் சொந்தம் என்னடா..அண்ணன் என்னடா!..நண்பன் என்னடா?..

மற்றது குடும்பத்தில் சகோதரர்கள் எல்லாரும் வெளிநாட்டில் கடைக்குட்டித் தம்பி மட்டும் ஊரில் வயதான தாயாரோடு. குட்டித்தம்பி தாயைப பார்க்கிறான் என்று மற்றைய சகோதரங்கள் அனைவரும் பணத்துக்குமேல் பணம் அனுப்ப தம்பி படிப்பும் இல்லை..பத்து லட்சம் மோட்டார் சயிக்கிள் இரண்டு லட்சம் பெறுமதியான கைத்தொலைபேசியோடு ரேஸ் ஓட்டம்தான். போதாக்குறைக்கு போதைவஸ்த்து. இவனோடு ஒரு வாலிபர் கூட்டம். காசு கொட்டக்கொட்ட எந்தநாளும் அவர்கள் காட்டில மழைதான், தண்ணியடி, கடையில் சாப்பாடு, ஊர்சுற்று, வாள்வெட்டு கோஸ்டி என நாட்கள் ஓடியது.

எல்லைமீறி கூடாதகூட்டம்கூடி, போதைக்கு அடிமையாகி வயதான தாயாரையும் கவனியாது பொடியன் தலைதெறித்த வாழ்க்கை. ஒருநாள் வெறியில் மோட்டார் சைக்கிள் ஓடி மரத்துடன் அடிபட்டு பொடியன் மண்டையைப் போட கூடியிருந்தவர்கள் எல்லோரும் காணாமல் போனார்கள். தாயாரைக் கவனிக்க ஆட்கள் இல்லை. தாயார் கடைக்குடிட்டியையும் பறிகொடுத்து விட்டு இப்போ முதியோர் இல்லத்தில் தஞ்சம். வெளிநாட்டில வாழும் பிள்ளைகள் தாயாரைப் பராமரிக்க முதியோர் இல்லத்துக்கு பணம் அனுப்புகிறார்கள்.

பாருங்கோ...தெரியாமலே நம்மவர்கள் சொன்னார்கள் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்று. இந்த வெளிநாட்டுச் சகோதரங்கள் அளவுக்குமிஞ்சி பணம் அனுப்பினபடியால்தான் அருமைத்தம்பியின் உயிர் பறிபோனது. இதற்கு முழுக்காரணம் இவர்கள்தான். தேவையறிந்து பணம் அனுப்பி கணக்கு கேட்டு நடந்திருந்தால் இது நடந்திருக்குமா?.. ஆகவே வெளிநாட்டுக்காரரே பணம் அனுப்புவது நல்லது. ஆனால் தேவையறிந்து அத்தியாவசிய தேவைக்கு மட்டும் அனுப்புங்கோ.. இல்லையேல் அதே கதிதான். அப்ப இன்னொரு விசயத்தோடு அடுத்த தடவை இந்த மயிலன் வருவான்..அப்ப வரட்டே!..

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| கா | த | ல | ர் |
| ற் | பி | ம் | த |
| று | ற் | பு | த் |
| ஆ | வே | ம் | பு |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொ | ரு | ளா | தா | ர | ம் | க |
| ம் | பா | ப் | அ | ன் | ன | ம் |
| மை | ம் | அ | ரை | ன | ம | ப |
| டி | ம் | க | கா | த | ல | ர் |
| அ | து | ரு | வி | யோ | பா | க |
| ம் | ர | தி | த் | ரி | ச | ம் |
| சி | று | த் | தை | து | ம் | பி |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 4 | 8 | 3 | 9 | 6 | 7 |
| 8 | 3 | 4 | 7 | 6 | 9 | 5 | 2 | 1 |
| 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 4 | 3 | 8 |
| 1 | 7 | 8 | 9 | 4 | 6 | 3 | 5 | 2 |
| 6 | 5 | 3 | 8 | 7 | 2 | 1 | 9 | 4 |
| 4 | 2 | 9 | 1 | 3 | 5 | 8 | 7 | 6 |
| 3 | 8 | 1 | 2 | 5 | 7 | 6 | 4 | 9 |
| 9 | 6 | 7 | 3 | 1 | 4 | 2 | 8 | 5 |
| 5 | 4 | 2 | 6 | 9 | 8 | 7 | 1 | 3 |

# பீட்ரூட் யூஸ்... (பீட்ரூட் சாறு)

தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்து வந்தால் இவ்வளவு நன்மைகள் இருக்கா? நீங்களே பாருங்க உடல் ஆரோக்கியம் மேம்பட காய்கறிகள் மிகவும் இன்றியமையாத உணவுப் பொருட்கள். அனைத்து காய்கறிகளும் ஏராளமான சத்துக்களை தன்னுள் அடக்கியுள்ளன.

அதில் உடலில் இரத்தத்தின் அளவை அதிகரிக்கும் ஓர் காய்கறி என்று சொல்லும் போது அனைவரும் பரிந்துரைப்பது பீட்ரூட்டைத் தான். அத்தகைய பீட்ரூட் இனிப்பாக இருப்பதால், அதனை பொரியல் செய்து சாப்பிட பிடிக்காதவர்கள், ஜூஸ் போட்டுக் குடிக்கலாம்.பீட்ரூட் ரத்தசோகை குணமாகும் உடலின் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பீட்ரூட்டில் ஹீமோகுளோபின் எண்ணிக்கை அதிகரிக்க தேவையான இரும்புச்சத்து ஃபோலேட் வைட்டமின் போன்ற புதிய ரத்த அணுக்கள் உற்பத்திக்கு தேவையான சத்துக்கள் இருக்கிறது.

தினமும் 500 கிராம் பீட்ரூட் சாப்பிட்டால், ஆறு மணிநேரத்திற்குள் இரத்த அழுத்தம் குறைந்திருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சிலருக்கு தோலில் சில இடங்களில் நிறமாற்றங்கள் ஏற்படும். இன்னும் சிலருக்கு தோலில் ஈரப்பதம் இல்லாமல் வறண்டு விடும். பீட்ரூட் ஜூஸ் தினமும் அருந்தும் நபர்களுக்கு பிரச்சனைகள் நீங்கும். தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்தால் நம் உடலுக்கு எவ்வளவு நன்மை கிடைக்கும் என்று பார்ப்போம் -

**தோல்**

சிலருக்கு தோலில் ஈரப்பதம் இல்லாமல் வறண்டு விடும். இப்படிபட்டவர்கள் தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்து வந்தால் தோல் பிரச்சனைகள் நீங்கிவிடும்.

**தலைமுடி**

தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்து வந்தால், தலைமுடி உதிர்தல், பொடுகு போன்ற பிரச்சனைகள் தீர்ந்து விடும்.

**கழிவுகள்**

நாம் உண்ணும் உணவுகளில் உள்ள பல கழிவு பொருட்கள் நமது உள்ளுறுப்புகளில் சேர்ந்து கொள்கின்றன. வாரத்திற்கு ஒரு முறையாவது பீட்ரூட் ஜூஸ் குடித்தால் உடலிலுள்ள கழிவுகள் நீங்கும்.

**புற்று நோய்க்கு**

நமது உடலில் பல இடங்களில் புற்றுநோய் ஏற்படுகிறது. அதில் ஈரல் புற்று, கணைய புற்று மிகவும் ஆபத்தான புற்று நோய்களில் ஒன்று. பீட்ரூட் ஜூஸை தினமும் ஒரு வேளையாவது குடித்து வந்தால், இவ்வகை புற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.

**மூளைக்கு**

மூளை செல்களின் வளர்ச்சி குறைவதால் ஞாபக மறதி உண்டாகிறது. பீட்ரூட்டில் மூளை செல்களின் வளர்ச்சியை தூண்டும் சத்துகள் அதிகமுண்டு. எனவே பீட்ரூட் ஜூஸை தினமும் அருந்தினால் நல்லது.

# புதினா..

தினமும் ஒரு கைப்பிடியளவு புதினா சாப்பிடுங்க.. இந்த பிரச்சினை எல்லாம் உங்களை விட்டு போய்விடும்..
புதினா ஒரு அற்புதமான மருத்துவ குணம் நிறைந்த ஒரு கீரையாகும். புதினாவானது பண்டைய காலத்தில் இருந்தே நம் முன்னோர்களால் உணவு பொருளாகவும், மருத்துவ பொருளாகவும் வீடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைடிரேட், நார்ப்பொருள் உலோகச்சத்துக்கள், பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் ஏ, நிக்கோட்டினிக் ஆசிட், ரிபோ மினேவின், தயாமின் ஆகிய சத்துக்கள் அடங்கியுள்ளன
புதினாவானது ஏராளமான மருத்துவக் குணங்கள் நிறைந்த ஒரு மூலிகை கீரையாகும். இதனை தினமும் ஒரு கைப்பிடி சாப்பிட்டு வந்தால் இன்னும் பல நன்மைகள் உடலுக்கு கிடைக்கின்றது. அந்தவகையில் தற்போது இதனை சாப்பிடுவதனால் கிடைக்கும் நன்மைகள் என்னென்ன என்பதை பார்ப்போம்.
-வயிறு கோளாறுகளை குணப்படுத்துகிறது, மேலும் வீக்கம், வாயு பிரச்சனை மற்றும் பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் பிரச்சனைகளையும் இது சரி செய்கிறது.
-புதினா பித்தச் சுரப்பை உடலில் அதிகரிக்கிறது, இதன் மூலமாக பித்த ஓட்டத்தை இது அதிகரிக்கிறது. மேலும் செரிமானத்தை இது விரைவுப்படுத்துகிறது.
-வாய் துர்நாற்றம் என்பது பலருக்கு பெரும் பிரச்சனையாக இருக்கும். அவர்கள் தினமும் புதினாவை வாயில் போட்டு மெல்லலாம், ஏனெனில் வாய் துர்நாற்றத்தை போக்கும் பண்பை புதினா கொண்டுள்ளது.
-மார்பகத்தில் புண், விரிசல் போன்ற பிரச்சனைகளால் அவர்கள் குழந்தைகளுக்கு பால் கொடுப்பதில் சிக்கல் ஏற்படுகிறது, இந்த வலியை குறைக்க புதினா உதவுகிறது.
-புதினாவில் இருக்கும் மெந்தோல் நாசியில் ஏற்படும் நெரிசலை சரி செய்ய உதவுகிறது. இதனால் நாள்பட்ட இருமலையும் அதனால் ஏற்படும் எரிச்சலையும் சரி செய்ய இது உதவுகிறது . எனவே சளி பிரச்சனை உள்ளவர்கள் புதினா சாறு அல்லது புதினா தேநீர் அருந்தலாம்.
-தொண்டை புண்ணை சரி செய்ய புதினாவை தேநீராக செய்து குடித்து வரலாம். உடலில் காய்ச்சல் ஏற்படும்போது காய்ச்சலை குறைப்பதற்கு புதினா உதவுகிறது.
-உடலில் கொழுப்பு சேராததால் உடல் பருமன் கொண்டவர்கள் உடல் எடையை இழக்க புதினா உதவுகிறது.
சருமத்திற்கும் புதினா நன்மை பயக்கிறது. சருமத்தில் ஏற்படும் தொற்று மற்றும் அரிப்புகளை சரிசெய்ய இது உதவுகிறது, மேலும் முகப்பரு உண்டாவதற்கான அறிகுறிகளை இது நீக்குகிறது.

# வெந்தையம்..



தினமும் வெந்தயம் ஊற வைத்த தண்ணீரை குடித்து வந்தால் கிடைக்கும் நன்மைகள் என்னென்னு தெரியுமா?பார்ப்பதற்கு சிறு கற்கள் போல கரடு முரடாக இருக்கும் வெந்தயம், ஆனால் உண்மையில் இதில் அடங்கியுள்ள நன்மைகள் நம் உடலுக்கு எத்தகைய பயன்களை தரவல்லது என்பது நம்மில் குறைந்த அளவு மக்களே அறிந்திருப்போம்.

வீட்டின் அஞ்சறை பெட்டியில் இடம் பெறும் உணவுப் பொருட்களில் ஒன்று. அன்றாடம் நாம் சமையலில் சேர்க்கப்படும் மசாலா பொருட்கள் ஒவ்வொன்றிலும் ஏராளமான நன்மைகள் நிறைந்துள்ளன. அப்படி நாம் சேர்க்கும் ஒரு பொருள் தான் வெந்தயம்.இன்றைய மோசமான உணவுப் பழக்கவழக்கத்தாலும், வாழ்க்கை முறையாலும் ஏராளமான நோய்கள் உடலை தாக்குகின்றன. முக்கியமாக உடலில் நச்சுக்களின் அளவும அதிகரிக்கிறது. குறிப்பாக இரத்த குழாய்களினுள் கொழுப்புக்கள் படித்து இரத்த குழாய்களை அடைத்து, இதயத்திற்கு இரத்தம் செல்வதில் இடையூறு ஏற்பட்டு, இதய பிரச்சனைகள் மற்றும் மூளை பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

வெந்தயம் ஊற வைத்த நீரை காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடித்தால் அசிடிட்டியில் இருந்து விடுபட உதவும். ஊற வைத்த வெந்தயத்தை சாப்பிடுவது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.வெந்தய விதைகளில் நார்ச்சத்து மற்றும் பிற கெமிக்கல்கள் உள்ளன. இவை செரிமானத்தை மெதுவாக நடைபெற செய்து, கார்போஹைட்ரேட் மற்றும் சர்க்கரையை உறிஞ்ச உதவுகிறது.

வெந்தய நீரை தினமும் குடித்து வந்தால் கிடைக்கும் நன்மைகள்...

-வெப்பத்தைத் தணிக்கும்.வெந்தயத்தை தினமும் காலையில் வெறும் வயிற்றில் நீருடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடலில் குளிர்ச்சியை ஏற்படுத்தி வெப்பத்தை தணிக்கிறது.

-மலச்சிக்கலை சீராக்கும். உடல் சூட்டினாலும் சிலருக்கு முடி கொட்டும் பிரச்சனை இருக்கும். எனவே வெந்தயத்தில் எண்ணெய்ப்பசை இருப்பதால் முடி கொட்டுவது குறைந்து கருமையாகவும், நீளமாகவும் வளர உதவும்.

-இதில் பொட்டாசியம் அதிகம் இருப்பதால் இதயம் சார்ந்த பிரச்சனைகளை குறைக்கிறது.

-வெந்தயத்தில் உள்ள கசப்பு தன்மை நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கு நல்ல மருந்தாக உள்ளது.
-வெந்தயத்தை ஊற வைத்த நீரை தினமும் காலையில் குடித்து வந்தால், அல்சர் பிரச்சனைக்கு தீர்வு உண்டாகும்.
-வெந்தயத்தில் இருக்கும் சத்துக்கள் வெந்தயத்தில் நீர்ச்சத்து, புரதச்சத்து, கொழுப்பு சத்து, மாவுச்சத்து, சுண்ணாம்பு சத்து, மணிச்சத்து, இரும்புச்சத்து, சோடியசத்து, பொட்டாசியம் போன்ற தாதுப் பொருட்களும், தயாமின், ரிபோபிளேவின், நிகோடினிக் அமிலம், வைட்டமின் "ஏ" போன்றவைகளும் அடங்கியுள்ளன.

**இருதய பிரச்சினைக்கு**

வெந்தயத்தில் அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் இருதயத்தை பலமாக்குகிறது. இதனால் இருதயத்தில் ஏற்படும் பிரச்சனைகள் தடுக்க உதவுகின்றது.

**பசி தீர்க்க**

வெந்தயம் தொடர்ந்து சாப்பிடுவதால் செரிமான திறன் மேம்படுகிறது. இதனால் பசியின்மை பிரச்சனை தீர்கிறது. வயிறு பொருமல் நீக்கிக் குடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள உதவுகின்றது.

**சர்க்கரை நோய்க்கு**

வெந்தயத்தில் அதிக அளவில் கரையும் நார்ச்சத்து உள்ளது. இது ஜீரணத்தின் வேகத்தைக் குறைத்து கார்போஹைட்ரேட் உணவுகளை உண்ணும் அளவையும் குறைக்கிறது. எனவே, ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்கிறது.

---

# அப்பிள் பழத்தில் பத்து இரகசியங்கள்...



1-இதயத்தை ஆரோக்கியமாகப் பராமரிக்கின்றது.
2-எடைக் கட்டுக்பாட்டுக்கு உதவுகின்றது.
3-நீரழிவின் ஆபத்தைக் குறைக்கின்றது.
4-எந்த நோயையும் இலகுவில் அண்டவிடாது.
5-மலச் சிக்கலைப் போக்குகின்றது.
6-உடலிலுள்ள நச்சுக்களை நீக்க உதவுகின்றது.
7-உடலிலுள்ள கொழுப்பைக் கரைக்கின்றது.
8-புற்றுநோயைத் தடுக்க உதவுகின்றது.
9-எலும்பு பலவீனமாகுவதைத் தடுக்கின்றது.
10-உடலிலுள்ள பற்றீரியாக்களை செயலூக்கம் செய்கின்றது.

# காலிமுகச் சிறுவன்!..

## சென்ற இதழ் தொடர்ச்சி.. (சிறுகதை)

பொன் குலேந்திரன் - கனடா

முன்னுரை

சென்னையில் மெரினா கடற்கரையைப் போல் கொழும்பில் காலிமுகத் திடலும் உண்டு, ஆனால் மெரினா போன்று பெரிய மணல் நிறைந்த் கடற்கரை அல்ல அதோடு சுமார் அரை கி மீ நீளமே உள்ளது . காலிக்கு போகும் பெரும் பாதை அருகே ,இருப்பதால் அந்தப் பெயர் ஒல்லாந்தர் காலத்தில் ,இருந்து வந்தது ,,இப்போது அங்கு ,இருக்கும் காலி முக ஹோட்டேல், ஒல்லாந்தர் ஆட்சின் பொது அதிகாரிகள் வாழ்ந்த மாளிகை . 1859 ஆம் அண்டு பிரிட்டிஷ் கவர்னர் சேர் ஹென்றி வோர்ட் என்பவர் அந்த மண் திடலை விருத்தி செய்தார் அங்கு குடும்பங்கள் ஓய்வு நாட்களில் பொழுதை போக்க போவர் .

அது சரி உங்க அம்மாவுக்கு அந்த வெள்ளை நிறம் வரக் காரணம் என்ன?.. என்று கேட்டேன் அதுவும் ஒரு கதை சேர்..

கதையா சொல்லு அந்த கதையை..என் அம்மம்மாவின் பெயர் வடிவாச்சி அவள் தேயிலை தோட்டத்தில் வேலை செய்பவள். அவள் ஒரு அழகான பெண். என் அம்மாவை போல் பாடுவாள்.. வடிவாச்சி வேலை செய்த தோட்டத்து ஹட்சன் என்ற வெள்ளைக்காரர் பெரியதுரை அவளை கண்டுவிட்டார் அவளை தன் வீட்டுக்கு வந்து தோட்ட வேலையும் தனக்கு சமையலும் செய்து தரும்படி சொல்லி கட்டளையிட்டார் அதோடு என் பாட்டி நன்றாகப் பாடுவாள் பெரியதுரை சொன்னதை அவள் தட்ட முடியாது அல்லவா என்னுடைய பாட்டா தடுத்தும் அவள் அங்கு போக வேண்டி வந்தது.

தேயிலை கொய்த பின் மாலை நேரங்களில் பெரியதுரையின் பங்களாவுக்கு சென்றால் வெகு நேரம் கழித்து அழுது கொண்டே வீட்டுக்கு வருவாள் இப்படி போனது அவளுடைய வாழ்க்கை அவளுக்கு அந்த பெரிய துரைக்கும் பிறந்ததுதான் என்னம்மா அதனால்தான் அந்த அம்மாவுக்கு அந்த வெள்ளைக்காரன் நிறம் சேர்ந்து இருக்கிறது என்றான் சிறுவன்

இப்போ விளங்குகிறது உன் அம்மாவின் நிறத்தின் காதை நானும் கேள்விப்பட்டேன் தங்களுடைய பொழுதுபோக்குக்கு அங்கு வேலை செய்த பெண்களை வைப்பாட்டியாக வைத்திருந்தார்கள் பெரிய துரைமார் என்று என்ன செய்யவது வறுமை என்பதால் அவர்கள் அந்த வாழ்க்கை வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது அதுசரி உனது அப்பா கலவரத்தில் ஒரு ஐயரைப் கொலை செய்தார் என்று சொன்னாயே அதன்பின் அவருக்கு என்ன நடந்தது?.

என் அப்பா செய்த கர்மா அவரை விடவில்லை என்று என் அம்மா சொன்னாள் சில வருடங்களுக்குப் பின் நடந்த இனக்கலவரத்தில் அவர் ஒரு கடையை கொள்ளை அடிக்கும் போது போலீசாரால் சுட்டுக்கொல்லப்படார்.. அது சரி இவ்வளவு நேரம் உன்னோடு பேசுகிறேன் உன் பெயரை சொல்லமறந்து விட்டாயே..

என்று ஆமாம் சேர் என்னுடைய பெயர் அமரதேவா அம்மா என்னை தேவன் தேவன் என்று கூப்பிடுவாள்.. . அமரதேவா என்பவர் சிங்கள பாடகர் ஆச்சே..ஆமாம் சேர் என் அம்மாவுக்கு சிங்கள பாடகர்கள் தமிழ் பாடகர்கள் என்றால் போதும் என் என்றால் அவளும் ஒரு அளவுக்கு நல்ல குரலில் பாடுவாள். தனது கவலையைப் போக்க வீட்டில் பாடுவாள்.. என்றான் தேவன் ,

நீ சொல்வதை கேட்க சுவாரஸ்யமாக இருக்கிறது சிப்பிக்குள் முத்து இருக்கிறதல்லவா அது போல் என்று உன் அம்மாவை சொல் என்றேன்.. சில சமயங்களில் தெரு ஓரத்தில் இருந்து என் அப்பா இறந்த பின் ரபானை அடித்து பாடினாள் கொஞ்சம் காசு கிடைக்கும் அப்படியா உனக்கு தங்கச்சி இல்லையா ?.. என்னோடு பிறக்காத ஒரு தங்கச்சி உண்டு. என்ன சொல்லுகிறாய் தேவா.. நான் அவனைக் கேட்டேன்

ஒரு நாள் என் அம்மா வீதியில் சென்று கொண்டிருக்கும்போது ஒரு சிறுமி தமிழில் அழகான பாடல்களை ஒரு தகர டப்பாவை கையில் வைத்து அடித்துப் பாடிக் கொண்டிருந்தாள், சிலர் அவளுக்கு காசு போட்டார்கள் .என் அம்மாவுக்கு அவள் மேல் பரிதாபம் வந்தது.

அந்த அநாதை என்னுடன் என் வீட்டுக்கு அவளை என் வீட்டிற்கு கூட்டி வந்தாள் கூட்டி வந்து எனக்கு அவளை அறிமுகப்படுத்தினார் எனக்கு அவளைப் பார்த்ததும் பிடித்துக்கொண்டது எனக்கு அவள் மேல் பரிதாபம் வந்தது என்னுடன் விளையாட தேவை என்பதால் அம்மாவிடம் நான் சொன்னேன்.. அம்மா நீ நல்ல ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்து இருக்கிறாய் என் தங்கச்சியாக. அதுக்கு நன்றி :

என்ன பெயர் உன் தங்கசிக்கு?என்று கேட்டேன் அதுக்கு அவன் சொன்னான் என் அம்மாவுக்கு பிடித்த தென்னிந்திய திரைப்படப் பாடல் பாடும் பாடகி சித்ராவின் பெயரை வைத்தாள் என் அம்மா.. தேவா உனக்கு ஒரு தங்கச்சி இருக்குறது நல்லது உன் அம்மா இல்லாத காலத்தில் நீயும் அவளும் ஒன்றாக ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்ளலாம் சரியாகச் சொன்னீர்கள் சேர் சித்ரா நல்லாக பாடக்கூடியவள் அவளுக்கு சிங்கள சினிமாவில் பாடச்சந்தர்ப்பம் கிடைத்தால் எவ்வளவு நல்லா இருக்கும்..

நீ அதைப் பற்றி யோசிக்காதே இப்பொழுது நடக்கப்போவதைப் பற்றி முதலில் யோசி அதுசரி உன்னோடு வெகு நேரம் கழித்து விட்டேன் சாப்பிட என்ன வைத்திருக்கிறாய் என்று கேட்டேன்..

என்ன உங்களுக்கு வேண்டும் சேர்?..

சரி எனக்கு சுண்டலும் மூன்று இறால் வடைகள் தா.. என்றேன் இது என் அம்மா செய்த சுண்டலும் இறால் வடைகள் சுவைத்துப் பாருங்கள் என்றான்.. அவன் சொன்ன விலையிலும் பத்து ரூபாய் அதிகம் கொடுத்தேன் . அவன் நன்றி தெரவித்தான் .

எடுத்துச் சாப்பிடத் தொடங்கினேன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவன் சொன்னான் சேர் நான் இந்த வேலை மட்டும் செய்வதில்லை வெள்ளவத்தையில் சில கடைகளில் பீங்கான் கோப்பை கழிவுகளை சுத்தம் செய்வேன் சாப்பிட்டவர்கள் இலைகளை தூக்கிப் போய் தொட்டியில் போடுவேன் சில வீடுகளில் பேப்பர் போடுவேன் அதிலிருந்து பணம் எனக்கு வருகிறது இதனால் எனக்குப் படிக்க நேரம் கிடைப்பதில்லை..

தேவா நீ இதே மாதிரி தொடர்ந்து செய்ய முடியாது எனக்கு நீ உன் அப்பனை போல் இல்லாமல் கடும் உழைப்பில் சம்பாதிக்கிறாய். அவரை போல் கப்பம் வாங்கி சம்பாதிக்கவில்லை நீ ஒரு நல்ல குணம் உள்ள சிறுவன் நீ மேலும் படிக்க வேண்டும் முடிந்தால் ஆங்கிலமும் தமிழும் எழுதப்படிக்கத் கற்க வேண்டும் முடிந்தால் படித்து உயர்தர பரீட்சையில் சித்தி பெற வேண்டும் மக்களுடன் நட்பாகப் பழக வேண்டும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் இதை நீ செய்வாய் என்று எனக்கு தெரியும் நான்அவனுக்கு சொன்னேன் .

சேர் நீங்கள் சொல்வது எனக்குப் பெரிய நிம்மதியை மனசுக்குள் கொடுக்கிறது இப்படி நீங்கள் வழி காட்டியபடி நடப்பேன் , நீங்கள் எனக்குக்கிடைத்த ஆசான் என்றான்.

தேவா உனக்கு 16 வயது ஆனதும் முடிந்தால் நான் வேலை செய்யும் நிறுவனத்தில் ஒரு பியூன் வேலை மனேஜருடன் பேசி உனக்கு எடுத்து தரப்பார்க்கிறேன் அது நல்ல வேலை நல்ல சம்பளம் சில சலுகைகளும் உண்டு என்ன சொல்லுகிறாய் ?என்றேன் .சேர் அதைநீங்கள் எனக்கு செய்தால் எனக்கு மிகப்பெரிய உதவியயாக இருக்கும் சேர் நான் அதே நேரம் பள்ளியில் சேர்ந்து படித்து என்னுடைய வாழ்க்கையை உயர்த்துவேன் என்றான்.

இதோ எனது பிஸ்னஸ் கார்ட் அடுத்த கிழமையும் இதே நாள் இங்கு வருவேன் . நீ உன்னுடைய அம்மாவுடன் இதை பற்றி பேசி எனக்கு வந்து ஒரு உறுதிமொழி தரவேண்டும் முடியுமா உன்னால் என்றேன்..

"முடியும் சேர் நிச்சயம் செய்வேன்". பிஸ்னஸ் கார்ட்டில் ஆங்கிலத்தில் இருந்ததை எழுத்துக் கூட்டி வாசித்தான் கணபதி இராமச்சந்திரன் , அசிஸ்டன்ட் மனேஜர் பேர்ல் எச்போர்ட் கொம்பனி என்று இருந்தது.சேர் உங்களுக்கு.. எனக்கு பிடித்த எம்ஜீஆரின் பெயர் சேர் அவரை போல் நீங்கள் எனக்கு வாத்தியார் சேர் இதைக் கேட்டதும் என்னம்மா மிகவும் மகிழ்ச்சி அடைவாள் முடிந்தால் நீங்கள் ஒரு நாளைக்கு உங்கள் குடும்பத்தோடு என் குடிசைக்கு வாருங்கள் என் அம்மா சுவையாக உங்களுக்கு சமைத்துப் போடுவாள்..

.அதுக்கு நான் சொன்னேன் தேவா அதுக்கு என் மனைவி ஒப்புக்கொள்ளவேண்டும் அவள் வர ஒப்புக் கொள்ளாவிட்டாலும் நான் ஒரு நாள் உன் வீட்டுக்கு நிச்சயம் வருவேன் உன் அம்மாவையும் உன் தங்கச்சியை சந்திக்க..உங்களுக்கு மிகப் பெரிய மனசு சேர். நீங்கள் தராதரம் பார்க்காமல் என்னுடன் பேசி எனக்கு நல்வழி காட்டியதுக்கு மிகவும் நன்றி என்றான் தேவா.

சரி சரி தேவா உன்னுடைய வியாபாரத்தைக் கவனி. நீ என்னுடன் வெகு நேரம் கதைத்து விட்டாய். எனக்கு போவதுக்கு நேரமாகிவிட்டது என்றேன்.. .நன்றி சேர்... என்று என்னிடம் இருந்து தேவா விடை பெற்றான் அங்கிருந்து ஒரு த்ரீ வீலரை பிடித்துக்கொண்டு நான் வீடு திரும்பும்போது அந்தப் த்ரீ வீலர் ஓட்டியவன் ஒரு தமிழன் என்பதை அறிந்தேன் ஏனென்றால் அவன் த்ரீ வீலர் போட்ட பாடல் எனக்கு ஒரு அதிர்ச்சியை கொடுத்தது ஏனென்றால் அந்த பாடல் "கடலோரம் வாங்கிய காற்று" என்ற பாடல் அது எனக்கு பிடித்த பாடல் எவ்வளவு பொருத்தமான பாடல் என்று மனதுக்குள் ஒரு மகிழ்ச்சி

அரை மணி நேரத்தில் கொண்டு வந்து ராமகிருஷ்ண வீதியில் உள்ள எனது வீட்டில் த்ரீ வீலரை நிற்பாட்டினான் அவனுக்கு காசு கொடுத்துவிட்டு வீட்டுக்குள் புகுந்தேன் வாசல் கதவை திறந்த என் மனைவி ராம் முதலில் கை காலைக் கழுவி போட்டு உள்ளே வாருங்கள் என்று கட்டளையிட்டாள் அவள் சுத்தம் பார்ப்பவள் என்று எனக்கு தெரியும் அவளுக்கு நான் கட்டுப்பட்டே ஆகவேண்டும் கழுவிவிட்டு உள்ளே சென்று கதிரையில் அமர்ந்தேன்என்ன ராம் இவ்வளவு நேரம்?.. என்று அவள் கேட்டாள் நான் நடந்ததை சொன்னேன்..

சரி இனி என்ன நடந்த சம்பவத்தை வைத்து ஒரு சிறுகதை எழுத தொடங்க வேண்டியது தானே இது உங்களுக்கு விருப்பம எத்தனை சிறுகதைகள் உங்களுடைய கதைகளில் வந்திருக்கிறது அவர்கள் பரிசுகளும் தந்திருக்கிறார்கள் பரவாயில்லை இது ஒரு உண்மை சம்பவத்தை வைத்து எழுதுவது நல்லது .இதற்காக கதைகள் வேண்டியது தானே இது உங்களுக்கு விருப்பம எத்தனை சிறுகதைகள் உங்களுடைய கதைகளில் வந்திருக்கிறது அவர்கள் பரிசுகளும் தந்திருக்கிறார்கள் பரவாயில்லை இது ஒரு உண்மை சம்பவத்தை வைத்து எழுதுவது நல்லது .இதற்காக கதைகள் தேடி அடிக்கடி வெளியே போக வேண்டாம் என்றாள் என் மனைவி..

சரி சரி மாலதி உனக்கு தெரியாது சிறுகதை உருவாக்குவதுக்கு கண்டகாட்சிகளும், நடக்கும் சம்பவங்களையும் மற்றவர்கள் சொல்லும் கதைகளை வைத்து புனைவு கலந்து எழுத உதவும் சூழ்நிலை பற்றி விவரித்து எழுத வேண்டும் அதோடு மற்றும் நகைச்சுவையும் கலந்து இருக்க வேண்டும்'

சரி ராம் உங்களுடைய இலக்கிய விளக்கம் எனக்கு இப்போது தேவை இல்லை இரவு சாப்பாடு தயாராக இருக்கிறது. களைத்துபோய் வந்திருப்பீர்கள் சாப்பிட வாருங்கள் என்று சொல்லிய படியே சமையல் அறைக்குள் சென்றாள்.

( உண்மையும் புனைவும் கலந்தது) -முற்றும்-

# உலகச் செய்திகள் சில..

1.11.21-ஆப்பானிஸ்தானில் பசி பட்டினி வறட்சி உச்சம் 2.28 கோடி மக்கள் பாதிப்பு கடந்த 6 மாதங்கள் வன்முறைகளில் 460 குழந்தைகள் பலி.

-உலக சுற்றுச்சூழல் மகாநாடு பிரித்தானியாவில் 1.11.21 - 12.11.21 வரை நடைபெற்றது.

5.11.21-கொரோனா காரணமான கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவு உலக நாடுகளில் பொருட்களின் விலைகள் 30 வீதத்தால் அதிகரிப்பு.

6.11.21-இந்தியாவில் 36 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு.

8.11.21-உலகில் 43 நாடுகளில் பசி, பட்டினி அதிகரிப்பு 45 மில் பேர் பாதிப்பு.

10.11.21-யப்பானில் பறவைக்காய்ச்சல் அபாயம் 1.50.000 கோழிகள் அழிப்பு.

12.11.21-தென்னாபிரிக்காவின் இறுதி வெள்ளை ஜனாதிபதி பிரிட்றிக் வில்லியம் கிளார்க் 85வது வயதில் காலமானார் (ஜனாதிபதி பதவிக்காலம் 1989 - 1994)

13.11.21-உலகில் பல நாடுகளில் இடம்பெறும் வன்முறைகள், போர், காலநிலைபாதிப்பு கடந்த 6 மாதங்களில் 84 மில்லியன் மக்கள் கட்டாய இடம்பெயர்வு.

15.11.21-உலகில் காற்று அதிக மாசுள்ள நகரமாக பாக்கிஸ்தான் - லாகூர் இடம்.

18.11.21-உலகின் செல்வந்த நாடுகள் பட்டியலில் அமெரிக்காவைப் பின்தள்ளி சீனா முதலிடம் பிடித்துள்ளது.அமெரிக்கா, யேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, யப்பான், மெக்ஸிக்கோ, சுவீடன், சுவீஸ் அடுத்த இடங்களில்.

20.11.21-வெனிசூலா நாட்டில் 8.573 இசைக்கலைஞர்கள் ஒன்று சேர்ந்து இசைக்கச்சேரி நடாத்தி உலக சாதனை படைத்துள்ளனர்.

22.11.21-லிபியாவில் அகதிகளை ஏற்றிச் சென்ற இரு படகு விபத்தில் 160 பேர் பலி.

25.11.21-சுவீடனில் பெண் பிரதமராக அண்டரசன் 54வயது தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

25.11.21பிரான்ஸ் -இங்கிலாந்து கடற்பரப்பில் அகதிகள் கப்பல் விபத்து 31 பேர் பலி.

1.12.21-ஈக்குவடோர் நாட்டில் கடந்த ஆண்டில் இடம்பெற்ற கலவரங்களில் சிறைக் கைதிகள் 300 பேர்வரை பலியாகிள்ளனர்.

2.12.21-இந்தியாவில் பெண்கள் பிறப்பு வீதம் அதிகரிப்பு 1.000 ஆண்களுக்கு 1.020 பெண்கள் பிறப்பு வீதம் அதிகரிப்பு.

3.12.21-உலகில் சமார் 300 கோடி மக்கள் இணைய வசதிகள் கிடையாது என ஐக்கியநாடுகள் கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது.

10.12.21-உலகில் மலேரிய நோய் அதிகரிப்பு கடந்த ஆண்டில் 240 மில் மக்கள் பாதிப்பு. 62 லம்சம்பேர் மரணம். ஐ.நா. சுகாதார தாபனம் அறிவிப்பு.

20.12.21-பிலிப்பைன்சில் கடும் சூறாவளி தாக்கம் 508 பேர் இறப்பு.

30.12.21-கடந்த ஆண்டில் கனடா நாடு 4 லட்சம் வெளிநாட்டவர்களை ஏற்றுள்ளது.

31.12.21-கடந்த ஆண்டில் உலகில் 24 செய்தியாளர்கள் கொலை. 293 பேர் சிறை.

# இலங்கைச் செல்திகள் சில...

25.10.21-தென்கிழக்கு பல்கலைக் கழகம் வெள்ளிவிழாவை (25) கொண்டாடியது.
-கடந்த 60 - 70 வருடங்கள் இலங்கையில் இரசாயன உரத்துக்குப் பழக்கப்பட்டபடியால் இன்று 60 லட்சம் பேர்வரையிலான மக்கள் சிறுநீரக நோய்க்கு ஆளாகியிருப்பதாக காணி அமைச்சு அறிவித்துள்ளது.
30.12.21-இலங்கையில் வருடாந்தம் 60.000 பேர் பாரிசவாதத்தால் பாதிப்பு.
5.12.21-கடந்த 30 வருடங்களின் பின் இலங்கைக்கான பிரான்ஸ், சுவீஸ் விமானசேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.
9.11-21-யாழ்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர்தொகை குறைவடைந்தபடியால் அடுத்த தேர்தலில் 6லிருந்து 5 எம் பிக்கள் தெரிவாகுவார்கள்.
12.11.21-இலங்கை அரசின் 76வது வரவு-செலவு திட்டத்தில் உத்தேச வருமானம் 2.284 பில் ரூபா செலவு 3.912 பில் ரூபா துண்டுவிழும் தொகை 1.628 பில் ரூபா.
14.11.21-யாழ்குடாநாட்டில் வசிக்கும் மக்களில் 15 வீதமானோர் நீரழிவு நோயாளிகள் காணப்படுவதாக யாழ் போதனா வைத்தியசாலையினர் அறிவித்துள்ளனர்.
15.11.21-கடந்த 1.1.2021 - 31.12.202வரை வாகனவிபத்துக்களால் 1.948 பேர் பலி. கடந்த 10 வருடங்களில் 27.000 பேர் பலி. விபத்து மரணங்கள் பலமடங்கு அதிகரிப்பு
18.11.21-சிகரட்பாவனையால் இலங்கையில் தினம் 60 பேர்வரை இறப்பு.
23.11.21-கடந்த 2021 தை தொடக்கம் ஆகஸ்ட்வரை மலையகப் பகுதிகளில் 11 பெண்கள் படுகொலை, 12 பாலியல் சம்பவங்கள் 94 சிறுவர் துஸ்பிரயோகம் பதிவு.
28.11.21-இலங்கையிலிருந்து வேலைவாய்ப்புக்காக கடந்த வருடத்தில் 2.00.000 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். வெளிநாடுகளுக்குச் செல்வோர் தொகை அதிகரிப்பு. கடவுச்சீட்டுகள் விநியோகமும் அதிகரிப்பு.
29.11.21-போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு வருடம் 43.000 பேர் பாதிப்பு. கடந்த ஆண்டில் 36.067 பேர் கைது.
2.12.21-கடந்த 10 மாதங்களில் எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு 7.000 கோடி புகையிரதப் பகுதியினருக்கு 1.000 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.
10.12.21-ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதுடன் பெண்கள் துஷ்பிரயோகம், கொலைகள் அதிகரித்துள்ளன.
31.12.21-தீடீர் வீதிவிபத்துக்களால் சென்ற வருடம் 12.000 பேர் உயிரிழப்பு. 2385 விபத்துக்கள் 5.000 - 6.000 பேர்வரை காயம்.
31.12.21-வருடாந்தம் சுமார் 800 பேர்வரை நீர் நிகைளில் இறக்கின்றனர் என உயிர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
31.12.21-இலங்கையில் 31.12.21 வரை கொரோனா மரணங்கள் 15.000 பேரைக் கடந்துள்ளது. தொற்று 5.87.000 பேராக உயர்ந்துள்ளது.

# மூத்த பத்திரிகையாளர் கான மயில்நாதன் எம்மை விட்டுப் பிரிந்தார்...




அமரர்
மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன்
(ஓய்வுபெற்ற பிரதம ஆசிரியர் -
உதயன் - சஞ்சீவி மற்றும் காலைக்கதிர் பத்திரிகைகள்)

## 60 ஆண்டுகள் கடந்து தமிழ் ஊடகப்பணியாற்றிய ஜாம்பவான்..

தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவானும் மூத்த பத்திரிகையாருமான ம.வ. கானமயில்நாதன் அவர்கள் தனது 79 வயதில் 22.11.2021 அன்று யாழ்ப்பாணத்தில் காமானார். 1942ம: ஆண்டு வட்டுக்கோட்டையில் பிறந்து வளர்ந்து கல்வி கற்றவர். மும்மொழிப் புலமையும் ஊடக ஆளுமையும் கொண்டு 1960ம் ஆண்டளவில் "ஈழநாடு"பத்திரிகைத் துறையில் காலடி வைத்தார்.

படிப்படியாக உயர்ந்து கொழும்பு "தினபதி", "சிந்தாமணி" பத்திரிகைகளில் 1960 - 1983 வரை கடமையாற்றினார். 1983 இனக்கலவரத்தின் காரணமாக கொழும்பு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து 1984 ம் ஆண்டு "வீரகேசரி" பத்திரிகையின் யாழ்ப்பிராந்திய பொறுப்பாளராகக் கடமைபுரிந்தார். 1985ம் ஆண்டு யாழ் "உதயன்" "சஞ்சீவி" பத்திரிகைகளின் ஸ்தாபக பிரதம ஆசிரியராகக் கடமைபுரிந்தார். சுமார் 28 ஆண்டுகள் இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்து பல ஊடகவியலாளர்களை உருவாக்கினார். இதனால் தமிழ் ஊடக வளர்ச்சி பெருமிதம் கண்டது.

பழகுவதற்கு இனிமையானவர், கடமை உணர்வு கொண்டவர். நாடு, மொழி, மதப்பற்றி நிறைந்திருந்ததுடன் தமிழ் இன விடுதலைக்கு ஒரு ஊடகப்போராளியாகவே செயற்பட்டுவந்திருக்கிறார். யுத்தகாலத்திலும் அரச பயங்கரவாத காலத்திலும் தமிழ் மக்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பத்திரிகை ஊடகம் வாயிலாகப் பெரும் பங்கு வகித்தார்.

இப்படிப்பட்ட முதுபெரும் ஊடகவியலாளனுக்கு எத்தனையோ அச்சுறுத்தல்கள் நெருங்கினாலும் அவற்றை எல்லாம் எதிர்கொண்டார். ஈழவிடுதலைப் போராட்ட காலத்தில் சத்தமற்ற ஊடக சாட்சியங்களில் ஒருவராகப் பயணித்திருக்கிறார். கொலையாளிகளின் கீழ் நின்று ஊடகப்பணியாற்றிய துணிச்சல்மிக்க பேனாப் போராளியாகவே இவரை மக்கள் இனங்கண்டனர். நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்களை உருவாக்குவதில் பெரு வெற்றி கண்டிருக்கிறார். அவர் வழிவந்த பல ஊடகவியலாளர்கள் இன்று ஜாம்பவான்களாகத் திகழ்கின்றார்கள் என்றால் இது அவருக்கே பெருமையான விடையமாகும்.

பின்னர் உடல்நிலை சிறிது தளர நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக சுவீஸ்லாந்து நாட்டுக்கு வந்து 2013 - 2015 வரை வசித்துவிட்டு, மீண்டும் தாயகம் திரும்பினார். ஆயுதம் என்னும் பேனாவை எடுத்த கை ஓயுமா?.. 2016 யாழ்ப்பாணத்தில் "காலைக்கதிர்" பத்திரிகை முதன்முதலாக வெளிவர அதன் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்துவிட்டு வயது மூப்பின் காரணமாக 2018ம் ஆண்டு ஓய்வு பெற்றுக் கொண்டார்.

பத்திரிகைத் துறையின் ஜாப்பவான், ஆளுமைமிக்க ஊடகவியலாளரான இவர் பல்துறை ஆற்றல் மிக்கவராவர். தமிழ், சமயம், சமூகம் தொடக்கம் அரசியல் வரை ஆசிரியர் தலையங்கள் எழுதிய போது யாருக்கும் அஞ்சாமல் தலைகுனியாமால் ஆணித்தரமான கருத்துக்களை எழுதி மக்கள் மனங்களை வென்றார்.

சுமார் அறுபது ஆண்டுகள் ஊடகப்பணி புரிந்த இவருக்கு சர்வதேச எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பானது 2013ல் பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்து "ஊடக விசேட விருது" வழங்கிக் கௌரவித்திருக்கிறது. யாழ் ஊடக மையம் 2018ல் ஊடகவிருது வழங்கிக் கௌரவித்தது. இவற்றைவிட தமிழ்ப்பகுதிகளிலும் கொழும்பிலும் பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்.


தமிழ்ப்பத்திரிகை ஊடக உலகில் மணிவிழா கண்ட மூத்த பத்திரிகையாளரான இவரின் இழப்பானது மாபெரும் இழப்பாகவே தமிழ் உலகம் கருதுகின்றது. பேனாப் போராளியா உருவெடுத்து தமிழ்மக்களின் இதங்களை வென்று பெரும்பணியாற்றிய இந்தப் பெருந்தகைக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கும் வேளை அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்!..

உண்மையான, நேர்மையான பேனாப்போராளிகளும் நம் சமூகத்தின் தூண்கள் என்றே அழைக்கலாம். அவர் நாமம் நின்று நிலைக்க அவரின் ஊடகப்பணிக்கு நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்!..

ஆசிரியர் - "மண்" சஞ்சிகை.


# ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கணேசலிங்கன் 93வது வயதில் இந்தியாவில் காலமானார் (04.12.2021)












தமிழ் எழுத்துலகின் ஜாம்பவான்..
மண் சஞ்சிகை ஆசிரியரான என்னோடும் தொடர்பில் இருந்தவர்..

இலங்கை வடபுலத்தின் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர் 9.3.1928ல் பிறந்தவர் தனது 93வது வயதில் இந்தியாவில் இறைபதமடைந்தார் என்ற துயரச் செய்தி எம்மை துயரில் ஆழ்த்தியது. உரும்பராய் செல்லைய-இராசம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனாகப்பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை உரும்பராய் கிறிஸ்த்தவ பாடசாலை, சந்திரோதயா வித்தியாசாலையில் பெற்றதுடன் உயர் கல்வியை யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் பயின்றார்.(இது தற்போது யாழ் பல்கலைக் கழகமாக உள்ளது)

இவர் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நாவல்கள் நூற்றுக்கும்மேற்பட்ட கட்டுரைகள், விமர்சன நூல்கள், சிறுவர் இலக்கியங்கள், பயணக்கட்டுரைகள் என பல்வேறு நூல்களைத் தமிழ் உலகிற்குத் தந்திருக்கிறார். தன்னடக்கம், அமைதி, ஆளுமை மிக்க இவர் தமிழ்நாடு, இலங்கை முதுபெரும் எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ்பணி புரிந்திருக்கிறார்.

இந்தியாவில் திரைப்படத்துறையிலும் பயிற்சி பெற்ற இவர் பாலுமகேந்திரா இயக்கத்தில் கமலஹாசன் நடித்த "கோகிலா" என்னும் தெலுங்குப் படத்தின் தயாரிப்பு நிர்வாகியாகவும் இருந்திருக்கிறார். ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் இவரின் சிறுகதைகள், நாவல்கள் முக்கியமானவையே. இவரது நாவல்களில் "சடங்கு" "செவ்வானம்" "நீண்ட பயணம்" "மண்ணும் மக்களும்" போன்றவை முக்கியமானவை எனக் கருதப்படுகின்றன.

கொழும்பு வெள்ளவத்தையில் இவரின் புத்தகக்கடையில் அரிய பல நூல்களை அறிமுகப்படுத்தி வாசகர் வாசனையை அதிகரிக்கச் செய்து தமிழ் மக்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். 1983 இனக்கரவத்தால் புத்தகக்கடை எரிந்து சாம்பலானது. பின்னர் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து வடபழனியில் மீண்டும் ஒரு புத்தக நிலையத்தை ஆரம்பித்து ("குமரன் பதிப்பகம்")நடாத்தி வந்தார். இந்தப் புத்தக நிலையத்தால் இலங்கை, இந்தியா, புகலிட எழுத்தாளர்களின் படைப்புகளை வெளிக்கொண்டு வந்து தமிழ் வளர்ச்சிக்கு உழைத்தார்.

மண் சஞ்சிகையோடு இவர்...

இலங்கையில் பல மாவட்டங்களில் அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்று லண்டனில் வசித்து வந்தபோது சென்றவருடம் காலமான எனது அன்புக்குரியவரும் தமிழ்பற்றாளரும் நாட்டுப்பற்றாளருமான அமரர் மார்க்கண்டு ஐயா அவர்கள் என்னை அவருக்கு 2000ம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தி வைத்ததை நன்றியோடு நினைவு கூறுகின்றேன். அமரர் கணேசலிங்கனை நான் ஒரு நாளும் சந்திக்கவில்லை. ஆனால் தொலைபேசி நட்புத்தான். தொடர்நத்து. ஆதலால் அவருடன் எனது நட்பு நீண்டுவிட்டது. மண் சஞ்சிகையைப் பல வருடங்களாக அவருக்கு அனுப்பி வந்தபடியால் அவர் ஒரு வாசகராகவும் இருந்துள்ளார்.

2001ம் ஆண்டு யேர்மனியில் நான் "கல்லறைப் பூக்கள்" என்னும் ஒரு சிறுகதைப் புத்தகத்தை எழுதி வெளியிட்டேன். அப்புத்தகத்தை மிகக்குறைந்த செலவில் தனது பதிப்பகத்தில் அச்சுப்பதிவு செய்து தந்ததுடன்அச் சிறுகதைத் தொகுப்புக்கு முகவுரையையும் எழுதிச் சிறப்பித்திருந்தார் என்பதை இவ்வேளையில் நினைவுகொள்ளும் போது அந்த முகமறியாத மகானுக்கு எனது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையிலும் இந்தியாவிலும் பல கல்வியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வேந்தர்கள், அரசியல்வாதிகள், விமர்சகர்கள், எழுத்துலக ஆளுமைகள் என பலரின் நன்மதிப்பைப் பெற்ற இவர் பொதுவுடமை, பெண்ணியம், சமூகமுரண்பாடுகள், சமூக முன்னேற்றம் எனப் பல கோணங்களில் எழுதியவர். சகல குணாம்சம் கொண்ட எழுத்தாளர்களோடு நட்புறவைப் பேணிவந்த இந்த இலக்கிய ஆளுமை 4.12.2021 அன்று நம்மைவிட்டுப் பிரிந்த செய்தியானது பேரிழப்பானது. தமிழ் உலகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதலாம்!.. அன்னாரின்ஆத்மா சாந்தியடைய எழுத்துலகப் பெருமக்களோடு நாமும் அஞ்சலிக்கின்றோம்!..

பிரதம ஆசிரியர் - மண் சஞ்சிகை

# யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்...

-தொகுப்பு:- சாந்தினி துரையரங்கன்-

## யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 7






### திருமதி சோபியா பாஸ்கரன்

பெயர் - சோபியா பாஸ்கரன்.
பிறப்பு - 25.12.1967 ஊர்காவற்றுறை
தந்தை தாய்- ஏபிரகாம், விக்டோயியா
கல்வி - ஊர்காவற்றுறையில் உள்ள புனித மரியாள் பாடசாலை
கா.பொ.த.உயர்தரம் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கலவன் பாடசாலை
தொழில் (ஈழத்தில்) - கத்தோலிக்கமறை ஆசிரியர் ( ஊர்காவற்றுறை )
படைப்புக்கள் - கவிதை, சிறுகதை, நாட்டார்பாடல்கள்
எழுதிய புத்தகம் - எண்ணக்குழந்தைகள் - 2016


26 வருடங்களாக ஜேர்மனி பிராங்போட்டில் வசித்து வருகின்றார்.
பிராங்போட் தமிழாலயத்தில் எட்டு வருடங்களாக ஆசிரியையாக கடமையும் ஆற்றி உள்ளார்.
2016ஆம் ஆண்டு வைகாசி மாதம் தனது படைப்புக்களான கவிதைகள், சிறுகதைகள், நாட்டார் பாடல்கள் அடங்கிய நூலை "எண்ணக் குழந்தைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டும் உள்ளார்.
இந் நாட்டார் பாடல்கள் அனைத்தும் இசை ஆசிரியை திருமதி விஜயகலாவினால் இசையமைக்கப்பட்டு பாடப்பட்டும் உள்ளது.

தொடந்தும் இவர் கவிதைகள் சிறுகதைகள் எழுதிக்கொண்டும் வருகிறார்.
2019இல் இருந்து "தமிழலை" என்ற தொலைக்காட்சி நிகழ்வில் கதை வேளை என்ற நிகழ்வை தொடர்து நடாத்தி வருகின்றார். அத்தோடு மட்டுமல்லாமல் ஜேர்மனில் இயங்கி வரும் தமிழருவி வானொலியில் இசையும் கதையும் என்ற நிகழ்வையும் நடாத்தி வருகின்றார்.
இங்கு அதாவது இந்நாட்டின் Aramark என்ற நிறுவனத்தில் 14 வருடங்களாக வேலை செய்தும் வருகின்றார்.
விரைவில் "எண்ணக் குழந்தைகள்" இரண்டு என்ற சிறுகதைகள் மட்டும் அடங்கிய நூலை வெளியிட எண்ணியுள்ளார்.
யேர்மனியிலிருந்து கடந்த 32 வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் "மண்" கலை இலக்கிய சஞ்சிகையிலும் தனது ஆக்கங்களைப் படைத்து வருகின்றார்.
ஆற்றல், ஆர்வம் உடைய சோபிகா அவர்கள் தொடர்ந்து பற்பல படைப்புகளை இலக்கிய உலகில் பிரசவிக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

---

## யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 8










## திருமதி கோசல்யா சொர்ணலிங்கம்

| | | |
|---|---|---|
| பெயர் | - | கோசல்யா சொரணலிங்கம் |
| பிறந்த இடம் | - | நெடுந்தீவு ( Delft ) |
| தந்தை, தாய் பெயர் | - | அதிபர்,எஸ்.என்.கந்தையா,ஜே.பி, இலட்சுமி |
| தற்போதைய வாழ்விடம் | - | யேர்மனி - முல்கைம் |
| கல்வி கற்ற பாடசாலைகள் | - | நெடுந்தீவு இராமநாதன் வித்தியாசாலை,<br>நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாசாலை,<br>நெடுந்தீவு மகாவித்தியாலயம்<br>யாழ் இந்துமகளீர் கல்லூரி |







கணவன் - அமரர் சொர்ணலிங்கம்.
தற்போதைய வாழ்விடம் - யேர்மனி முல்கைம் (Müllheim)
எழுத்துத்துறை - கவிதை, இலக்கியம்
எழுதிய புத்தகம் - கோசல்யா கவிதைகள் 1 - 1990
- கோசல்யா கவிதைகள் 2 - 2000
கோசல்யா கவிதைகள், கதைகள் 3 - 2003
சொர்ணாஞ்சலி - 2004
( 30 இற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் தொகுப்பு ) காலச்சுடர் - 2018

இவர் தந்தைவழி,சுண்டிக்குளி வைத்திய தொழிலார்வத்தால் மூலிகையும், ஆவினமும் பெருகும் பசுந்தீவு நெடுந்தீவு மக்கள் ஆட்கொண்டதொரு நோய் நிமித்தம் அந்த கம்பீரமான இளைஞர் முன்வந்து அவ்வூருக்குப் போகிறார் ,பணிக்காக.பல கடினங்களில் நடுவில் வைத்தியம் செய்கிறார்,பாதிரி வேதம் வேர் விட்ட காலம் மானிப்பாயிலிருந்து மங்கை ஒருத்தி அதே ஊருக்கு பாடலுக்காக போகிறார், இந்த இளைஞரைக் கண்டு ..காதலாகிறாள், இரண்டாம் தடவை போகும் போது திருமணம் செய்து அங்கே இருந்து விடுகிறார்கள், அவர்கள் பேர்த்தியருள் ஒருத்தி தான் கோசல்யா அவர்கள். ஊருக்குள் சண்டையெனில் தந்தைவழி .உடம்புக்குச் சண்டையெனில் தாய் வழி. தந்தையார் அதிபர்,எஸ்.என். கந்தையா,ஜே.பி .தாய் இலட்சுமி,கல்வியும் கலையும் மேன்மை தவழும் குடும்பப வாரீசு கோசலாதேவி. பள்ளி அவ்வூரில், அனைத்து துறைகளிலும் ஆர்வமிக்கவராக வளர்ந்தார்.

பின்னாளில் யாழ்.'.இந்துமகளீர் கல்லூரி. பாடசாலை காலம் நிறைவுபெற வீட்டில் பாடம் கற்பித்தல் , எழுத்து துறை தொடர்ந்த காலமது ,மெல்ல சின்னதாய் எழுத ஆர்பம். பின் திருமணம் இரத்தினபுரி.

மாவலி மாவித்தியிலயத்தில் ஆசிரியருக்கான,,தேர்வில் தேர்வாகி போது 1983.வன்செயல் அனைத்தும் இழந்து திசைமாறி. 1984 யூலை ஆனி மாதம் மேற்கு ஜேர்மனிக்கு முல்கைம் நகர் புலம் பெயர்ந்தார். ஏற்கனவே துணைவர் இங்கு வந்திருந்தார், 1984 மார்கழி மாதம் முதல் கவி கிறிஸ்மஸ் விழாவுக்கு அரங்கேறி படிப்படியாக சஞ்சிகைகள் படைப்பாளியாக முல்கைம் தென்றல் தொட்டு படைப்பாளியாக வளர்ந்தார்.1984 தொட்ட என் கவியரங்க நிகழ்வுகள் தொட்டு, 2015 மே மாதம் வரை தமிழர் பன்முக விழாக்களும் இவரது கவியரங்கமாக ,கவிதா நிகழ்வு சுமார் 500க்கும் மேற்பட்ட கவித் தலைமை கண்டது.

வீட்டில் தமிழ் கற்பிக்க 1987 ஆரம்பித்து முல்கைம் ஜேர்மன் தமிழ் ஒன்றிய பாடசாலை தனி ஆசிரியராய் வாரத்தில் இரண்டு நாள் வகுப்பு ஆரம்பித்து. அதைத் தொடர்ந்து 1992 இராட்டிங்கன் , ஒபகௌசன் அறிவாலயம்,ஆசிரியராகவும்.. பின்னால்"1997ஓபகவுசன் ,முல்கைம்,டுயுஸ்பேர்க் ,ஆசிரியராகி. இன்றும் இணைய வழி ஆசிரியராகத் தொடர்கின்றார்..கல்வியற் பக்கமான பரீட்சை ,போட்டிநிகழ்வுகள்... குறிப்பாக ஐரோப்பிய பரப்பலிலும் கவிதை போட்டி அனைத்துக்கும் நடுவராக தேர்வு ,நடத்துனராக இன்னும் கலைப்பிரிவு பொறுப்பாளராக பணியாற்றுவதோடும் மொத்தமாக 35 வருடம் ஆசிரிய தொடர்பில்,."தமிழ்வாரிதி" சிறப்பு ஆசிரிய பட்டயம் பெற்றுள்ளார்.

இவற்றோடு சமூக ஆர்வலராக, மனித நேய உறுப்பினராக,ஒன்றிய செயற்ப ாட்டாளராகவும்,சர்வதேசபெண்கள் உரிமை அமைப்பின் உறுப்போடும்.அந்நாட்களில் ஈடுபாடு கொண்டிருந்தார்.நடனத்தில், ஆர்வமுடையதால் 20 நடன அரங்கேற்ற நிகழ்வுகளுக்கும் சிறப்பு,கௌரவ.பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டுள்ளார். முதலாக"கவிதா ஞான வாரிதி" பட்டம் அதைத் தொடர்ந்து.(அவுத்திரேலியாவில்,) ஐரோப்பாவில் கவி,கவிதாவித்தகி,கவிதாவாணி. விருதுகள் கிடைக்கப்பெற்றார்.

2004 ஆண்டு சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியம் ..ஜேர்மனி அரிய செயற்பாட்டில் ,அதன் பதிவான ஊடகவியலளராக 2009 மே மாதம் வரை பணியாற்றினார். "ரேடியோ அன்ரென்னா றூக "சர்வதேச ஒலிபரப்பு சேவையில் தமிழ் செய்தி,நிகழ்ச்சி தொகுப்பு,தயாரிப்பு,அறிவிப்பாளராகவும், 1990 - 1997 வரை பணியாற்றினார்..அதைத் தொடர்ந்து ஐரோப்பியப் பரப்பு ஊடகங்களில் தொடர்கிறது..

"காலச்சுவடு"சுமார் ..38 மரணித்தவர்கள் வரலாற்று நூல்கள் யார்த்து வழங்கியுள்ளார். கோசல்யா கவிதைகள் நூல்.1,2,3, 4வதாக சொர்ணாஞ்சலி சொர்ணச்சுடர்-பெண்ணியம், மண்ணியம், மனிதநேயம் பற்றியதான சமூக,கலை,கல்வி ஆர்வலர் ,அக்கறையோடு இவரது படையல் வரவேற்பினை நுகர்வோர் பெற்றுவருகிறது.. தற்போதும் இணையவழி படைப்பிலக்கியங்கள் வளருகின்றன.

இலக்கிய படையல்களை இன்னும் பக்கமான,ஆசிரியம்,எழுத்தும் ,கவித்துவம் விட்டு விலகக்கூடாது என்பதற்காக இன்று லண்டன் - பாமுக இணைய தொலைக்காட்சியில் இவரது பணி தொடர்கிறது.

இவர் பக்கமான அனைத்து செயற்பாடுகளுக்கும் தனித்தன்மைகளுக்கும், பக்கபலமாக ,ஊக்க விற்றமின்களாக இவர் துணைவர் துணைநின்றார். உடல்,பண ரீதியாக மறையும் நிமிடம் வரை இணைந்திருந்தார். இளங்காட்ட வியந்து சமர்ப்பிக்கிறேன், இவர் போன்றவர்களின் இலக்கிய படையல்கள் இன்னும் பல பக்கமாக தொடர வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம். நன்றி வணக்கம்!...

---

## கொரோனாவும் நாமும்!..

**(ப.பசுபதிராசா)**

மனித உடல் பெரும்பாலும் நோய் வசப்படும்
உடம்பில் ஏராளமாக நோய்கள் தொற்றும்
அதனை வெண்குருதித் துணிக்கைகள் எதிர்க்கும்
அவை கிருமிகளிடம் தோற்றால் நோய் ஏற்படும்!..

இந்தக் கிருமிகள் கண்ணுக்குத் தெரியாதவை
ஆனால் பாரிய நோய்கள் வந்து மரணத்தைத் தரும்
உலகில் பல நோய்கள் உயிர் அழிவை தந்தவை
அதில் கொரோனா மாஜாஜால கிருமி வகையே!..

மஞ்சல்காய்ச்சல் எயிட்ஸ் எபோலா நோய்கள்
கொரோனா கோவிட் ஏழு பிரிவை உள்ளடக்கும்
கொரோனா மாறுபட்ட வடிவங்கள் கொண்டது - இதை
கொல்ல முடியாது தடுக்க முடியும் ஆய்வினர் பதில்!..

வழிதெரியாது அரசுகள் அல்லாடும் இவ் வேளையில்
மனிதர்கள் சுதந்திரமும் கேட்டுப் போராடக் கூடாது
கட்டுப்பாடற்ற சுதந்திரமும் ஒருபோதும் இருக்கக்கூடாது
சுதந்திர ஆர்பாட்டமும் போராட்டமும் தேவையற்றதுவே!..

நோய் வருவது தெரியாதபோது அரசுசட்டத்தைப் போடும்
நாம் கட்டுப்படத் தவறினால் இது மற்றவர்க்குத்தொற்றும்
நம்முடைய சுதந்திரத்தைவிட பிற உயிர்கள் பெரிது
இந்த நோய் துவேசமாய் பரவிட அனுமதிக்கக் கூடாது!..

# கால் நூற்றாண்டு (25) நிறைவு காணும் "இனிய நந்தவனம்" சஞ்சிகை...




அரசியல், சினிமா வாடையின்றி உலக தமிழ் பேசும் வாசகர்கள் மத்தியில் அபிமானம் பெற்றுள்ள சஞ்சிகை. தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து கடந்த 25 வருடமாக வெளிவந்து கொண்டிருக்கிறது "இனிய நந்தவனம்". மக்கள் மேம்பாட்டு மாத இதழ் எழுத்தாளரும் கவிஞருமான நந்தவனம் சந்திரசேகரன் இனிய நந்தவனத்தின் வெளியிட்டாளரும் ஆசியருமாக இருந்து இவ்விதழை வெளியிட்டு வருகிறார்.

பத்திரிகைப் பயணத்தில் கால் நூற்றாண்டைக் கடப்பதென்பது அவ்வளவு எளிதானதன்று. அதுவும் எந்த விதமான பணபலமோ, பின்புலமோ இல்லாமல் ஒற்றை மனிதராய் இருந்து எண்ணற்ற சவால்களைச் சந்தித்து வெற்றிகரமான பத்திரிகையாளராக வலம் வரும் நந்தவனம் சந்திரசேகரனை பாராட்ட வேண்டும். தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், தனித்துவமான அடையாளத்துடன் "இனிய நந்தவனம்" வெள்ளி விழா ஆண்டில் தடம் பதித்திருப்பது பிரமிக்க வைக்கிறது. 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்கு பக்கத்தில் தொடங்கப்பட்ட இனிய நந்தவனம் இன்று 64 பக்கங்களில் திங்கள் தோறும் வெளிவருகிறது.

இனிய நந்தவனத்தின் தனிச்சிப்பு என்னவென்றால், ஒவ்வொரு மாதமும் சிறப்பிதழ்களாக வெளிவருவதேயாகும். அரசியலும், சினிமாவும் இல்லை என்றால் தமிழ்ப் பத்திரிகைகளை வாசகர்கள் மத்தியில் கொண்டு சென்று சந்தைப்படுத்துவது சிரமம் என்ற சூழலில், மேற்கண்ட இரண்டும் இல்லாமலே இனிய நந்தவனம் வெளிவந்து வெற்றி பெற்றிருப்பது வியப்பானதுதான்

மக்களிடம் நல்ல விடயங்களை மட்டுமே கொண்டு செல்ல வேண்டும் என்ற தீர்மானத்துடன் எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் சமரசம் செய்து கொள்ளாமல் தொய்வில்லாமல் வெளியிட்டு வரும் இனிய நந்தவனத்தின் ஆசிரியர் குழுவினரையும் பாராட்ட வேண்டும்.இதுவரையில் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, துபாய், கனடா, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் பற்றிய சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.






# தென்னாப்பிரிக்காவின் நிறவெறி எதிர்ப்பு வீரன் டெஸ்மண்ட் டுட்டு 90 வயதில் காலமானார்..

Desmond Tutu (07.10.1931 - 26.12.2021)

தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களில் ஒருவரும் அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான பேரயார் டெஸ்மண்ட டுட்டு அவர்கள் தனது 90வது வயதில் (26.12.2021) காலமானார். நிறவெறி எதிர்ப்பு சின்னமான நெல்சன் மண்டேலாவுடன் போராடிய சமகாலத்தவர். தென்னாப்பிரிக்காவில் 1948 முதல் 1991 வரை கறுப்பின பெரும்பான்மையினருக்கு எதிராக வெள்ளை சிறுபான்மை அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்ட இனப் பிரிவினை மற்றும் பாகுபாடு கொள்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இயக்கத்தின் உந்து சக்திகளில் ஒருவராக இருந்தார்.

டுட்டுவின் மரணம் தென்னாப்பிரிக்காவின் கடைசி நிறவெறி காலத்தின் ஜனாதிபதியான எ.்.ப்.டபிள்யூ டி கிளார்க் தனது 85 வயதில் காலமான சில வாரங்களுக்குப் பிறகு நடந்துள்ளது. நிறவெறி முறையை ஒழிப்பதற்கான போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்கிற்காக 1984 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

உள்ளூர் மற்றும் உலகளவில் அநீதிக்கு எதிரான போராட்டங்களுக்கு டுட்டுவின் பங்களிப்புகள் மனித சமூகங்களுக்கான விடுதலை எதிர்காலத்தை உருவாக்குவது பற்றிய அவரது சிந்தனையின் ஆழத்துடன் மட்டுமே பொருந்துகின்றன தென்னாபிரிக்காவின் விடுதலையைப் பெற்றுத்தரப் போராடியர் பேராயர் டெஸ்மண்ட டுட்டு. இவரின் இழப்பு ஒரு தேவாலயத்தின் மரணம். சிறந்த தென்னாப்பிரிக்கர்களின் தலைமுறைக்கு நமது நாட்டின் பிரியாவிடையின் மற்றொரு அத்தியாயத்தைக் குறிக்கிறது என்றார். டுட்டு ஒரு சின்னமான ஆன்மீக தலைவர், நிறவெறி எதிர்ப்பு ஆர்வலர் மற்றும் உலகளாவிய மனித உரிமை பிரச்சாரகர் என்பது சிறப்பாகும்.

## ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது..

-ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம் - மகாத்மா காந்தி..
-தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தாராம் - ஜவஹர்லால் நேரு...
-என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகிறதென்றாராம் -பெட்ரண்ட்ரஸல்...
-மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் என பதிலளித்தார் -ஆல்பர்ட்ஐன்ஸ்டீன்...
-வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் -நெல்சன்மண்டேலா...
-பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி லெனின் கூறிட குவிந்த புத்தகங்கள் பல லட்சம்...
-ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகம் வாங்குவாராம் -சார்லிசாப்லின்..
-ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் -வின்ஸ்டன்சர்ச்சில்...
-பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்டபோது புத்தகங்கள்தான் என்றாராம் -மார்டின்லூதர்கிங்...
-தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்புவரை வாசித்துக்கொண்டே இருந்தாராம் -பகத்சிங்...
-நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன். -ஆபிரகாம்லிங்கன்...
-ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி -ஜூலியஸ்சீசர்...
-உலக வரைபடத்திலுள்ள மூலை முடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல்.. -டெஸ்கார்டஸ்...
-போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா?.. ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு.. -இங்கர்சால்...
-சில புத்தகங்களை சுவைப்போம்.. சிலவற்றை அப்படியேவிழுங்குவோம்.. சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்! -பிரான்சிஸ்பேக்கன்...
-புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிடபெரிய ஆயுதங்கள் புத்தகங்களே! -லெனின்...
-உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை! -ஆஸ்கார் வைல்ட்...
-உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு! -சிக்மண்ட்ப்ராய்ட்...

# மூத்த எழுத்தாளர் சாகித்திய ரத்னா தெணியானுக்கு 80 வயது!.. (06.01.1942)





## வடபுலத்தின் ஆத்மாவை இலக்கியமாக்கிய எழுத்தாளர் தெணியான்

-முருகபூபதி-

கந்தையா நடேசன் என்ற இயற்பெயரைக் கொண்டவரான எழுத்தாளர் தெணியான் அவர்களுக்கு 80 வயது. (6.1.2022) வடமராட்சி பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்கு 06-01-1942 இல் பிறந்த அவர், இலக்கிய உலகில் பிரவேசித்ததும் தெணியான் என்ற பெயரில் எழுதத்தொடங்கியவர்.

தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள தெணியான் மற்றும் ஒரு மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

நூற்றியம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகள், பலநாவல்கள் உட்பட சில விமர்சனக் கட்டுரைத் தொகுதிகளையும் தமிழ் இலக்கியத்திற்கு வரவாக்கியிருக்கும் தெணியானின் "பாதுகாப்பு" என்ற சிறுகதை யாழ்ப்பாணம் "ஜீவநதி" சஞ்சிகையில் வெளிவந்து, தற்போது இலங்கைப் பாடசாலைகளில் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ் பாட நூலிலும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளியான "விவேகி" இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை பிணைப்பு வெளியானது. அதனைத் தொடர்ந்து, "மல்லிகை", "ஞானம்", "யாழ்". "முரசொலி," "வீரகேசரி", "தினக்குரல்" , "ஜீவநதி" உட்பட பல சஞ்சிகை இதழ்களில் அயராமல் தொடர்ந்து எழுதியிருப்பவர்.

இவருடைய "கழுகுகள்" (நாவல்) "சொத்து" (சிறுகதைத்தொகுதி) "குடிமைகள் (நாவல்) என்பன தமிழ்நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான "நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச் மற்றும் கருப்பு பிரதிகள் வெளியீடுகளின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கிய காலத்தில், யாழ்ப்பாணக்கிளையின் செயலாளராகவும் ஆக்கபூர்வமாக செயற்பட்ட தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மகாண அமைச்சுப்பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவை - தமிழ்நாடு "சுபமங்களா" இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான "சாகித்திய ரத்னா" விருதும் பெற்றிருப்பவர்.

இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர். தான் கல்வி கற்ற, ஆசிரியப்பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும், மல்லிகை ஜீவாவின் ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல் நூல் ஆகியவற்றினதும் தொகுப்பாசிரியருமாவார். கனடாவில் வதியும் தெணியானின் தம்பி க. நவம் நடத்திய நான்காவது பரிமாணம் இதழின் சார்பில் வெளியான "மரக்கொக்கு" நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடபிரதேசத்தில் அடிநிலை மக்களுக்காக ஓயாது குரல் கொடுப்பதற்காக எழுதிவந்திருக்கும் தெணியான், அம்மக்களின் ஆத்மாவை வெளிப்படுத்தும் அதிகமான சிறுகதைகளையும் எழுதியிருப்பவர். அதேசமயம் ஆலயங்களில் பூசகர்களாக பணியாற்றும் அந்தணர்களின் உரிமைகளுக்காகவும் எழுதியவர். அம்மக்களின் துயரம் தோய்ந்த கதையை "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" என்ற தலைப்பில் நாவலாக்கியிருக்கும் தெணியான், "ஏதனம்" என்ற நாவலையும் வித்தியாசமாக படைத்திருப்பவர்.

"ஏனம்" என்ற சொல் பேச்சுவழக்கில் ஏதனம் என்றே மக்கள் மத்தியில் சொல்லாடலாக இருந்துவருகிறது எனத்தெரிவித்துள்ளதுடன், இல்லங்கள் தோறும் நித்திய பயன்பாட்டுக்குரியதாக புழங்கும் பாத்திரமே ஏதனம். இங்கு பானங்கள் அருந்தக்கொடுக்கும் பாத்திரம் ஏதனம் எனக்குறிப்பிடப்படுகிறது. பேச்சுமொழியில் மாத்திரமன்றி, செம்மொழி வழக்கிலும் தமிழில் இடம்பெற்றுள்ள ஒரு சொல்" என்றும் பதிவுசெய்துள்ளார்.

தமிழ் நாவல் இலக்கியத்தில் தெணியானின் ஏதனம் கவனத்திற்குரிய படைப்பாகும். இதனை இலங்கையில் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியிட்டுள்ளது. 1964 முதல் ஏறக்குறைய ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அயராமல்

இலக்கியப்பிரதிகளை எழுதிவரும் தெணியானுடைய மணிவிழாக்காலத்தில் ( 2003 ஆம் ஆண்டில் ) பல இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலும் வெளிவந்திருக்கிறது. "ஜீவநதிச்சிறுகதைகள் " ஆகியனவற்றை யாழ். ஜீவநதி கடந்த 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டமை குறிப்பிடத்தகுந்தது.

அத்துடன் 2017 இல் ஜீவநதி, தெணியான் பவளவிழா சிறப்பிதழும் வெளியிட்டது. இலங்கையில் "மல்லிகை", "ஞானம்", கனடா "காலம்" முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டி கௌரவித்துள்ளன.

எண்பது வயதை அடைந்திருக்கும் எமது இலக்கிய உலகின் மூத்த சகோதரன் தெணியான் அவர்களுக்கு கடல் கடந்த தொலைவிலிருந்து வாழ்த்துக்கூறுகின்றேன். இவரது பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலக்கிய ஆர்வலர்கள் தெணியானுக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளனர். வாழ்க நூறண்டுகள் என வாழ்த்துவோம்!...

---

## கொரோனா செய்திகள் சில...

**இலங்கை:-**

-31.12.2021வரை இலங்கையில் கொரோனா மரணங்கள் 15.019 பேர் தொற்று 5.87.000 பேர் என சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

-ஏற்றுமதி-இறக்குமதி, ஆடை உற்பத்தித்துறைகளில் கடமைபுரிந்த 1.50.000 பேர் கொரோனா தாக்கத்தால் வேலை இழந்துள்ளனர். பொருளாதார இழப்பு அதிகரிப்பு.

**உலகம்:-**

கொரோனா தொற்றினால் கடந்த 2 வருடங்களில் உலகில் 80.000 - 1.80.000 வரையிலான சுகாதாரத்துறையினர் பலியாகியிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

-கோவிட்-19 தடுப்பூசி வியாபாரத்தின் மூலம் பைசர், பையோன் என்டெக், மொடேர்னா ஆகிய மருந்து நிறுவனங்கள் கூட்டாக ஒவ்வொரு செக்கனுக்கும் 1.350 டொலர்களை இலாபம் ஈட்டுகின்றன என்று மக்கள் தடுப்பூசி கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

-கிரேக்க நாட்டில் தடுப்பூசி போடாதவர்களுக்கு 113 டொலர் அபதாரம் விதிக்க அரசு தீர்மானித்துள்ளது.

-அமெரிக்காவில் தினம் சராசரியாக கொரோன தொற்று 1 லட்சத்தையும் தாண்டியுள்ளது. இறப்பும் நாளுக்குநாள் அதிகரிப்பு.

-உலக நாடுகளில் பரவிவரும் புதியவகை ஓமிக்ரோன் கொரோனா தாக்கத்தால் பல நாடுகளில் தொற்றும் உயிரிழப்பும் அதிகரித்து வருகின்றது.

31-12-2021 அன்றுவரை உலகில் தொற்று 288 மில். பேர். இறப்பு 5.44 மில்.பேர்.

# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center
# හින්දු ඇන්පකැම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
**Parentless Children Pity Rescue, Protect Them.**

பதிவு இல: NP/30/23/04/02
NEP/DS/V/SS/111
Reg No : HA/04/V/24

E – mail
hinduanpakam@gmail.com

2ம் கட்டை, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

தொ.இல : 0094 024-2223683
T.P. : 0094 0776143628

2nd Mile Post, Mannar Rd,
Veppankulam, Vavuniya.

President
**Miss.K.Jeyarany**

Vice Presidents
**Mr.K.Kirupagaran**
**Mrs.S.Rajini**

Secretary
**Mrs.S.Niranjana**

Treasurer
**Mr.M.Kathirkamarajah**

Asst Secretary
**Mr.G.Sriskantharajah**

Asst Treasurer
**Mrs.T.Rathimalar**

Board of Members
**Mr.S.Sabanathan**
**Mr.M.S.Selvarajah**
**Mr.T.KuruKulasingam**
**Mr.K.Uthayakumar**
**Mr.S.Santhirakumar**
**Mr.K.Kanesarajah**
**Mr.E.Tharmapalan**
**Mr.M.Jegan**
**Mr.S.Raveendran**
**Mrs.K.Santhiraleela**
**Mrs.J.Thadsayini**
**Mrs.S.Nirmala**

Patron
**Mr.V.S.Thevarajah**
**Mr.Dr.Ramachchandran**
**M.S.Subramaniyam**

Bank / A/c / details
032020254291
Hatton National Bank
Vavuniya

Contact
024 222 3683
077 6143628

E.Mail
hinduanpakam@gmail.com

திரு.V.சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.
06.12.2021.

அன்புடையீர்,

நாம் அனைவரும் இறைவனின் ஆசியுடன் நலமுடனே உள்ளோம். தங்கள் நலத்திற்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம். தாங்கள் தொடர்ந்து எமது இல்லச்சிறார்களின் வளர்ச்சிக்காக உதவிபுரிந்து வருவதற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் தாங்கள் எமது வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்த ரூபா 43,9471.75 இனை 19.11.2021 அன்று பெற்றுக்கொண்டோம். அத்துடன் அதற்கான பற்றுச்சீட்டினையும் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கின்றோம்.

நன்றி,

இங்ஙனம்,

தலைவர்
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்,
வேப்பங்குளம்,
வவுனியா.


இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them
HINDU ANPAGAM
Veppankulam, Vavuniya - Sri Lanka
T.P : 024-2223683
திகதி 19/11/2021
திரு/திருமதி/செல்வி
விபரம்
நடை பெறும் திகதி
பணம் ரூபா
நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.
2399
இங்ஙனம்
பொறுப்பாளர்
ரூபா: 43,947.75

# 2021ம் ஆண்டில் 17 லட்சத்து 56 ஆயிரம் ரூபாக்கள்

## (8.024-96 யூரோ)

## "மண்" சஞ்சிகையின் வாசகர்கள் நலன்விரும்பிகளின் மனிதநேயப்பணிகள்..

"மண்" கல்வி கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையானது கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தாயகத்தின் நலிந்தோருக்கான உதவும் மனிதநேயப் பணிகளை மேற்கொண்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அந்த வகையில் சென்ற ஆண்டு மட்டும் (8.024-96 யூரோ) (17.56.772-50 ரூபா) பதினேழு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுநூற்றி எழுபத்திரண்டு ரூபாக்களை தாயகத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பி துயர்போக்கும் நற்பணிகளை மேற்கொண்டிருக்கின்றது. நிதிப்பங்களிப்பு செய்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றிகலந்த பாராட்டுகள்!.. விபரங்களை நீங்களும் அறிந்து கொண்டு உதவிக்கரங்களை நீட்டுங்கள்.

பணம் அனுப்பிய விபரங்கள்...

| | | |
|---|---|---|
| **வவுனியா மாவட்டம்..** | யூரோ | - ரூபா |
| (1) "அன்பகம்" சிறுவர் காப்பகம் | - 1200-00 | - 2.66.533-83 |
| (2) அகிலாண்டேஸ்வரி "அருளகம்" | - 960-00 | - 2.10.698-38 |
| (3) "அட்சயம்" கல்வி, சமூக மேம்பாட்டு நிறுவனம் | - 317-16 | - 70.000-00 |
| **முல்லைத்தீவு மாவட்டம்..** | | |
| (4) "ஒளிரும் இல்லம்" மாற்றுத் திறனாளிகள் நிறுவனம் | - 1.120-08 | - 2.46.563-51 |
| **மன்னார் மாவட்டம்..** | | |
| (5) செபமாலை இரக்கத்தின் இல்லம் சிறுவர்பராமரிப்பு இல்லம் | - 668-15 | - 1.54.200-00 |

**திருகோணமலை மாவட்டம்..**

(6) ஸ்ரீ சண்முகா மகளிர் இல்லம் - 480-00 - 1.01.721-23

**மட்டக்களப்பு மாவட்டம்..**

(7) திருஞானசம்பந்தர் குருகுலம் - 480-00 - 1.02.586-95
(8) "உதவும்கரங்கள்" சமூகஅமைப்பு - 350-00 - 71.785-00

**யாழ்ப்பாண மாவட்டம்..**

(9) கந்தையா-கனகம்மா நிதியம்
கல்வி, சமூக நிறுவனம்-நாவற்குழி - 226-75 - 50.000-00
(10) தென்மராட்சி சர்வதேச ஒன்றியம் - 182-12 - 40.000-00
(11) வலுவிழந்தோர் வாழ்வகம்
திருநெல்வேலி - 350-00 - 71.453-50

**இரத்தினபுரி மாவட்டம்..**

(12) தமிழர்பண்பாட்டு மையம் இலங்கை
மலையக ஐக்கிய சமூகநிறுவனம்- 1.690-70 - 3.71.230-10

..............................................

**மொத்தம் 8.024-96 - 17.56.772-50**

..............................................

-எமது சஞ்சிகையின் 7 வாசகர்கள் தாயகத்தின் சிறுவர் இல்லங்களிலுள்ள (7) பிள்ளைகளை தத்தெடுத்து வருடாவருடம் நிதி உதவி செய்துவருகிறார்கள். அதாவது இப்பிள்ளைகளுக்காக ஒவ்வொருவரும் வருடாவருடம் (480-00 யூரோ) ஒரு லட்சம் ரூபாக்களை வழங்கி வருகிறார்கள்..

7 பேர் X 480.00 -3.360-00

-கல்விச்செலவுக்காக
அன்பளிப்பு 2பேர்- - 460-00 - 3.820-00 - 8.36.249-76

-2021 ஏனைய அன்பளிப்புகள் - 4.204-96 - 9.20.522-74

..............................................

**மொத்தம் 8.024-96 - 17.56.772-50**

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00

07. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00

10. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

11. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

# 2021 டிசம்பர் மாதம் அன்பளிப்புகள்!..

## நத்தார் + தைப்பொங்கல் + பிறந்தநாள் நன்கொடைகள்!..

தாயக உதவும் பணிகளுக்காக நம்மால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று பெருமனத்தோடு அன்பளிப்புகளை வழங்கிய மனிதநேய உள்ளங்கள் அனைவருக்கும் அன்பான நன்றிகளும் பாராட்டுகளும். சேகரிக்கப்பட்ட பணம் தாயகத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தோம். விபரங்களை 73, 74 பக்கங்களில் பார்க்கலாம்..தொடரும் மண் சஞ்சிகையின் பணிகளோடு நீங்களும் இணைந்து ஆதரவுக் கரங்களை தாருங்கள்!..நன்றி!..

**அன்பளிப்பு விபரம்:-**

| | | | |
|---|---|---|---|
| 01-திரு ஜெயம் தங்கராசா | - Netharland | -500-00 | யூரோ |
| 02-திரு சுந்தரேஸ்வரன் கணேஸ்வரன் | - Essen | -500-00 | |
| 03-திரு சின்னையா வேலும்மயிலும் | - München | -100-00 | |
| 04-திரு ப. பசுபதிராசா | - Wuppertal | -100-00 | |
| 05-திரு பொ.மகாலிங்கம் | - Oberhausen | -100-00 | |
| 06-திரு சி சிவஞானம் | - London | -100-00 | |
| 07-திரு க பொன்னுத்துரை | - Hannover | -100-00 | |
| 08-செல்வன் நிதர்சன் நேசராசா | - Oberhausen | -100-00 | |
| 09-திருமதி இராஜேஸ்வரி சிவராசா | - Duisburg | -100-00 | |
| 10-திருமதி கலைவாணி ஏகானந்தராசா | - Weeze | - 80-00 | |
| 11-திருமதி லோகாஞ்சனா அருந்தவநாதன் | - Oberhausen | - 80-00 | |
| 12-செல்வன் துவாரகள் ஞானசம்பந்தன் | - Ratingen | - 50-00 | |
| 13-செல்வி சாமினா சிவதாசன் | - Essen | - 50-00 | |
| 14-செல்வி யசிக்கா ஜெயந்தன் | - Oberhausen | - 50-00 | |
| 15-திருமதி கலா பத்மநாதன் | - Haltern | - 50-00 | |
| 16-ஓர் அன்பர் | - Dortmund | - 50-00 | |
| 17-திருமதி நகுலா சிவநாதன் | - Selm | - 30-00 | |
| 18-செல்வன் கபிலன் அக்ஷயன் | - London | - 25-00 | |
| 19-செல்வன் அஷ்வீரன் அருண்ராம் | - London | - 25-00 | |
| | | ............... | |
| மொத்த வரவு | | - 2.190-00 | |

மறுபக்கம் பார்க்க...

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-09-2021 (மேலதிகச் செலவு) - 710-60

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen + 480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற வருடாந்த அன்பளிப்பு)-------------------------

960-00 + 960-00

--------------

+ 249-40

08. திருமதி யோபினா நிசான் யோகநாதன் -Goch + 183-80
(பிறந்தநாள் அன்பளிப்பு)
09.திரு சிவலிங்கம்ராஜா -Buenda + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)
10. திருமதி ஜெயா நடேசன் - Havixberg + 20-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

73ம் பக்க விபரங்களின்படி 2021 டிசம்பர் மாதம் நத்தார்,
தைப்பொங்கல், பிறந்தநாள் அன்பளிப்புகள் (19 பேர்) + 2.190-00

------------------

+ 2.693-20

-மீதி + 2.693-20

அனுப்பியது..

| | யூரோ | ரூபா |
|---|---|---|
| 1-திருகோணமலை மாவட்டம் | | |
| ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம் | - 480-00 | - 1.01.721-23 |
| 2-இரத்தினபுரி மாவட்டம்:- | | |
| ஐக்கிய சமூக அமைப்பு மலையகம் | - 500-00 | - 1.05.055-00 |
| 3-மட்டக்களப்பு மாவட்டம்:- | | |
| உதவும் கரங்கள் அமைப்பு | - 350-00 | - 71.785-00 |
| 4-யாழ்ப்பாண மாவட்டம்:- திருநெல்வேலி | | |
| -வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் | - 350-00 | - 71.453-50 |
| 5-யாழ்ப்பாண மாவட்டம் - சாவகச்சேரி | | |
| தென்மராட்சி அனைத்துலக நிறுவனம் | - 182-12 | - 40.000-00 |
| 6-முல்லைத்தீவு மாவட்டம் | | |
| ஒளிரும் இல்லம் - துணுக்காய் | - 350-00 | - 73.141-00 |
| | 183-80 | - 50.000-00 |
| 7-வவுனியா மாவட்டம்:- | | |
| "அட்சயம்" கல்வி சமூக அமைப்பு | - 226-80 | - 50.000-00 |
| 8-மன்னார் மாவட்டம்:- தலைமன்னார் | | |
| செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம் | -95-21 | - 20.000-00 |
| | - 2.717-93 | - 5.83.155-73 |

"மண்" சஞ்சிகை கணக்கு வங்கிவரி:--

01.011.2021 - 30.11.2021 - 16.98

01.12.2021 - 31.12.2021 - 22.58 - 39-56

2.757-49 - 2.757-49

மிகுதி கையிருப்பு 31-12-2021 (மேலதிகச் செலவு) - 63-69

## அன்பான வாசகர்களே!..

நமது தாய்நாட்டின் ஏழைமக்களின் பொங்கலுக்காக 2021 டிசம்பர் மாதம் பலர் பெரும் நிதி உதவிகைளை அள்ளி வழங்கி இருந்தனர். அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்!.."சிறுதுளி பெரு வெள்ளம்" -நன்றி!..

**ஒளிரும்வாழ்வு அமைப்பு - துனுக்காய்**
**ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි**
**Olirumvaalvu Organization - Thunukkai**

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0774868085 Farm No:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085 திகதி 05/01/2022

திரு வைரமுத்து சிவராசா

பிரதம ஆசிரியர்

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஜேர்மனி

**நன்றி நவில்கிறோம்**

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவின் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்கள் சமூக நலன்நோக்கிய நற்சிந்தனையுடன் ஒழுங்கமைப்பு செய்த 350-00யூரோ நிதி உதவியினை பயன்படுத்தி செல்வன் நிதர்சன் நேசராசன் அவர்களின் பிறந்தநாள் நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் முதியோர் மற்றும் விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களிற்கு சிறந்த மதிய உணவு வழங்கியதுடன் பாடசாலை சிறுவர்கள் விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களுடன் இணைந்து கேக் வெட்டி மகிழ்ந்து சிற்றுண்டிகள் மற்றும் பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டது. அத்துடன் தைப்பொங்கல் நிகழ்விற்குரிய பொங்கல் பொதிகள் கொள்வனவு செய்து மிக வறிய குடும்பங்களையும் தெரிவு செய்துள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். தொடர்ந்து தங்கள் குழுமத்தினரின் இவ்வாறான ஏற்பாடுகளால் எமது அமைப்பின் பயனாளிகளிற்கு சிறந்த முறையில் உதவிகளை வழங்கமுடிகிறது என்பதை பெருமகிழ்வுடன் தெரிவிப்பதோடு ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பான இதயபூர்வமான நன்றிகளையும் தெரிந்துக்கொள்கிறோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துனுக்காய்

**ஒளிரும் வாழ்வு அமைப்பு - துனுக்காய்**
**Olirumvaalvu Organizaions - Thunukkai**
Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com

T.P:021 206 0620
Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

பற்றுச் சீட்டை திகதி 31/12/2021

பெயர்:- மண்சஞ்சிகை தொ.இல

முகவரி:- ஜேர்மனி


விபரம்:- [illegible]

தொகை எழுத்தில்:- [illegible] மட்டும் பெற்றுக்கொண்டேன்.

ரூபா 73141/2 1380

பணம் வழங்கியவர் ஒப்பம் பொருளாளர் ஒளிரும் வாழ்வு அமைப்பு பொருளாளர் ஒப்பம்

www.olirumvaalvu.com  olirumvaalvuthunukkai2012@gmail.com  olirumvaalvu thunukkai



Already sent by E Mail

திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை

THIRUGNANASAMPANTHAR KURUKULAM - KALUTHAVALAI

(CHILDREN'S HOME - M.K.& E PATTU)

Kaluthavalai

Sri Lanka.

T.P: 065 2250277

A/C. No.: 6859914

BOC, Kaluwanchikudy

**கற்பதால் உயர்வோம்! காலத்தை வெல்வோம்!!**

**கந்தையா கனகம்மா நிதியம்.**

கோவிலாக்கண்டி மேற்கு,
தச்சன்தோப்பு.

காப்பாளர்:
கந்தையா மயில்வாகனம்

23, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்
திகதி : 30-12-2021

வ.சிவராசா,

பிரதம ஆசிரியர்,

மண் சஞ்சிகை,

யேர்மனி.

ஐயா!

**நன்றி தெரிவிக்கின்றோம்.**

நீங்கள் அனுப்பியிருந்த உதவித் தொகை ( 50000/= ) ஐம்பது ஆயிரம் ரூபா இன்று ( 30.12.2021 ) கிடைக்கப்பெற்றோம். மிக்க நன்றி. வழமை போலவே மாணவர்களின் கற்றல் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றோம். ஊக்குவிக்கின்றோம். எம்மை ஊக்குவித்த உங்களுக்கும் இந்த புனிதப் பணியில் உங்கள் இணைப்பில் எம்முடன் இணைந்தவர்கள் அனைவருக்கும் இறையாசியும் ஆரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளும் வாழ்வும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். முகம்பார்த்துக் கொடுப்பதும் முகமனுக்காகக் கொடுப்பதும் கொடையல்ல, முகம் தெரியாதவர்களின் வாழ்வை மேம்படச் செய்யத் தருவதே தானம் அறமும் தர்மமுமாகும்.

அன்புள்ளங்கள் பலரையும் இணைத்துக் கொண்டு, உலகளாவிய ரீதியில் உதவி தேவைப்படுபவர்களுக்குச் சேவை செய்து வரும் நீங்கள் பல்லாண்டு ஆரோக்கியமாக வாழவேண்டும். இறையருள் வேண்டும்.

**நல்லன எண்ணுவோம், நல்லனவே நிகழும்.**

தங்கள் சேவையில் இணையும்,

கோவிலாக்கண்டி மேற்கு
தச்சன் தோப்பு
திரு. க. கந்தையா
திருமதி. க. கனகம்மா
நினைவு நிதியம்

( க.மயில்வாகனம். )
காப்பாளர்
கந்தையா கனகம்மா நிதியம்.

Association for Rehabilitation of the Disabled (AROD)
47/2, Adiyapatham Road, Thirunelvely North, Jaffna,
வலுவிழந்தோர்புனர்வாழ்வுச் சங்கம்
[Registered No: NEP/SS/15]
47/2,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,யாழ்ப்பாணம்
Web: www.arod.org.lk
TP No: 021 221 5925, 021 321 7718
E-mail: arodinjaffna@gmail.com

உ

கௌரவ வைரமுத்து சிவராசா அவர்கட்கு
பிரதம ஆசிரியர்
"மண் சஞ்சிகை "
26. 01. 2022

அன்புடையீர்

## அனுப்பப்பட்ட பண செலவு விபரம்
## தங்கள் கோரிக்கைக்கு அமைய

தங்களால் வங்கிக்கு அனுப்பப்பட்ட 350 யுரோ இலங்கை பணத்திற்கு Rs. 71453.50 சதம் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

இந்த கணக்கு விபரம் 02. 01. 2022ம் திகதி நடைபெற்ற 249வது நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சபையினர் சங்கத்தில் தற்போது தங்கியிருந்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 10 பிள்ளைகளுக்கு தலா ரூபாய் 3000.00 க்கு பொங்கல் புத்தாடைகள் வாங்கி வழங்குமாறும் மிகுதிப் பணம் பிள்ளைகளின் அன்றாடைய உணவு தேவைகளுக்கு பயன் படுத்தலாமென் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிரகாரம்

| | |
|---|---|
| 10 பிள்ளைகள் ஆடைச் செலவு 10 x 3000.00 | 30000.00 |
| மிகுதி உணவு தேவைக்கான பணம் | 41453.50 |
| மொத்த தொகை | 71453.50 |

தைப்பொங்கல் அன்று புத்தாடைகள் அணிந்து சங்க முன் புறத்தில் வைத்தியக் கலாநிதி. ந. சிவராஜா மகள் பேராசிரியர் மீனா செந்தில்நந்தனன்னுடன் பிள்ளைகள் நிற்கும் படம் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வலுவிழந்தோர் சேவையில்

நன்றி

நிர்வாக உத்தியோகத்தர்.

Association for Rehabilitation of the Disabled
(AROD)
47/2, Adiyapatham Road
Thirunelvely North
Jaffna - Sri Lanka

ADMIN 2

# தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள் விபரத்திரட்டு!...
# யேர்மனிய தமிழ்ப்பெண்களுக்கு அரிய வாய்ப்பு!..




யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல்இதுவரை காலமும் எவராலும் தயாரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லைஎன்பது துர்அதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள்,கல்விப்பணிகள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பணிகள்,சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும் தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின்கட்டாயாகும்.

யேர்மனியில் வாழ்ந்துவரும் தமிழ்ப்பெண்களில் பல பெண்கள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், இலக்கியவாதிகள்,பேச்சாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வகை ஆளுமை மிக்கவர்களாகக் காணப்படுவது சிறப்பான அம்சமாகும்.எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப்பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில்,ஆவணப்பதிவு ஒன்றைத்தயாரித்து நூலாக உருவாக்கும் பணியில் ஈடுபட்வருகிறோம்.

நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால் இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.காலம் தாழ்த்தாது விரைவாகத் தங்கள் தகவல்களை அனுப்பி உதவலாம்... நன்றி!..

**திருமதி சாந்தினி துரையரங்கன்.** Essen - Germany.
மின்னஞ்சல் niruthiyam@hotmail.de "மண்"சஞ்சிகை" v.sivarajah@arcor.de

(இதுவரை (8) எட்டுத் தமிழ்ப் பெண்களின் விபரங்கள் வெளிவந்துவிட்டன)















''மண்'' சஞ்சிகையின் வாசகர் நிதர்சன் நேசராசன் அவர்களின் பிறந்தநாள் (05.01.2022) அன்று அவர்களின் நிதி உதவியில் முல்லைத்தீவு மாவட்டம் - துணுக்காயிலுள்ள ஒளிரும் இல்லத்தின் மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு சிற்றுண்டி, மதிய உணவு, பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 211




## இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துகள்!....

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |